விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 06 வியாழக்கிழமை (21.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 215

## 4 மாணவர்கள் மீது சிசிதரன் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சிசிதரனால் பெரும்பான்மையின மாணவர்கள் 4 பேருக்கு எதிராக நேற்றைய தினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் மாணவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக மாணவர்களின் பாதுகாப்பு கருதி பல்கலையின் கற்றல் செயற்பாடுகள் நிறு

24ஆம் பக்கம் பார்க்க....




# யாழ்.பல்கலை மோதல் உருவாக
# தமிழ் மாணவர்களே காரணம்!
## வடக்கு ஆளுநர் கூரே கொழும்பில் தெரிவிப்பு



(கொழும்பு)

**பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களுக்கும் சம உரிமை வழங்கப் பட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் கண்டிய நடனம் குறித்த விடயத்தை தமிழ் மாணவர்களே எதிர்ப் புடன் அணுகி பிரச்சினையாக அதை முதலில் உரு வாக்கினார்கள் என வட மாகாண ஆளுநர் றெஜி னோல்ட் கூரே கொழும்பில் தெரிவித்துள்ளார்.**

யாழ்.பல்கலைக்கழக மோதல் சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியளாலர் சந்திப்பு ஒன்று நேற்று கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள வட மாகாண ஆளுநரின் இல்லத்தில் நடைபெற்ற போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சம்பவத்தின் ஊடாக நாட்டின்

23ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்றம் குறித்து ஆராய ஐவர் கொண்ட விசேட குழு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறும் பொறிமுறை குறித்து ஆராய சட்டத்தரணிகள் மட்டத்திலான ஐவரைக் கொண்ட விசேட குழு நியமிக்கப்படவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உபதலைவர் சாலிய பீரிஸ் குறிப்பிடுகையில்,

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறும் பொறிமுறை இலங்கையில் அரசியலமைப்புக்கு உட்பட்டதாக அமைய வேண்டும் என்

23ஆம் பக்கம் பார்க்க....

## இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன

(கரணவாய்)

வவுனியாவில் குளம் ஒன்றில் இருந்து முதியவரின் சடலமும் வடமராட்சி குடத்தனைப் பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் சடலமும் நேற்று புதன்கிழமை நண்பகல் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நாகர்கோவில் குடாரப்பைச் சேர்ந்தவரும் தற்போது குடத்தனை

23ஆம் பக்கம் பார்க்க....

## ஒற்றையாட்சிக்குள் தீர்வு என சம்பந்தன், சுமந்திரன் ஏமாற்று!
### த.தே.ம முன்னணி சாடல்

(யாழ்ப்பாணம்)



தமிழ் மக்களுக்கு ஒற்றையாட்சிக்குள் உறுதியற்ற தீர்வை பெற்றுத்தரவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், அதன் ஊடக பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனும் ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு கதைகளை கூறி வருவதாக தெரிவித்துள்ள

23ஆம் பக்கம் பார்க்க....

### கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில்
## பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர் சட்டத்தரணிகளுடன் நீதிமன்றில் சரண்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவரை கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டிருந்த நிலையில், குறித்த மாணவர் நீதிமன்றில் சட்டத்தரணிகளுடாக நேற்றைய தினம் சரணடைந்துள்ளார்.

சரணடைந்த மாணவனை இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல யாழ்.நீதவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

எனினும் குறித்த மாணவனுக்கு பிணை அனுமதி வழங்குவதற்கு பொலிஸ் தரப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்த போதிலும், நீதவான் பிணை அனுமதி வழங்கியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் நடைபெற்றது.

23ஆம் பக்கம் பார்க்க....

## #அழுத்தம் #திணிப்பு #மோதல் விசாரணைக்குழு ஆராய வேண்டும்
### வடக்கு மாகாணசபை வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்து ஆக்கபூர்வமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு செயற்படுவதன்மூலமே மாணவர்களின் உண்மையான ஆதங்கங்களை அறிந்து அதனைத தணிப்பதற்கான வழிமுறைகளை ஆராய முடியும் என வடக்கு மாகாணசபை சார்பில் முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 16-ம் திகதி சனிக்கிழமை இடம

24ஆம் பக்கம் பார்க்க....

## 60 கிலோ கேரள கஞ்சா மீட்பு
### ஒருவர் கைது



23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலைக்கழக மோதல் ஒரு திட்டமிடப்பட்ட செயல்!
### விசாரணையை கோருகிறார் விக்கிரமபாகு

(கொழும்பு)



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு இடையில் கடந்த 16-ம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற மோதல் திட்டமிட்ட செயலாகவே இருக்க வேண்டும்.

இது தொடர்பான உண்மைகளை

24ஆம் பக்கம் பார்க்க....

## கோமகன் நேற்று கைதாகி விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதியாகவிருந்து விடுதலை செய்யப்பட்ட மு.கோமகன் ஆலய வழிபாட்டுக்காக இந்தியா செல்ல முற்பட்டபோது கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஆலய வழிபாட்டுக்காக இந்தியா

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**காணி வீடு உடன் விற்பனைக்கு உண்டு**

முல்லைத்தீவு சென்.மேரிஸ் வீதியில் பெறுமதி வாய்ந்த பெரிய வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. (எல்லா வசதிகளுடனும்)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :- 0770469822, 0776737529, 0016479218502

(C-5246)

**காணி விற்பனைக்கு உண்டு**

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு அண்மையில் உள்ள 3 1/2 பரப்பு குடியிருப்பு காணி விற்பனைக்கு உண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :- 0770469822, 0776737529, 004746959255

(C-5245)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தருமரத்தினம் பரமேஸ்வரியம்மா

(ஓய்வுபெற்ற அதிபர்)



அராலி மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி த.பரமேஸ்வரியம்மா நேற்று 20.07.2016 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தருமரத்தினம் அவர்களின் அன்பு மனைவியாரும், துரையப்பா - சின்னத்தங்கம் அவர்களின் அன்புப் புதல்வியாரும், திருமதி சு.மதிவதனா (ஓய்வுபெற்ற ஆசிரியர் - சாகிரா கல்லூரி, கொழும்பு), திருமதி வ.சுந்தரவதனா (ஆசிரியர் - யா/அராலி கிழக்கு அ.மி.த.க பாடசாலை), திருமதி வ.சுகுணவதனா (ஆசிரியர் - யா/அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இ.சுந்தரராஜா (பாதுகாப்பு அதிகாரி - கொழும்பு), காலஞ்சென்ற டானியல் வசந்தகுமார் குரூஸ் (மருந்தாளர்) மற்றும் இ.வசந்தன் (முகாமைத்துவ உதவியாளர் (பண்ணை வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி யோ.துஷாரா (மருத்துவர் - அமெரிக்கா), சு.சுகல்ஜன் (*Service advisor colonial motors - Colombo*), திருமதி கா.நிரோஷா (வங்கியாளர் HNB), சு.பிரவிந் (பயிற்சியாளர் - விவசாய திணைக்களம்), வ.அபிராமி (மாணவி - உயர் தொழில்நுட்பக் கல்லூரி குருநகர்), வ.ஆதித்தன் (மாணவன் - யா/வட்டு இந்துக் கல்லூரி), யோகான் (மென்பொருள் பொறியியலாளர்), ச.கார்த்தீஸ் (வங்கியாளர் HNB It division) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், யோ.அன்ரூ டானியல், கா.ஜெய்டன் ஆகியோரின் அன்பு பூட்டியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2016) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை. தகவல் :- குடும்பத்தினர்

## கந்தையா வைகுந்தராஜா

(பிரபல புகையிலை வர்த்தகர், வைலஜா ஸ்ரோர் உரிமையாளர்)



மண்டைதீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஆடியம்பிட்டி வீதி, சிவன் கோவிலடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வைகுந்தராஜா 18.07.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகலட்சுமியின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தில்லையம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற தையல்நாயகி (தேம்பாள்) அவர்களின் அன்புக் கணவரும், ரஜனிகாந்த் (கனடா), சசிகாந்த் (ஆசிரியர் - வவுனியா றம்மைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), வைலஜா (கனடா), கிந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வைபோகராஜா (வைலஜா ஸ்ரோர்), சச்சிதானந்த சிவலட்சுமி (ராணி), காலஞ்சென்ற நடராஜா மற்றும் விஜயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரியதர்சினி (கனடா), சாம்பவி, சிவரூபன் (கனடா), பரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சகுந்தலாதேவி (பேபி), பேரின்பநாயகம் (குணம்), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தணிகாசலம், தருமநாயகம் மற்றும் நாகேஸ்வரி, கலாமணி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், அஜிஸ், அக்ஷி, அஷ்வத், அதிதி, சைதன்யா, அபர்ணியா, அகித்ஜன், அதிரா, அஜேத்திரா ஆகியோரின் அன்புப் பேரனும், தனுஜா, சரண்யா (கனடா), கஜந்தினி, ஜனனி ஆகியோரின் பெரியப்பாவும், கஜிதா, உபேந்திரன், உஷாங்கன், சபிதா, சங்கீதா, விஜிதா, கிருஷா ஆகியோரின் பெரியமாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.07.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியம்பிட்டி வீதி, சிவன்கோவிலடி, சாவகச்சேரி. (C-5248) தகவல் :- குடும்பத்தினர் 0779912399

## நீங்காத நினைவில் ஆண்டு ஒன்று



தோற்றம் 26 . 08 . 1939

மறைவு 01 . 08 . 2015

திதி-துதியை 21.07.2016

### அமரர் கணபதிப்பிள்ளை அரசரத்தினம்

(சின்னத்தம்பி)

52, கட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

அப்பா!
அந்த வார்த்தைக்கு
இப்போது உயிரில்லை,
எப்போதும் - உங்களை
நினைப்பதாலும் - தப்பாமல்
உங்கள் திருமுகத்தை
படமாக பார்ப்பதாலும்,
தினம் தினம் உங்கள்
கதை பேசுவதாலும் - நீங்கள்
எம்மை விட்டு
பிரிந்த நினைப்பே
எமக்கில்லை அப்பா
அம்மாவைப் பார்த்து
"அப்பா எங்கயம்மா" - என்று
கேட்க நாவெழும் - பின்பு
மனம் சுதாகரித்துக் கொள்ளும்
இப்படியே எங்களுடன் - என்றும்
வாழுங்கள் அப்பா

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(C-5249)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### தர்மலிங்கம் கோபிநாத்

22.07.2016



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தர்மலிங்கம் கோபிநாத் அவர்களின் ஓராண்டு நினைவு,

அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெற்ற 4-ம் வட்டாரம் புதுக் குடியிருப்பில் 22.07.2016 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் இடம்பெறவுள்ள தால் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - மனைவி, மகள்
த.நவநீதன் (சகோதரன்) - 0773748704
த.இன்பநாதன் (சகோதரன்) - 0044759558668

(C-5254)

## இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளன

யாழ். தேர்தல் மாவட்டத்தில் 2015-2016 ஆம் ஆண்டு பெரும்போக இழப்பீட்டு கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான கொடுப்பனவுகள் அவரவர் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக கமத்தொழில் காப்புறுதி சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் து.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


மானிய உரத்திட்டத்தின் கீழ் காப்புறுதி 2015-2016 ஆம் ஆண்டு பெரும்போக இழப்பீட்டு கொடுப்பனவுகளாக யாழ். தேர்தல் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் விண்ணப்பித்திருந்தனர். அவர்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது எமக்கு கிடைத்துள்ள நிலையில் அவரவர் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்த இழப்பீட்டு கொடுப்பனவுக்காக யாழ்.மாவட்டத்தில் உள்ள 6 ஆயிரத்து 140 விவசாயிகள் விண்ணப்பித்திருந்தார்கள். அவர்களில் 5 ஆயிரத்து 735 பேருக்குரிய கொடுப்பனவாக 21.9 மில்லியன் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 648 விவசாயிகள்விண்ணப்பித்திருந்தனர்.

அதில் 434 பேருக்குரிய கொடுப்பனவாக 3.1 மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெற்றுள்ளது. இவர்களுக்குரிய கொடுப்பனவுத் தொகை அவரவர் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பித்தவர்களில் சிலருடைய விண்ணப்பங்கள் குறைபாடு காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆகவே இழப்பீட்டுத்தொகை கிடைக்கப் பெறாதவர்கள் ஒரு மாத காலத்துக்குள் கமநல சேவை நிலையம் அல்லது கமத்தொழில் காப்புறுதி சபையில் மேன்முறையீட்டினை செய்து தமக்குரிய இழப்பீட்டு கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# காணாமற்போனோர் அலுவலகத்தை அமைத்து பாதுகாப்பு தரப்புக்கு துரோகமிழைக்கிறது அரசு

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



(கொழும்பு)

**காணாமற் போனோர் அலுவலகத்தை நிறுவுவதன் மூலம் பாதுகாப்பு தரப்பினருக்கு துரோகம் இழைக்க அரசாங்கம் தயாராகி வருவதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவரது கையெழுத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து அரசியல் மற்றும் பொருளாதார குழப்பங்களுக்கு மத்தியில் அரசாங்கம் காணாமல் போனோர் அலுவலகம் எனும் பெயரில் பணியகம் ஒன்றை அமைக்கும் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது என அவர் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது கடந்த செப்டெம்பர் மாதம் அரசாங்கம் மேற்கத்தைய சக்திகளுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில், வரலாறு தொடர்பில் செயற்பட"நிறுவுவதற்கு இணைக்கம் காணப்பட்டுள்ள நிறுவனங்களில் இதுவும் ஒன்று எனவும் அவர சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், குறித்த சட்டமூல யோசனையில், பாதுகாப்பு படைகளை வேட்டையாட வழங்கப்பட்டுள்ள பிரிவுகள் சில இருப்பதாகவும் அந்த அறிக்கையில் மகிந்த ராஜபக்ஷ மேலும் குற்றம்சாட்டியுள்ளார். (இ)

## இந்திய மீனவர்கள் 22 பேருக்கு ஓகஸ்ட் 3 வரை விளக்கமறியல்

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இராமநாதபுரம் மற்றும் நாகை மாவட்டத்தை சேர்ந்த 22 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் வெ.சிவகுமார் நேறறு முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

22 இந்திய மீனவர்களும் கடந்த மாதம் 15 மற்றும் 23 ஆம் திகதிகளில் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களை அந்தந்த திகதிகளில் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் இவர்கள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-9)

## துன்புறுத்தல்களுக்குள்ளான 15பெண்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

வெளிநாட்டுக்கு பணிப் பெண்களாக வேலை வாய்ப்பு பெற்றுச்சென்று அங்கு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த பெண்கள் 15 பேர் நேற்று மீண்டும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

குவைத்துக்கு வீட்டுப்பணிப்பெண்களாகச் சென்றவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

தாம் சேவைபுரிந்த வீடுகளில் பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்த இந்த பெண்கள், குவைத் தூதரகத்தில் தஞ்சமடைந்தனர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மேற்கொண்ட நடவடிக்கையையடுத்து அவர்கள் நாட்டுக்கு மீண்டும் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாடு திரும்பிய இந்த பெண்கள், தமது வீடுகளுக்குச் செல்ல தேவையான வசதிகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் செய்து கொடுத்துள்ளது. (இ-10)

## ஞானலிங்கேச்சுவரருக்கு இன்று சங்கு திருமஞ்சனம்

(யாழ்ப்பாணம்)

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சிவபூமியான ஈழமணித் திருநாட்டின் யாழ். இணுவையம்பதியிலே அமைக்கப்பட்டுள்ள ஞானலிங்கேச்சுவரர் திருக்கோயில் ஐந்து தளக் கோபுரத்துடன் இராவணேசுவரன் தாங்குகின்ற உள்ளங்கவர் ஞானலிங்கத்தைக் கொண்டமைந்த கருவறையில் செந்தமிழால் நாள்தோறும் வழிபாடியற்றும் திருக்கோவிலாக விளங்குகிறது.

கடந்த 10.07.2016 ஆனி உத்திர திருநாளில் திருக்குடமுழுக்கு கண்ட ஞானலிங்கேச்சுவரப் பெருமானின் சங்குத் திருமஞ்சனம் இன்று வியாழகிழமை நடைபெறும். 1008 சங்குத் திருமஞ்சனம், 36 சிவத்தமிழ் அருட்சுனையர்களால் நடத்தப்படவுள்ளது.

சங்குத் திருமஞ்சனத்தை தொடர்ந்து அருள்மிகு ஞானலிங்கேச்சுவரர் திருக்கோவில் செந்தமிழ் திருக்குடமுழுக்கு பெருவிழா, மலர் வெளியீடும் இடம்பெறும்.

இந்த ஆன்மீக இறையியல் நிகழ்வுகளில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

## சுற்றுச்சூழல் செயற்றிறன் சுட்டியில் இலங்கைக்கு 108 ஆவது இடம்

(கொழும்பு)


பூகோள சுற்றுச்சூழல் செயற்றிறன் சுட்டியில் (Environmental performance index) இலங்கை 108 ஆவது இடத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் செயற்றிறன் சுட்டி,180 நாடுகளை உள்ளடக்கியதாக அமெரிக்க் பல்கலைக்கழகத்தினால்ஆண்டு தோறும் வெளியிடப்படுகிறது.

இந்தப்பட்டியலில், இலங்கை 108ஆவது இடத்தில் உள்ளது. தெற்காசிய நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது.

இந்தப்பட்டியலில், பின்லாந்து, ஐஸ்லாந்து. சுவீடன், டென்மார்க், சுலோவேனியா, ஸ்பெய்ன், போர்த்துக்கல், எஸ்தோனியா, மால்டா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன. (இ-10)

## கசினோ சூதாட்டக்காரர்களுக்கு இலங்கையில் இனி இடமில்லை

### பிரதமர் ரணில் எதிர்ப்பு



கசினோ சூதாட்டக்காரர்களுக்கு இலங்கையில் இனி இடமில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சிங்கப்பூர் வர்த்தகர்களை சிங்கப்பூரின் நெங்சிலா ஹோட்டலில் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த சந்திப்பின் போது வர்த்தகர் ஒருவர் கடந்த காலங்களில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட கசினோ சூதாட்ட வர்த்தகர்களுக்கு இந்த ஆட்சியில்அனுமதி கிடைககுமா? என பிரதமரிடம் கேட்ட போதே பிரதமர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

மேலும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக கசினோ வியாபாரத்தை ஆரம்பிப்பது நல்லாட்சியின் கொள்கை இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த சந்திப்பில் சிங்கப்பூரின் வர்த்தக மற்றும் தொழிற்றுறை அமைச்சர் எஸ்.ஈஸ்வரன் கலந்து கொண்டிருந்ததோடு, நம்பிக்கையுடன் இலங்கையில் முதலீடு செய்யும் சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# நாவாந்துறை சென். மேரிஸை வீழ்த்தி யாழின் கில்லாடியானது குருநகர் பாடுமீன்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட "யாழின் கில்லாடி" எனும் கால்பந்தாட்ட தொடரில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்



கழகம் கிண்ணத்தை சுவிகரித்து யாழ். கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் அணி திரண்டிருக்க,நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் மேற்படி போட்டி நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் நாவந்துறை சென்.மேரிஸ் விளையாடடுக்கழகத்தை எதிர்த்து பாடுமீன் விளையாட்டுக்கழகம் மோதியது.

பெரும் பரபரப்பாகவும், இரண்டு அணிகளும் பலம்பொருந்திய அணிகள் என்பதால் எநத அணி வெற்றி பெறும் என்ற எதிர்பார்ப்போடு இப்போட்டி இடம்பெற்றது.

இந்த போட்டியின் போது பிரதம விருந்தினராக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் முதல் பாதியில் சென்.மேரிஸ் வி.கழகம் அதிரடியாக ஆட, சென். மேரிஸ் வி.க வீரர் நிதர்சன் 20வது நிமிடத்தில் கோல் போட்டு ரசிகர்களை உற்சாகப்படுத்தினார். ஆட்டத்தின் முதல் பாதி 1:0 என நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தை சவாலாக எடுத்து கொண்ட இரண்டு அணிகளும் பரபரப்பாக மோதியது. இதில் பாடுமீன் வி.கழக கடுமையாக மோதியது. சென்.மேரிஸ் கோல் போடுவதற்கு இடம் கொடுக்காது ஆட்டத்தை சமப்படுத்த நீண்ட நேரமாக மோதி 80வது நிமிடத்தில் பாடுமீன் வீரர் கோல் போட்டு 1:1 என சமப்படுத்தி அனைவரையும் பிரமிக்க வைத்தார். ஆட்டத்தின் சமநிலை தவிர்ப்பு உதையில் 6:5 என்ற ரீதியில் சென்.மேரிஸை வீழ்த்தியது.

இரண்டாவது தடவையாகவும் வீழ்த்தி வெற்றி கிண்ணத்தை பெற்று தொடர் ஆதிக்கம் செலுத்திய பாடுமீன், யாழின் கில்லாடி என்ற பட்டத்தையும் பெற்று வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

ஆட்ட நாயகனாக பாடுமீன் கோல் காப்பாளர் பிரதீபன் தெரிவானார். மேலும் முன்னர் நடந்த 3ம் இடத்திற்கான போட்டியில் ஊரெழு றோயல் வி.கழகம் ஞான, முருகன் வி.கவை 0:1 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றியினை தனதாக்கியது. (க)





# இந்திய-மேற்கிந்திய தீவுகள் மோதும் முதல் டெஸ்ட் இன்று தொடக்கம்

இந்திய- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி அன்டிகுவாவில் உள்ள விவியன் ரிச்சர்ட்ஸ மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

விராட் கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக மேற்கிந்திய தீவுகள் சென்றுள்ளது.

கும்ளே- விராட் கோலி புதிய கூட்டணியில் இந்திய அணி சந்திக்கும் முதல் டெஸ்ட் தொடர் இதுவாகும். இதனால் அதிக எதிர்பார்ப்பு இருக்கிறது.மேற்கிந்திய தீவுகள் மண்ணில் 4-வது முறையாக டெஸ்ட் தொடரை வெல்லும் ஆர் வத்தில் கோலி இருக்கிறார்.

கடைசியாக 2011-ம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணம் செய்த தோனி தலைமையிலான இந்திய அணி 3 டெஸ்ட் கொண்ட தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஹோலடர் தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணி அனுபவமும், புதுமையையும் கொண்டது. சாமுவேல்ஸ், டரன் பிராவோ, பிராத்வெயிட் போன்ற முன்னணி பேட்ஸ்மேன்கள் அந்த அணியில் உள்ளனர்.

வேகப்பந்தில் புதுமுக வீரர்கள் முத்திரை பதிக்க கூடியவர்கள். சுழற்பந்து வீரர் தேவேந்திர பிஷ்வ் இந்திய பேட்ஸ்மேன்களுக்கு நெருக்கடியை கொடுப்பார்.

இன்றைய டெஸ்ட் இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.இரு அணி வீரர்கள் விபரம் வருமாறு,

இந்தியா: விராட் கோலி (கப்டன்), முரளி விஜய், ஷிகார் தவான், புஜாரா, ரகானே, ரோகித் சர்மா, விருத்திமான் சகா, ரவிந்திர ஜடேஜா, அஸ்வின், முகமது ஷமி, இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், புவனேஸ்வர் குமார், அமித் மிஸ்ரா, ராகுல், ஸ்டுவர்ட் பின்னி, ஷர்துல் தாக்கூர்.

வெஸ்ட் இண்டீஸ்: ஹோல்டர் (கப்டன்), கிரேக் பிராத்வெயிட் (துணை கப்டன்), சாமுவேல்ஸ், டரன் பிராவோ, லியான் ஜோன்சன், பிளாக்வுட், கார்லோஸ பிராத்வெயிட், ராஜேந்திர சந்திரிகா, ரோஸ்டன் சேஸ், டவ்ரிச், கும்மின்ஸ், கேப்ரியல், தேவேந்திர பிஷ்வ் (க)

# தெ.ஆ வீரர்கள் நாடு திரும்ப உத்தரவு



மேற்கிந்திய தீவுகளில் கரீபியன் பிரீமியர் லீக் இருபது-20 தொடர் நடந்து வருகிறது. இதில் தென்னர்பிரிக்காவைச் சேர்ந்த அதிரடி வீரர் டி வில்லியர்ஸ், வேப்பந்து வீச்சாளர் பர்னல் ஆகியோர் பார்படாஸ் டிரைடன்ட்ஸ் அணிக்காவும், ஸ்டெயின் கேப் கோப்ராஸ் அணிக்காவும், விளையாடி வந்தனர்.

இந்நிலையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைப் சார்பில் ஆண்டின் சிறந்த வீரர்களுக்கான விருது வழங்கும் விழா இம்மாத இறுதியில் ஜோகனஸ்பார்க்கில் நடைபெற உள்ளது. இதில் பங்கேற்கும் வகையில் டி வில்லியர்ஸ், பர்னல், ஸ்டெயின் ஆகியோர் உடனடியாக நாடு திரும்ப வேண்டும் என அந்நாட்டு கிரிக்கெட் சபை உத்தர விட்டுள்ளது. இவர்களுக்கு பதிலாக மாற்று வீரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (க)

# மைதானத்திலே அடித்து கொல்லப்பட்ட கிரிக்கெட் வீரர்! அதிர்ச்சி சம்பவம்

டெல்லியில் 20 வயதான கிரிக்கெட் வீரர் ஒருவர் மைதானத்திலே மர்ம கும்பலால் அடித்து கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொலை செய்யப்பட்ட இந்த இளம் கிரிக்கெட் வீரருக்கும் ஒரு ரவுடி கும்பலுக்கும் இடையே ஏற்கெனவே தகராறு ஏற்பட்டுள்ளது. கடந்த யூலை 12ம் திகதி அவர்கள் கொலை செய்து விடுவோம் எனவும் மிரட்டியுள்ளனர்.

இந்த நிலையில் டெல்லியில் நடந்த ஒரு கிரிக்கெட் போட்டியில் அவர் விளையாடிக் கொண்டிருக்கும் போது மைதானத்திற்கு நுழைந்த ஒரு கும்பல் ஹொக்கி மட்டை, இரும்பு கம்பி ஆகியவற்றால் அவரை அடித்து கொலை செய்தது. இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் பொலிசார் எடுக்கவில்லை. 3 பேர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் சம்பவத்தில் 10 பேருக்கும் அதிகமானோருக்கு தொடர்புள்ளதாக கூறி அவரது உறவினர்கள்சாலை மறியல்போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதி முழுவதும் பரபரப்பாக காணப்படுகிறது.தலைநகர் டெல்லியில் இது போன்ற ரவுடி கும்பலின் அட்டகாசம் அதிகரித்து விட்டது. ஆனால் டெல்லி பொலிசார் அவர்களை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது பலரின் குற்றச்சாட்டாக உள்ளது. (க)

# ஆலயத்தின் புனிதத்தன்மையை பாதித்தால் இறங்குதுறை இடமாற்றம் செய்யப்படும்

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

கீரிமலைப் பகுதியில் கடற்படையினரால் அமைக்கப்பட்டுவரும் இறங்குதுறை, ஆலயத்தின் புனிதத் தன்மையை பாதிக்குமானால் அது இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கீரிமலை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் இறங்குதுறை ஒன்று கடற்படையினரால் அமைக்கப்பட்டு வருகிறது. குறித்த பகுதிக்கு அண்மையில் வசித்து வரும் மீனவர்களுக்கென அப்பகுதிகடற்கரை ஆழமாக்கப்பட்டு இறங்குதுறையாக மாற்றப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் முத்துமாரி அம்மன் கோவில், குழந்தைவேல் சமாதிசிவன் கோவில், சடை அம்மாமடம் ஆகியவற்றுக்கு முன்பாக அமைந்துள்ள தீர்த்தக்கரை பகுதியிலேயே இந்த இறங்குதுறை அமைக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியானது பக்தர்கள் ஆடி அமாவாசை பிதிர் கடன்களைச்செலுத்தும் தீர்த்தக்கரையாக உள்ளதுடன் ஈழத்துசித்தர்கள் பலருடைய சமாதிகள் அமைந்துள்ள இடமாகும் என்பதால் அப்பகுதியில் இறங்குதுறை அமைக்கக் கூடாது என பல இந்து அமைப்புக்கள் கோரிக்கை விடுத்த வண்ணமுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தினை கடற்படையினரே தான் தோன்றித்தனமாக மேற்கொண்டு வருகின்றனர் என்றும் எவருடனும் இது பற்றி கலந்துரையாடாமல் இறங்குதுறை அமைக்கும் பணிகள் தற்போது நிறைவடைந்து வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபரை தொடர்பு கொண்டு கேட்டபோது கடற்படையினரால் கீரிமலையில் மீனவ குடும்பங்களுக்காக ஒரு இறங்குதுறை அமைக்கப்பட்டு வருகிறது. பல இந்துசமய அமைப்புக்கள் குறித்த பகுதியில் இறங்குதுறை அமைக்கக்கூடாது என கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கமையகுறித்த இறங்குதுறையை இடமாற்றம் செய்வதற்கு ஆலோசித்துள்ளோம். விரைவில் சென்றுபார்வையிடவுள்ளோம்.

இருப்பினும் தற்போது அமைக்கப்பட்டு வரும் இறங்குதுறையால்ஆலயத்தின்புனிதத்தன்மை பாதிக்கப்படுமாக இருந்தால் அதுமாற்றம்செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 12.45 மணி முதல் மாலை 4.15 வரை யாழ். மாவட்ட செயலகம் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.


இதில் யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையுரையினையும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தலைவர் ஹசித திலகரட்ண விசேட உரையையும் நிகழ்த்துவர்.

போட்டித்தன்மை மற்றும் மேம்படுத்தல் பணிப்பாளர் திருமதி சாந்தினி நீலகண்டன் "யாழ். மாவட்டத்தில் பாவனையாளருடைய தேவைகளும் சேவைகளும்" எனும் பொருளில் உரையாற்றுவார்.

வட மாகாண உதவிப் பணிப்பாளர் யசூர் பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளுதல் தொடர்பில் அரச அதிகாரிகள் பொலிஸாரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒத்துழைப்பு பற்றியும் உரையாற்றுவார்." (இ)

# மரண அறிவித்தல்

## அமரர் நடராஜா செல்வரட்ணம் (சின்னண்ணை)



இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா செல்வரட்ணம் (சின்னண்ணை) 20.07.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா, அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, செல்வராணியின் மருமகனும் இராசகுமாரியின் அன்புக் கணவரும் அன்பழகன் (ரஞ்சன்- கனடா), இரவீந்திரன் (றூபன்- பிரான்ஸ்), சற்குணநாயகி (வவி), கலாநாயகி (வவா- பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் துரைசிங்கம், தவமணி, பூபதி ஆகியோரின் சகோதரரும், ரஞ்சினி, சரோஜினி, இந்திரராசு, ஜெயசிலன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். கோபிராஜ், வருண்ராஜ், அபிலாஷ், சௌந்தர்யா, விக்ரம், தர்சிகா, தர்சன், தனுசன், யூலியஸ், பேர்னாட், பெனடிக்ற் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.07.2016 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்துக்கு (ஆணி பக்ரறி) எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகபூஷணி அம்மன் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (5290)

தகவல்:
இந்திரராசு (மருமகன்)
077 869 7296

# மலேரியா நோய்க்குள்ளானோர் இலங்கைக்குள் நுழைய வாய்ப்பு

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தினூடாக கப்பல்கள் மூலம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுடன் மலேரியா நோய்க்குள்ளானவர்களும் இலங்கைக்குள் நுழையலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு கப்பல்கள் மூலம் இலங்கைக்கு மலேரியா நோயாளர்கள் உள்நுழைவதை தடுப்பதற்காக துறைமுகப் பிரதேசத்தில் இரத்தப் பரிசோதனை செய்யப்படுவதில்லை என அம்பாந்தோட்டை பிரதேச மலேரியா ஒழிப்பிற்கான பொறுப்பதிகாரி பீ.எஸ். எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.மேலும்இலங்கையில்தற்போது மலேரியா நோயானது முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளதுடன், வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாவிற்காக இலங்கை வருபவர்கள் மூலம் மலேரியா பரவுவதற்கான வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், ஏனைய விமான நிலையங்கள், துறைமுகங்களில் மேற்கொள்ளப்படும் இரத்தப் பரிசோதனையானது அம்பாந்தோட்டை துறைமுகத்திலும் செய்யப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-10)


## ஏல விற்பனை

யா/ சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையின் கீழ் குறிப்பிடப்படும் தளபாடங்கள் ஏல விற்பனை செய்யப்படும். (5288)

மாணவர்மேசை மரம்- 9, மாணவர்கதிரை மரம்- 7, பாலர் கதிரை மரம்- 10, இடம்: யா/சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை, காலம்: 2016.07.28, நேரம்:- மு.ப.11.00



உ
ஜெய் குருதேவ்

யோகாசனம் | மூச்சுப்பயிற்சி



பிராணாயாமம் | சுதர்சனக்கிரியா

பூஜ்யஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியினால் வடிவமைக்கப்பட்ட வாழும் கலைப்பயிற்சி (ஆனந்த அனுபவம்)

(அனைவராலும் செய்யக்கூடிய எளிய யோகாசனங்கள், மூச்சுப்பயிற்சி, சக்திவாய்ந்த சுதர்சனக் கிரியா, ஆன்மீக அறிவு என்பன உள்ளடக்கப்பட்டது)

இடம்:- நல்லை ஆதீன கலாமண்டபம், நல்லூர்
காலம்:- ஜூலை 22,23,24 மாலை 5 மணி- 7 மணி
ஆசிரியர்:- சர்வதேச வாழும் கலை சிரேஷ்ட ஆசிரியர் திரு. மணிகண்டன்ஜி (பெங்களூர் ஆச்சிரமம்)

17 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் கலந்து பயன் பெறலாம்.

தொடர்புகளுக்கு:-
077 864 5971, 077 603 2152, 077 918 6343, 077 903 7321

வாழும்கலை அமைப்பு, யாழ்ப்பாணம். (சி-5243)


# இராசி பலன்

21.07.2016
(ஆடி 06, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துதியை பின்னிரவு 4.00 மணிவரை
திருவோணம் பிற்பகல் 5.37 மணிவரை
சுபநேரம் 7.31- 9.01 மணிவரை
இராகுகாலம் 1.31- 3.01 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவாதிரை, புனர்பூசம் பின்னிரவு 5.30 இற்கு கும்-சந் | | சூரி ராகு சுக் |
| சந் | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள்.

**மிதுனம்:** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வேலைச்சுமை கூடும், எடுத்த காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படலாம், செலவுகள் அதிகரிக்கலாம்.

**கும்பம்:** சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சயன சுகக் குறைவான நாள், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**கடகம்:** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, போசன நன்மையுண்டு.

**மகரம்:** ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**சிம்மம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழிலில் போட்டிகள் மாறும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் புகழ்கூடும், வளர்ச்சி கூடும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**துலாம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பிள்ளைகளால் பெருமையுண்டு.

# பல்கலைக்கழக மாணவர்களை பலிக்கடாக்களாக்க வேண்டாம்!

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவரிடையே ஏற்பட்ட வன்முறை விரும்பத்தகாத ஒன்று. எனவே குறுகிய அரசியல் நோக்கத்திற்காக மாணவர்களைப் பலிக்கடாக்களாக்க வேண்டாம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

கல்வி என்பது இனம், மொழி, மதம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது. கல்வியே ஒரு நாட்டின் மூலதனம். அதனை உச்ச கட்டமாக அடைவதற்கான வழியை பல்கலைக்கழகமே காட்டுகின்றது. இதனை மறந்து நாம் செயற்படக்கூடாது. பல்கலைக்கழகத்தில் கற்று வெளியேறுவோரே சமூகத்தின் முன்னோடிகளாக விளங்குகின்றனர்.

இதனை உணராதவர்கள் குரோதங்களை உருவாக்குகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவரிடையே ஏற்பட்ட வன்முறை விரும்பத்தகாத ஒன்று. இன ரீதியாக, மொழிரீதியாக இதனை எவரும் பிரித்துப் பார்க்க வேண்டாம். தற்செயலாக ஏற்பட்ட நிகழ்வாகக் கருதி மாணவரிடையே ஒற்றுமையை வலுப்படுத்துங்கள். ஒரு வகுப்பில் ஒன்றாகக் கற்கும் சூழலை சீர்குலைக்க வேண்டாம். தாய், தந்தையரின் உச்சமான எதிர்பார்ப்பு, மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை என்பவற்றைக் கருத்தில் கொண்டு முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். விசாரணைகள், தண்டனைகள் என்பவற்றைத் தவிர்த்து இருமொழி மாணவர்களையும் சமாதானப்படுத்துங்கள்.

அதனை விடுத்து குறுகிய அரசியல் நோக்கத்திற்காக மாணவர்களைப் பலிக்கடாக்களாக்க வேண்டாம்.

இவ்வாறு தமது அறிக்கையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்விப்புலம் சார்ந்தோர் சார்பாக வெளியிட்டுள்ளது. (இ-5)

# வடமாகாண பனை அபிவிருத்தி வாரம்

## 22.07.2016-28.07.2016

பனை எமது சூழல், பனை எமது பண்பாடு,பனை எமது பொருளாதாரம்

எமது பனைவளம் போர்க்காலத்தில் பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. பதுங்கு குழிகளை அமைப்பதற்கும், காப்பரண்களை அமைப்பதற்கும் இலட்சக்கணக்கான பனை மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டதோடு, பல்குழல் எறிகணை வீச்சுகளாலும் பல்லாயிரக்கணக்கான பனை மரங்கள் சிரச்சேதம் செய்யப்பட்டுள்ளன.

போருக்குப் பின்னரும் பனை மரங்கள் அனுமதியின்றிப் பெருமளவுக்கு அழிக்கப்படுகின்றன. இது இயற்கைச் சூழலின் சமநிலையை, குறிப்பாக காட்டுவளம் இல்லாத யாழ்குடாநாட்டின் சூழலைப்பெரிதும் பாதிப்பதாகவுள்ளது.

தமிழ்மக்களின் பண்பாட்டைப் 'பனைப் பண்பாடு' என்று சொல்லும் அளவுக்கு உணவு முதல் உறையுள் வரை எமது வாழ்வியலில் பிரதான இடம் பிடித்துவந்த பனைவளம் தற்போது எமக்கு அந்நியமான ஒரு வளமாக மாறியுள்ளது. பனைப் பொருட்களின் பயன்பாடு அருகிவருவதன் காரண மாக, இப்பனை வளத்தைத்தொழில் மூலாதாரமாகப் பயன்படுத்தி வந்த மக்கள் திரளின் பொருளாதாரம் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது.

இவற்றைக் கருத்திற்கொண்டு பனைவளத்தைப்பெருக்கவும், நவீன காலத்துக்கு ஏற்பப் பனைப் பயன்பாட்டை நுகர்வோரை ஈர்க்கும் வகையில் அபிவிருத்தி செய்யவும், இதன்மூலம் பனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும் அறிஞர்களினதும் பொது மக்களினதும் கவனத்தை ஈர்க்கும் விதமாக வடக்கு மாகாண சபையின் அமைச்சர் சபையின் ஒப்புதலுடன் ஜூலை 22 ஆம் திகதியில் இருந்து ஒரு வார காலப்பகுதி வடமாகாண பனை அபிவிருத்தி வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு கடந்த ஆண்டில் இருந்து கடைப்பிடிக்கப்படுகிறது.

அமரர் கலாநிதி கந்தையா கனகராசாவின் பனை அபிவிருத்திச் சபை தோற்றம் பெறுவதற்கு முன்பாகவே, தனி ஒருவராக வடக்கு, கிழக்கு பூராகவும் பனை விதைகளை விநியோகித்து பனந்தோப்புகள் உருவாக காரணமாக அமைந்தவர். இவர், பனம்தொழில் முனை வோரிடம் இருந்து பனைசார் உற்பத்திகளைக் கொள்வனவு செய்து பிறருக்கு அன்பளிப்பாக வழங்கியதன் மூலம் பனம் தொழில் முனைவோரின் வாழ்வாதாரத்துக்கு ஆதாரமாக இருந்ததோடு, பனை உற்பத்திகளின் அறிமுகத்துக்கும் காரண மாக அமைந்தவர் ஆவார். இவர் பனை அபிருத்திச் சபையின் இயக்குநர்களில் ஒருவராகவும் இருந்து பனை அபிவிருத்தியில் பெரும் பங்காற்றியவர். இவர் ஆற்றிய பணிகளுக்காக அமரத்துவத்தின் பின்னர் இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. தால காவலரான அன்னாருக்கு உயரிய கௌரவம்வழங்கும்பொருட்டே வடமாகாண பனை அபிவிருத்தி வாரத்துக்குரிய காலப்பகுதியாக, அவரது நினைவு தினமான ஜூலை 22ஆம் திகதி தொடக்கம் 28ஆம்திகதிவரையான காலப்பகுதி தேர்வு செய்யப்பட்டது.

இந்த ஆண்டும் எமது அமைச்சு பனை அபிவிருத்திச் சபையுடனும் பனை, தென்னைவளக் கூட்டுறவுச் சங்கங்களுடனும் இணைந்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பனை அபிவிருத்திக் கண்காட்சியை நடத்துவதோடு, பனை அபிவிருத்தி தொடர்பான ஆய்வரங்கையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.பனை அபிவிருத்தி வாரத்தின் தொடக்க நிகழ்ச்சி நாளை 22ஆம்திகதி காலை 9 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பனை அபிவிருத்திக் கண்காட்சி நாளை 22ஆம் திகதி தொடங்கி 28ஆம் திகதி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறும். இதன் திறப்பு நிகழ்ச்சி நாளை 22 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். கண்காட்சி நடைபெறும் நாட்களில் கண்காட்சித்திடலில் தினமும் பனை உற்பத்திப் பொருட்களின் விற்பனையும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

பனை அபிவிருத்தி வாரத் தொடக்க நிகழ்ச்சியிலும் பனை அபிவிருத்திக் கண்காட்சித் திறப்பு நிகழ்ச்சியிலும் வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார் என வடமாகாண விவசாய கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி கூட்டுறவு அபிவிருத்தி உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசன மற்றும் சுற்றாடல்அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அறிவித்துள்ளார். (இ)




# தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்டு சிங்கள பாரம்பரியங்கள் திணிப்பு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிந்து நல்லிணக்கத்தை பற்றி பேசும் அரசாங்கம் வடக்கு கிழக்கில் சத்தமில்லாமல் சிங்களமயமாக்கலை மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டியுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழர் பிரதேசங்களில் சிங்கள பாரம்பரியங்கள் திணிக்கப்படுவதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணை ஒன்று வந்தால் அதனை ஈழமக்கள் புரட்சிகர முன்னணி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது எனவும், அதற்கெதிராக பாரிய போராட்டங்களை தாம் முன்னெடுப்போம் எனவும், இந்த விடயத்தில் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக்கட்சிகளும் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நண்பகல் நடை பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். யாழ். பல்கலையில் நடைபெற்ற சம்பவத்தின் பின்னரான காலத்தில் தென்னிலங்கையை சேர்ந்த பல அமைப்புக்கள் வடக்கு, கிழக்கில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களுக்கு இராணுவம் தான் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என குரல் கொடுத்து வருகின்றனர்.



இவர்களுக்கு பின்னால் யாரோ இருந்து கொண்டு தான் இவற்றை எல்லாம் செய்விக்கின்றனர். இது தான் யாழ்.பல்கலையிலும் நடைபெற்றது. அதனை முதலில் கண்டறிய வேண்டும். அப்பாவி மாணவர்களை தண்டிப்பதை விடுத்து தூண்டியவர்கள் யாரென கண்டறிந்து தண்டனை வழங்க வேண்டும். இலங்கையில் 17 பல்கலைக்கழகங்கள் உள்ள நிலையில் மூன்று பல்கலைக்கழங்கள் வடக்கு கிழக்கில் உள்ளன. இந்த மூன்று பல்கலைக்கழங்களை முழுமையாக சிங்கள மயமாக்க அரச இயந்திரம் முயற்சிக்கின்றதா? என அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் சர்வதேச விசாரணை தேவையா? உள்நாட்டு விசாரணை தேவையா? என கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் தெளிவான நிலைப்பாடு இல்லை. அவர் நேரத்திற்கு நேரம் ஒவ்வொரு கதை கதைத்துக் கொண்டு உள்ளார். ஆகையால் தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பின் ஏனைய பங்காளி கட்சிகளும் தமது நிலைப்பாட்டை தெளிவாக கூற வேண்டும்.


ஈழமக்கள் புரட்சிகர முன்னணி ஒருபோதும் உள்நாட்டு விசாரணையை ஏற்றுக் கொள்ளாது. இதனை தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆகவே கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தமது நிலைப்பாட்டை உடன் அறிவிக்க வேண்டும் என தெரிவித்தார்.(இ-4)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-21

**(20.07.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)**

### பகுதி I

01) 3
02) 1
03) 3
04) 3
05) 1
06) 3
07) 1
08) 2
09) 1
10) 3
11) 3
12) 2
13) 1
14) 4
15) 3
16),17)




18) 4
19) 2
20) 3
21) 2
22) 3
23) 3
24) 3
25) 3
26) 3
27) 3
28) 3
29) 3
30) 4
31) 3
32) 1
33) பச்சைக்கம்பளம் விரித்தது போல்
34) பெருக்கெடுத்த ஆறு போல்
35) பால் போல் வெண்மையாக
36) நீலவர்ணஆடைவிரித்தாற்போல்
37) கும்பல் கும்பலாக குவித்து விட்ட பஞ்சுக் குவியல்கள் போல்
38) கண் சிமிட்டும் குழந்தையைப் போல்
39) குடும்பம்
40) உறவுகள்

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வ/து)

## பதவி வெற்றிடம்

### கணினிப்பக்க உருவாக்குநர் 322/13

மேற்படி பணி நிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரியிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம் : 322/13
14230-16730 / 120X 10- 130X10 (சுற்றுநிருப இல. 13/2015 இற்கு அமைய)

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

*தகைமைகள்*

(அ) சிங்களம்/தமிழ்மொழி மற்றும் கணிதம் எண் கணிதத்தில் திறமைச் சித்தியுடன் 2 தடவைகளுக்கு மேற்படாதவாறு க.பொ.த.சாதரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். அத்துடன் அரச அல்லது ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 3 மாதங்களுக்குக் குறையாத முழு நேர Ms Office அல்லது அதனை யொத்த கணினிப் பாடநெறி ஒன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அல்லது**

ஆ) அரச அல்லது ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 3 மாதங்களுக் குக் குறையாத முழு நேர Ms Office அல்லது அதனையொத்த கணினிப் பாடநெறி ஒன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல். அத்துடன் குறித்த இப்பதவியில் அல்லது அதனையொத்த பதவியொன்றில் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஓராண்டுக்கு குறையாத காலம் கடமைபுரிந்திருத்தல் வேண்டும்.

01. வயது 18 தொடக்கம் 45 இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது கணிப்பிடப்படும்.
02. சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
03. சேவை தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் விண்ணப் பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
04. விண்ணப்ப முடிவுத்திகதி 03.08.2016

*குறிப்பு:* விண்ணப்பங்கள் தலைவர், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

### எழுதுநர் 302/12

மேற்படி பணி நிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரியிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம் : 302/12
14590-17290 / 130X10- 140X10 (சுற்றுநிருப இல. 13/2015 இற்கு அமைய)

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.

*தகைமைகள்*

(அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர்/இலிகிதர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதியுநர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை யிலான சித்தி.

**அல்லது**

இ கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திரம்/ க.பொ.த. உயர்தரப்பத்திரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி

01. வயது 18 தொடக்கம் 45 இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது கணிப்பிடப்படும்.
02. சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
03. சேவைத் தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் விண்ணப்பத் துடன் இணைக்கப்படல் வேண்டும்.
04. விண்ணப்ப முடிவுத்திகதி 03.08.2016

*குறிப்பு:* விண்ணப்பங்கள் தலைவர், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

*திரு.சி.முத்துக்குமார்*
*தலைவர்,*
*வடமாகாண ப.தெ.வ.அ.கூ.நிறு.பேரிணையம்,*
*A9 வீதி, கிளிநொச்சி.*

(C-5244)


Theatre Of the People

## மக்கள் களரி கலாசார மன்றம் வழங்கும்-புதியதொரு அனுபவம் புதியதொரு பிரவாகம்



### குழந்தை மா.சண்முகலிங்கத்தின் மொழி பெயர்ப்பில் பேர்டோல்ட் பிரெச்டின்

## ‘வெண்கட்டி வட்டம்’ (நாடக ஆற்றுகை)

நெறியாள்கை:
பராக்கிரம நிரியல்ல, ரதிதரன்

◆ 22, ஜுலை, 2016 பிற்பகல் 5.30
வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
◆ 23, ஜுலை, 2016 பிற்பகல் 6 மணி
மறுமலர்ச்சி மன்றம், திறந்தவெளி அரங்கு, காலையடி, பண்டத்தரிப்பு
◆ 25, ஜுலை, 2016 பிற்பகல் 3 மணி மற்றும் 7 மணிக்கு
காண்பிய மற்றும் ஆற்றுகைக்கலைகளது பல்கலைக்கழகம், கொழும்பு
◆ 27, ஜுலை, 2016 பிற்பகல் 2 மணி,
றுகுணு பல்கலைக்கழகம் , மாத்தறை

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**
**பிரவேசம் இலவசம்**

[5279]




## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 32செவ் 4 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:HNDAகனடாPR<br>தொ.இ: B/3073 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 14 1/4செவ் 2 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/2041 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 8<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:Phd/ பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/6101 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 33<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6104 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 20<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்:QS/தனியார் தொழில் சிங்கப்பூர்<br>தொ.இ: B/6102 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 45செவ் 12 இல்<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6105 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 70செவ் 2 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:O/L டுபாய்<br>தொ.இ: B/6103 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 21<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>தொ.இ: G/6106 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# நாம் ஒற்றுமையாக பயணிப்போமானால் எமது பாதை இலக்கை நோக்கி செல்லும்



## சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு

தமிழ்த்தேசியம் தடமாறி னால் பரவாயில்லை. ஆனால் தமிழ்த்தேசியம் தடுமாறக்கூடாது என்று புளொட் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பின ருமான த.சித்தார்த்தன் தெரி வித்துள்ளார்.

மன்னார் பொது அமைப்புக்க ளின் ஏற்பாட்டில் அண்மையில் மன்னார் ஞானோதய மண்டபத் தில் நடைபெற்ற "தடம் மாறுகிறதா தமிழ்த்தேசியம்" எனும் தொனிப் பொருளில் கருத்தாய்வுநிலை, கருத்துப் பகிர்வுவாடல் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தமிழ்த்தேசியம் தடமாறி னால் பரவாயில்லை. ஆனால் தமிழ்த்தேசியம் தடுமாறக்கூடாது. ஏனென்றால், ஆரம்பத்தில் அகி ம்சை என்ற தடத்தில் சென்றோம். பின்னர் ஆயுதப்போராட்டம் என்ற நிலையில் சென்றோம். தற்போது ஜனநாயகம், அகிம்சை என்ற தடத்திற்கு வந்திருக்கின்றோம். ஆனால் நிச்சயமாக தமிழ்த் தேசி யம் என்பது அறுபது வருடங்களாக தாய் குழந்தைக்கு பாலூட்டுவது போன்று எம் அனைவருக்கும் ஊட்டி வளர்க்கப்பட்ட விடயம். அது மட்டுமன்றி தேசிய உணர்வு ஒவ்வொரு மனிதனுக்கும் தானாக உருவாகின்ற உணர்வாகும்.

ஆகவே அது தடுமாறுவதற்கு மக்கள் விடமாட்டார்கள். நாமும் நிச்சயமாக தடுமாற மாட்டோம்.

போராட்டங்கள் தடம் மாறு வதை இங்கு மட்டுமல்ல பல இட ங்களிலும் பார்த்திருக்கின்றேன். பலஸ்தீனம், தென்னாபிரிக்கா உள்ளிட விடுதலைப் போராட்டங் களில் அவர்கள் வெவ்வேறு தளங் களில் சென்றுதான் இறுதி வெற் றியைக் கண்டிருக்கின்றார்கள்.

ஆகவே, தமிழ்த்தேசியம் தடம் மாறுகிறதா என்பதைவிட தடுமாறுகிறதா என்பதே பொருத் தமானதாகவிருக்கும்.

நீங்கள் விட்ட பிழைகள் என்னவென இங்கு பலர் கேட்டி ருக்கின்றார்கள். போராட்ட காலங் களில் தவறுகள் நடைபெறவி ல்லை எனக் கூறமுடியாது.

அந்த தவறுகள் நடக்கின்ற போது தவறுவிடுகின்றோம் என கருதவில்லை. சில தருணங்களில் பாரிய தவறுகள் இழைக்கப்பட்டிரு க்கின்றன.

இயக்கங்களுக்குள் பிரச்சி னைகள் காணப்பட்டிருக்கின்றன. மறக்க முடியாத பிரச்சினைகள் இருக்கின்றன. மறக்க முடியாது விட்டாலும் மன்னிக்கப்பட்டன. அந்த வகையில் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலமாகத்தான் எமது இலக்கை நோக்கி பயணிக்க முடியும்.

நாம் ஆரம்பம் முதலே சர்வ தேசத்தை பிழையாக கணித்திரு க்கின்றோம். இந்தியா தமது நலன் கள் எல்லாவற்றையும் விடுத்து எமது நலனுக்காக இங்கு வரவே ண்டுமென எதிர்பார்ப்பு இருந்தது.

பங்களாதேஷை உதாரணமா கக் கொண்டு இந்தியா மீதான அவ் வாறானதொரு அபிப்பிராயம் இரு ந்தது. தற்போதைய அனுபவங்க ளுக்கு பின்னர் இந்தியா அல்ல எந்த நாடாகவிருந்தாலும் அவர்கள் முத லாவதாக தமது நலன்களையே முன் வைப்பார்கள். அந்த நலன்களுக் குள்ளே எம்மை உள்வாங்க முடி யுமா எனப் பார்ப்பார்கள். அவ்வா றில்லையேல் எம்மை விட்டுச் செல்வார்கள்.

தவறுகள் காணப்படுகின்றன. அவை திருத்தப்பட வேண்டும். நாம் சரியான முறையில் ஒற் றுமையாக பயணிப்போமாகவி ருந்தால் எமது பாதை இலக்கை நோக்கி சென்றடையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## கிளிநொச்சி பொதுவைத்தியசாலை சிரமதானப் பணி மூலம் துப்புரவு



கிளிநொச்சி மாவட்ட பொது வைத் தியசாலையின் நோயாளர் நல ன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மேற் படி வைத்தியசாலை வளாகத்தில் அண்மையில் சிரமதானப்பணி நடை பெற்றது.

இதில் நோயாளர் நலன்புரி சங்க பொதுச்சபை உறுப்பினர்கள் கிளி நொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ம.ஜெயராசா, வைத்தியசாலை பணி யாளர் என பலரும் கலந்துகொ ண்டு சிரமதானப் பணியை மேற் கொண்டனர். (2-277)

## பொதுமக்களின் அபிவிருத்திக்கு அமைக்கப்பட்ட சனசமூக நிலையக்கட்டடம் பயன்பாடின்றியுள்ளது

### பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(சிவநகர்)

கிளிநொச்சி சிவநகர் கிராம த்தில் பலமாதங்களுக்குமுன்னர் சனசமூக நிலையக் கட்டடம் கட்டப் பட்டுள்ளபோதிலும் பொதுமக்கள் பாவனைக்காக இதுவரை திறந்து வைக்கப்படவில்லை.

கரைச்சி பிரதேச சபையினரின்




பொறுப்பில் அக்கட்டடம் உள் ளதால் அதனை திறப்புவிழா செய்து அல்லது தேவைப்படும் பாவனை க்கு கொடுத்துதவுமாறு பிரதேச சபையினரால் அறிவுறுத்தப்பட்ட போதிலும் இதுவரை உரிய சன சமூக நிர்வாகத்தினர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லையென பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கிராமத்தி லுள்ள பொதுமண்டபத்துடன் இணை த்துக்கட்டப்பட்டுள்ள மலசலகூடம் பாவனையற்றநிலையில் பராமரிக் கப்படாதுள்ளதால் இக்கிராமத்து மக்களுக்கு மட்டுமல்லாது பல பொதுமக்களின் நலனுக்காக நட த்தப்படும் நடமாடும் வைத்திய சேவைகள் மற்றும் ஏனைய பொது நிகழ்வுகளை நடத்துவதற்கு மிக வும் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டி யுள்ளதாகவும் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே பொதுமக்களின் தேவை க்கும் அபிவிருத்தி நடவடிக்கைக்கு மெனகட்டப்பட்டுள்ளவற்றை உரிய அபைப்புக்கள் கவனத்தில் கொள் வதுடன் இவற்றிற்குபொறுப்பாகவும் மேற்பார்வைசெய்வதற்கும் பொறு ப்பான அலுவலர்கள், அதிகாரிகள் இவற்றைக் கவனத்திலெடுத்து பொதுமக்களின் நலனுக்கு உதவு மாறு பொதுமக்களால் கோரிக்கை விடப்படுகிறது. (2- 254)

## 'அவள் ஒரு தனித்தீவு' நூல் அறிமுகவிழா

திருமலை, கவிச்சுடர் சிவரமணி யின் 'அவள் ஒரு தனித்தீவு' எனும் நூல் அறிமுக விழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா ஆதிவிநாயகர் ஆலய பாலாம் பிகை மண்டபத்தில் வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த.சிவகுமாரன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந் தினராக வன்னி மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்,சிறப்பு விருந்தினர்க ளாக வடக்கு மாகாணசபை உறு ப்பினர்களான மயில்வாகனம் தியாகராஜா, செந்தில்நாதன் மயூ ரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.பி. நடராசா, வவுனியா பிரதேச சபைசெயலாளர் உத்தி யோகத்தர் வீரசிங்கம் பிரதீபன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

மங்கள விளக்கினை ஆ.அம்பிகை பாகன், அவரது மனைவி தர்மினி அம்பிகைபாகன் தம்பதி ஏற்றி வைக்க தமிழ் வாழ்த்தினை திருமதி பராசக்தி ஜெகநாதன் பாடுவார். வாழ்த்துரையை வவுனியா ஆதி விநாயகர் ஆலயத்தின் செயலாளர் சிவ.கஜேந்திரகுமார் நிகழ்த்து வார். தலைமையுரையைத் தொட ர்ந்து அறிமுகவுரையை கவிச் சிகரம்.கி.உதயகுமார் வழங்கு வார். நூல் வெளியீடு, சிறப்புப் பிரதிகள் வழங்கு கலைத் தொடர்ந்து தமிழ் மணி கே.கே.அருந்தவராஜா (மேழிக்குமரன்) நூல் ஆய்வுரை நிகழ்த்த நூலாசிரியர், கவிச்சுடர் சிவரமணியின்ஏற்புரையையடுத்து, சிறப்பு நிகழ்வாக "பேசாப் பொரு ட்கள் பேசித் துணிந்தால்" என்னும் பொருளில் கவியரங்கம், கவிஞர் வே.முல்லைதீபன் தலைமையில் இடம்பெறும். (2)

## துணுக்காய் மூன்று முறிப்பு பிரதான வீதியின் அவலநிலை

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டம் துணு க்காய் மூன்று முறிப்பு பிரதான பாதைக்கு பாலம் போடப்பட்டும் பயணிக்க முடியாத நிலை காண ப்படுவதாக பொது மக்கள்,சிற்றூர்தி சாரதிகள் விசனம் தெரிவிக்கி ன்றனர்.

துணுக்காயிலிருந்துவவுனியாவை இணைக்கும் இப்பிரதான பாதை யில் வீதிக்கு குறுக்காக உயரமாக பாலம் போடப்பட்ட நிலையில் இவ் வீதியில் பயணிக்கும் சிறுவாக னங்கள் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதோடு அவ் வீதியில் பயணிக்கும் மக்கள் தங்கள் சிறு வாகனங்களை செல்வ தற்காக கற்களையும் மண்ணை யும் இட்டு பாதையை செப்பனிட்டு வருகின்றனர்.

குறித்த வீதி தொடர்பாக கருத்து தெரிவித்த கிராமவாசி ஒருவர், இவ்வீதியானது புனரமைப்பு




என்கிற பெயரில் பயன்படுத்த முடி யாத நிலைமை காணப்படுவதோடு கடந்த ஒருவருடகாலமாக வீதி புன ரமைப்பு செய்யும் ஒப்பந்ததாரரால் கவனிக்கப்படாமல் இருக்கிறது .இவ் வீதிக்கு மாற்றீடாக மக்கள் போக்கு வரத்திற்கு தற்காலிக வீதி எதுவும் அமைக்கவில்லையென குற்றஞ் சாட்டினார். இவ்வீதியில் போக்கு வரத்துச் செய்யும் மாணவர்கள், வய தானவர்கள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதோடு நோயாளிகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத அவல நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டி னார். குறிப்பிட்ட வீதியானது வடக்கு மாகா ணசபையின் நிதி ஒதுக் கீட் டில் திருத்தம் செய்யப்பட்டு வருவ தாக குறிப்பிட்ட அவர் சம் பந்தப்பட்ட வடக்கு மாகாண அமைச்சு விரைவாக நடவடிக்கையெடுக்கவேண்டுமெனஅவர் கோரிக்கை விடுத்தார். (2-250)

# சுகாதாரமான உணவுப்பண்டங்கள், குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்த விசேட செயற்றிட்டம்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்த தீர்மானம்





வடக்கு மாகாணத்தில் பொதுமக்களுக்கு சுகாதாரமான முறையில் தயார் செய்யப்பட்ட உணவுப்பண்டங்கள் மற்றும் சுத்தமான குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்தும் முகமாக விசேட செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் மாகாண சுகாதார அமைச்சில் நடைபெற்ற உணவு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான மாகாண மட்ட கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

உலக நாடுகளில் இன்று தொற்றுநோய்களின் தாக்கம் வெகுவாக குறைந்து வருகின்றது. இதற்கு காரணம் தொற்றுநோய்களை கட்டுப்படுத்தும் தடுப்பூசி ஏற்றல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளாகும். எனினும் எமது நாட்டில் உணவு மற்றும் நீரினால் பரவும் நோய்களின் தாக்கம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்திருந்தாலும் முற்றாக இல்லையென்று கூறமுடியாது. அதிலும் அண்மைக்காலமாக வடக்கு மாகாணத்தில் உணவின் மூலம், குடிநீரின் மூலம் பரவும் நோய்கள் அதிகரித்துள்ளன. யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டத்தில் இவ்வாறான நோய்கள் பரவுவது அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு சுகாதாரமான பாதுகாப்பான உணவையும் நீரையும் வழங்க வேண்டியது எமது கடமையாகும். இதற்கான விசேட செயற்றிட்டமொன்றினை வடக்கு மாகாண சுகாதார அமைச்சு முன்னெடுக்கவுள்ளது. குறிப்பாக உணவகங்கள் மற்றும் உணவு தயாரிக்கும் நிறுவனங்களின் சுகாதாரம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது. நமது நாட்டில் ஏற்கனவே உணவுப்பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் இருந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலுள்ள குறைபாடே இவ்வாறான பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகின்றது. இந்த விசேட செயற்றிட்டத்தின் மூலம் உணவுப் பாதுகாப்புச் சட்டங்களை இறுக்கமாக நடைமுறைப் படுத்தவுள்ளோம்.

மேலும் நுளம்பினால் பரவும் டெங்கு நோய்த்தாக்கங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தவுள்ளோம். குறிப்பாக திண்மக்கழிவு பொருட்களை சரியான முறையில் முகாமைத்துவம் செய்யாமையும் இதற்கு காரணமாகும். பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி இவ்வாறான விடயங்களை தனியாக சட்டங்களின்மூலம் நடைமுறைப்படுத்த முடியாது என்றார். (2-250)

## வவு. குளத்தில் இருந்து முதியவர் சடலமாக மீட்பு



(குருமன்காடு)

வவுனியாகுளத்தின் அலை கரைப்பகுதியில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

இதில் வவுனியா பூந்தோட்டம் பகுதியைச்சேர்ந்த அந்தோனி மயில்வாகனம் (வயது-65) என்பவரே உயிரிழந்தவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் உயிரிழப்பிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-250)

## வவுனியா நகர சபை

## சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்கள் இரு மணி நேர அடையாள வேலைநிறுத்தம்

(குருமன்காடு)

வவுனியா நகரசபை சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்கள் இரண்டு மணிநேரம் அடையாள வேலை நிறுத்தத்தில் நேற்றுக்காலை ஈடுபட்டுள்ளனர்.

தமக்கான சம்பளத்தை சீர்செய்யுமாறு கோரியும் ஏழு சுகாதார தொழிலாளர்களின ஆவணங்கள் காணாமற் போனமை தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்துமாறு கோரியும் வேலை நிறுத்தத்தை முன்னெடுத்திருந்தனர்.



இதன்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை வவுனியா நகரசபைச் செயலாளர் த.தர்மேந்திரா சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது அவர் தொழிலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையில்,

நகர சபை சுகாதார தொழிலாளர்களின்சம்பளம்சீர்செய்யப்பட்டு தற்போது வழங்கப்படுகின்றன. அதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இது தொடர்பில் தொழிலாளர்களுக்கு ஏதாவது சந்தேகங்கள், குழப்பங்கள் இருக்கும் பட்சத்தில் தனிப்பட்ட ரீதியில் கடிதம் மூலம் எமக்கு அறியத் தர முடியும். ஆவணங்கள் காணாமற் போனமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இப் போராட்டம் குறித்து முறையான அனுமதி பெறப்படவில்லை.

ஆதலால் தொழிலாளர்கள் பேராட்டத்தை கைவிட்டு வேலைக்கு திரும்ப வேண்டும். அவ்வாறு 24 மணித்தியாலத்திற்குள் கடமைக்கு திரும்பாத தொழிலாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் அறிவுறுத்தினார். இதனையடுத்து சுகாதார தொழிலாளர்கள் தமது போராட்டத்தை கை விட்டு கடமைக்கு திரும்பினர். (2-250)




## கொக்குளாயில் தமிழ் மீனவர்களுக்கான இறங்குதுறை அமைக்க தீர்வு எட்டப்பட்டது

(முல்லைத்தீவு)

கொக்குளாயில்தமிழ் மீனவர்களுக்கான இறங்குதுறையை அமைப்பதற்குரிய அனுமதியை வழங்க வேண்டுமெனவடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இறங்குதுறையை அமைப்பதற்கு உடனடியாக அனுமதி வழங்குவதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். குணபாலன் உறுதி மொழி வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொக்குளாயில் இறங்கு துறை அமைக்கும் நோக்குடன் நேற்று முன்தினம் காலை தமிழ் மீனவர்கள் சீமெந்து தூண்கள் கிடுகுகள் சகிதம் சென்றிருந்தனர்.

இதன் போது அங்கு வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீனவர்கள் இந் நடவடிக்கையை கைவிடுமாறு கூறினர். இதனையடுத்து பெரும்பான்மை இனத்தை சேர்ந்த மீனவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதன்போது இரு தரப்பினரும் கூறியநியாயங்களை அடுத்து சீமெந்து தூண்களை அகற்றுமாறு பொலிஸார் பணித்தனர். இந்நிலையில் கொக்குளாய் தமிழ் மீனவர்களுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரனுக்கும் இடையில் நேற்று காலை 8.30 மணியளவில் சந்திப்பொன்று முல்லைத் தீவு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன் பின்னர் வடக்கு மாகாணசபை உறுப்பினரும் தமிழ் மீனவர்களும் இணைந்து கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு சென்றிருந்தனர்.

அங்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலருக்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிற்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன் போது ரவிகரன் தெரிவிக்கையில், தமிழ் மீனவர்களுக்கு இறங்கு துறை வழங்கப்படாது இருப்பது வேதனைக்குரிய செயலாகும்.

கடந்த 2012 ஆம் ஆண்டில் தமிழ் மீனவர்களுக்கு கொக்குளாயில் இறங்குதுறையொன்று வழங்குவதற்கு அப்போதைய முல்லைத்தீவு கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் தீர்மானித்திருந்தும் இது வரை வழங்கப்படவில்லை. கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஒழுங்குபடுத்திய கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் இறங்கு துறை அமைப்பது தொடர்பில் கோரிக்கையொன்று தமிழ் மீனவர்களினால் முன்வைக்கப்பட்டது.


இந்நிலையில் நேற்று முன்தினம் தமிழ் மீனவர்கள் இறங்குதுறை அமைப்பதற்கு என கருதப்பட்ட இடத்தில் வாடிகளை அமைக்க முயன்ற வேளை பொலிஸாரினால் முயற்சி தடுக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

எனவே தமிழ் மீனவர்களுக்கான இறங்குதுறையை கொக்குளாயில் அமைப்பதற்குரிய அனுமதியை வழங்க வேண்டுமெனவும் ரவிகரன் இதன்போது கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து கொக்குளாயில் இறங்குதுறை அமைப்பதற்கு உடனடியாக அனுமதி வ்ழங்குவதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் உறுதிமொழி வழங்கினார்.

அதன் பின்னர் காணி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், தமிழ் மீனவர்களுடன் இணைந்து கொக்குளாயில் இறங்குதுறை அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்வதற்கு சென்றதாக கூறப்படுகின்றது. (2)

# பெருக்கத்து வேண்டும் பணிதல்!



**கம்பவாரிதி ஜெயராஜ்**

உளம் கூசி நிற்கிறார்கள் உண்மைத்தமிழர்கள்.

காரணம், யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்த மோதல் சம்பவம். இணையங்கள் சம்பவத்தை இயன்றவரை விபரித்து விட்டதால் அது பற்றிய தனி விபரிப்பைத் தவிர்க்கிறேன். சரி, பிழை என்பவற்றிற்கு அப்பால், நாடளாவிய இச்சம்பவம் தரப்போகும் அதிர்வுகளை நினைக்க மனம் பதறுகிறது. இத்தனை அனுபவங்களின் பின்னும் பின் விளைவுகளைச் சிந்தியாத கற்ற இளைஞர்களின் நிதானமற்ற செயற்பாடு சலிப்பைத் தருகிறது. இரு இன இளைஞர்களையும்தான் சொல்கிறேன். இன அடக்குமுறையில் விருப்புக் கொண்ட எதிரிகளின் கருத்தை வலிமைப்படுத்தப் போகிறது இச்சம்பவம்.

இத்தனைக்கும் நம் தமிழ்ச் சமூகத்தின் ஆற்றல்மிகு இளைய தலைமுறையினர் கற்கும், உயர் கல்விப்பீடத்தில் இச்சம்பவம் நடந்திருப்பதுதான் வேதனைக்குரிய விடயம். பாதிப்புற்ற இனத்தைப் பக்குவமாய் வழி நடத்த வேண்டிய, நாளைய தலைவர்களின் இன்றைய தீர்க்கதரிசனமின்மை, 'இனத்தின் எதிர்காலம் என்னாகப்போகிறதோ?' என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது. சமூகப் பொறுப்பாளர்கள் அதிர்ந்து நிற்கின்றனர்.

இச் சம்பவம் நடந்து முடிந்து இரண்டு நாட்கள் கழிந்துவிட்ட இன்றைய நிலையிலும், தமிழ்த் தலைவர்கள் யாரும் இதுபற்றி வாய் திறக்காமல் இருப்பது ஆச்சரியம் தருகிறது. அவர்களுக்கு இனத்தின் எதிர்காலம் பற்றிய கவலையை விட, அடுத்த தேர்தல் பற்றிய கவலையே அதிகம் போலும். பல்கலைக்கழக மாணவர்களின் பகை வந்துவிடுமோ எனும் அச்சத்தில், ஞானமின்றி மோனம் காக்கும் அவர்கள் நிலையைக் காண வயிறு எரிகின்றது. நல்ல தலைவர்கள்! பெரும்பாலும் இனிவரப் போகும் அவர்களின் அறிக்கைகள் கூட, எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதாய் அமையலாம். கடவுள் காக்கட்டும்!

சம்பவத்தின் எதிர் விளைவுகள் நாடளாவிய ரீதியில் மெல்ல ஆரம்பித்திருக்கின்றன. கதிர்காமம் சென்ற தமிழ் யாத்திரிகள் தாக்கப்பட்டதாய் இணையத்தில் செய்தி வந்திருக்கிறது. விமல் வீரவன்ச வழமைபோல இனப்பகையைத் தூண்டி அறிக்கை விட்டிருக்கிறார்.

இவ் அதிர்வுகளை அரசாங்கம் அலட்சியம் செய்தால், பிரச்சினைகள் மேலும் வளரக்கூடும். அரசாங்கத்தை வீழ்த்த ஆவலோடு காத்திருக்கும் அணியினருக்கு இச்சம்பவம், வெறும் வாய் சப்பியோர்க்குக் கிடைத்த அவல்பிடியாய் ஆகியிருக்கிறது.

நிச்சயம் அவர்கள் இச்சம்பவத்தை தம் சார்பாய்ப் பயன்படுத்த முயல்வார்கள் என்பதில் ஐயமில்லை.

அங்ஙனம் நிகழ்ந்தால், அரசு அவர்தம் முயற்சிகளை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும்.

இல்லாவிட்டால் பாதாளத்தில் இருந்து மெல்ல தலைதூக்கத் தலைப்பட்டிருக்கும் தேசம் மீண்டும் பாதாளத்தின் அடி வரை சென்றுவிடும் என்பதில் ஐயமில்லை.

இளையோரின் இளமைக்கே உரியதான உணர்ச்சிவயப்பாட்டினை, பெரிதுபடுத்தாமல் தெளிவுபடுத்த வேண்டியது நல்லோர் தம் கடமையாம்.

இரு இனத்தாரும் தம்மைத் தாம் சமன் செய்து, நடுநிலையோடு இச்சம்பவத்தைக் காணவிழைதலே, எதிர் விளைவுகளை நீக்கும் ஒரே வழி.

இரு இனத்திலும் உள்ள நடுநிலையோடு கூடிய சான்றோர்கள், இப்பிரச்சினையை ஆழ ஆராய வேண்டும். அங்ஙனம் ஆராயத் தலைப்படும் நல்லோர்க்காய், ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலில் சிங்கள இனத்தாரின் சிந்தனைக்குச் சில செய்திகள்.

இச் சம்பவத்தால் நீங்கள் ஆத்திரங்கொள்ளும் முன், அறிவு பூர்வமாய் சிந்திக்கவேண்டிய சில விடயங்கள் உள்ளன: சற்று வலித்தாலும் உண்மைகளை அங்கீகரிப்பீர்கள் எனும் நம்பிக்கையில், அவற்றைக் கீழே வரிசைப்படுத்துகிறேன்.

இனங்களுக்கிடையிலான பகையுணர்வை முதலில் வளர்க்கத் தலைப்பட்டவர்கள் நீங்கள். பெரும்பான்மைப் பலத்தை மட்டும் தகுதியாய்க் கொண்டு, மாற்றினத்தின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் முறைமையை, இம்மண்ணில் முதலில் விதைத்தவர்கள் நீங்கள்.

கலவரங்கள் என்ற பெயரில், தமிழ்மக்களின் உயிர், உடைமை என்பவற்றை வீதி என்றும் பாராமல் வேட்டையாடிப் பறித்து, அருவருக்கும் விளையாட்டை ஆரம்பித்தவர்கள் நீங்கள்.

தரப்படுத்தல் எனும் பெயரில், தமிழ் இளைஞர்களின் கல்வி பறிக்கப்பட்டபோது, தமது அறிவு அநியாயமாக்கப்படுகிறதே என்று தமிழ் இளைஞர்கள் கதறி அழுகையிலும், அதற்காய்ப் பரிதாபப்படாமல் ஆனந்தித்து நின்றவர்கள் நீங்கள்.

போர் முடிந்து தற்போதைய அரசியல் மாற்றம் நிகழும்வரை, இனவெறியர்கள் தம் அதிகாரத்தை நிறுவுவதாய்க் கூறி, மாற்றார்தம் மதவழிபாட்டுத் தலங்களைக் கூட உடைத்துச் சிதைத்தபோது அதனை அங்கீகரித்து மௌனித்திருந்தவர்கள் நீங்கள்.

தீவிரவாதத்தை அழிக்கிறோம் என்ற பெயரில், ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டபோது, அதுபற்றிய எந்த அனுதாபமும் இல்லாமல், வெற்றி மமதையில் இருந்த பழைய ஜனாதிபதியின் அறைகூவலுக்கு ஆட்பட்டு, இறந்த அப்பாவித் தமிழர்களை எவ்விதத்திலும் கருத்தில் கொள்ளாமல், வெற்றிக் கொண்டாட்டம் நடத்தியவர்கள் நீங்கள்.

போரினால் கதியிழந்து தமிழர்கள் தவித்து நிற்கையில், அதுவரை தமிழில் பாடி வந்த தேசியகீதத்தைக் கூட தமிழர்கள் இனிச் சிங்களத்தில்தான் பாடவேண்டும் என, கடந்த அரசு மறைமுகமாய் வலியுறுத்திய போது, அதை அங்கீகரித்து நின்றவர்கள் நீங்கள்.

இவ்வளவும் ஏன்? போர் முடிந்த பின்னர்கூட, உங்கள் பகுதிப் பல்கலைக்கழகங்களில் நடந்த சில பட்டமளிப்பு விழாக்களில், தம் கலாசார உடையோடு கலந்துகொள்ள வந்தார்கள் என்பதற்காக, மாற்றின மாணவர்களுக்குப் பட்டம் வழங்க மறுத்து, திருப்பி அனுப்பிய காட்சியை ரசித்துப் பார்த்திருந்தவர்கள் நீங்கள்.

மொத்தத்தில், பெரும்பான்மை பலம் இருந்தால் போதும், நீதி பற்றி கவலைப்படத்தேவையில்லை என்ற பாடத்தை இம்மண்ணின் இளையோர் மனதில் விதைத்த குற்றம் உங்களுடையதுதான்.

அவ் இழிந்த பாடத்தை, பெரும்பான்மையினராகிய நீங்கள் தான், எங்கள் சிறுபான்மை இளைஞர்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள். இன்று அப்பாடம் உங்களை நோக்கி திரும்ப, நீங்கள் பதறுவதைக் காணுகையில், என்ன இது மானுடம் என சலிப்பு வருகிறது.

உங்கள் மீது குற்றம் சாட்டி எங்கள் இளைஞர்களின் தவறை, நாங்கள் மறைக்கப் பார்ப்பதாய் தயவு செய்து கருதிவிடாதீர்கள்.

உங்கள் குற்றங்களை வரிசைப்படுத்தியதன் நோக்கம் அதுவன்று. காலப்பலம் கொண்டு நீங்கள் செய்த தவறை, நிச்சயம் தமிழ் அறிஞர்கள் ஒருக்காலும் செய்ய மாட்டார்கள்.

எங்கள் இளைஞர்கள் பிழையான வழியில் சென்றால், மூத்தவர்களாகிய நாங்கள் உங்களைப் போல், அதைக் கைகட்டி ரசித்திருக்க மாட்டோம்.

நிறுத்துங்கள்! என எம் இளைஞர்களைத் தடுக்கும் துணிவும் உரிமையும் நேர்மையும் எங்களிடம் உள்ளன.

இவற்றைக் கூட, உங்களிடம் இவையெல்லாம் இல்லை என்று கேலி செய்யும் நோக்கத்தில் நான் எழுதவில்லை. எங்கள் கடமையை நாம் சரிவரச் செய்வோம் என உங்களுக்கு உறுதிதரும் நோக்கத்திலேயே எழுதுகிறேன்.

எனது அன்புச் சிங்களச் சகோதரர்களே!

நிறைவாக உங்களுக்கு நான் ஒன்றைச் சொல்லவேண்டும். அற நெறிகளை ஆயிரமாய்ச் சொல்லி வைத்த, பெரியோர்தம் வழியில் வந்தவர்கள் நாங்கள். தவறை யார் செய்தாலும் இது தவறெனச் சொல்லும் பலத்தை அப்பெரியவர்கள் எங்களுக்குத் தந்திருக்கிறார்கள். எனவே இத்தகு பிழைகள் இனி எம் மண்ணில் நடவாமல் தடுக்க, எம்மால் இயன்றவரை முயல்வோம் என உங்களுக்கு உறுதி சொல்ல விரும்புகிறேன்.

உங்களுக்கு மட்டுமென்னவாம்? உங்களால் வணங்கப்படுகிற புத்தர் பெருமானும், 'தர்மம் சரணம் கச்சாமி' என்று, உபதேசித்து விட்டுத் தானே சென்றிருக்கிறார். அந்த மகானின் வழியைப் பின்பற்றுவதாய்ச் சொல்லும் நீங்கள், அவர்தம் ஆப்த மொழியைப் பின்பற்றாததால்தான், இத்தேசம் சிதைந்தது என்பதை தயைகூர்ந்து மறந்து போய்விடாதீர்கள்.

எங்கள் மேல் பிழையே இல்லை என்று நான் சொல்லவருவதாய் உங்களுக்குப்படும். பிழைகள் எல்லாரிடமும் தான் இருக்கின்றன. பிழைகள் இல்லாத உலகம் என்ற ஒன்று என்றும் இருக்கப்போவதில்லை. ஆனால் பிழைகளை அங்கீகரிக்கும் உலகம் இருக்கக் கூடாது. பெரும்பான்மை பலம் இருக்கிறது என்ற காரணத்தால், நீங்கள் பிழைகளை அங்கீகரித்தது போல, தமிழினச் சான்றோர்கள் ஒருக்காலும் பிழைகளை அங்கீகரிக்கமாட்டார்கள் என்பதை என்னால் உறுதிபடச் சொல்லமுடியும். இதை நீங்கள் நிச்சயம் நம்பலாம்.

ஆயிரம் பேசுகிறாயே! பெரும்பான்மை என்ற அதிகாரம் பற்றித் தானே, நாங்கள் செய்த தவறினை இன்று உங்கள் இளைஞர்களும் பல்கலைக்கழகத்தில் செய்திருக்கின்றார்கள். இந்நிலையில் எங்கள் குற்றங்களை வரிசைப்படுத்தி நியாயம் கேட்க, உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? என்பீர்கள். பதில் சொல்கிறேன்.

என் அன்புக்குரியவர்களே! உங்கள் கருத்தோடு நான் முரண்படுகிறேன். பெரும்பான்மை அதிகாரத்தால் நீங்கள் செய்த தவறுகள், பலம் பற்றியும், திமிர் பற்றியும், அடக்கியாளும் எண்ணம் பற்றியும், பூனை, எலியை அடித்து விளையாடும் விளையாட்டிற்கு ஒப்பாய் செய்யப்பட்டவை. சும்மா இருந்த தமிழர்களை, 'என் அதிகாரத்திற்கு முன் உன்னால் என்ன செய்ய முடியும்?' எனக் கேட்டு, சீண்டி விளையாடி வினை செய்தீர்கள் நீங்கள். இன்று நடந்திருப்பது அத்தகைய ஒன்றல்ல. தயைகூர்ந்து நான் சொல்லப் போகும் நியாயத்தை நடுநிலையோடு சிந்தித்துப் பாருங்கள்.

கடந்த முப்பதாண்டுகளாய், அடிக்குமேல் அடி விழுந்து மனவடுப்பட்டவர்கள் எங்கள் இளைஞர்கள். பேரின அரசாங்கங்கள் செய்த கொடுமைகளுக்காளாகி, கர்ப்பத்திலேயே அல்லற்பட்டு அழத் தொடங்கியவர்கள் எங்கள் இளைஞர்கள். தந்தை, தாய், உற்றார், உறவினர், நண்பர் என அத்தனை பேரும் காரணமின்றி அழிக்கப்பட்ட காட்சிகளைக் கண்டு, புத்தி உறைந்து போனவர்கள் எங்கள் இளைஞர்கள்... எந்த இடத்திலும் எப்போதும் குண்டு விழலாம் எனும் பயத்தில், உறைந்து உருகியவர்கள் எங்கள் இளைஞர்கள். நம் தாய் மண்ணில்நாம் வாழமுடியுமா? முடியாதா? என்பது கூடத் தெரியாமல், வாடி வதங்கியவர்கள் எங்கள் இளைஞர்கள். இந்தக் காயங்கள் எல்லாம் சேர்ந்துதான் பல்கலைக்கழகத்தில் அவர்களை எதிர்வினை செய்யத் தூண்டியிருக்கின்றன.

அடுத்தடுத்து பூனையிடம் அடி வாங்கிய வேதனையில் எதிர்த்துச் சீறும் எலியின் செயலுக்கு ஒப்பானது இது. மற்றவர் கை அருகில் வந்ததுமே, எங்கே மீண்டும் என் புண்ணில் குத்தி விடுவார்களோ எனும் அச்சத்தில், சீறிப்பாய்ந்து சினப்பது போல மிகை எதிர்ப்புக் காட்டியிருக்கிறார்கள் அவர்கள். தயைகூர்ந்து அதைப் புரிந்து கொள்ளுங்கள்.

அன்பை வேண்டி நிற்பது தான் தமிழர்களின் இயல்பு. அவர்கள் பகையை வீம்புக்காய் ஒருநாளும் வேண்டி நிற்கமாட்டார்கள். நடந்தது வரலாற்றுப் பயத்தால் எழுந்த இளைஞர்களின் எதிர்வினை மட்டுமே. நிச்சயம் அது தொடர்ந்து நடக்காது. தமிழ் சான்றோர்கள் அங்ஙனம் நடக்க விடமாட்டார்கள். உங்கள் சிங்கள மாணவர்களைக் கேட்டுப்பாருங்கள். எங்கள் தமிழ் இளைஞர்களில் பெரும்பான்மையினோர் அவர்களோடு எப்படி நட்பாய்ப் பழகுகிறார்கள் என்று. சகோதரர்களுக்குள் சிறு சண்டை வருவதில்லையா? அவ்வப்போது அப்பகையை மறந்தால்தான் உறவு நீடிக்கும். அதை விடுத்து பூதக் கண்ணாடிகளால் பிழைகளைப் பார்க்கத் தலைப்பட்டால், போரும் அழிவும்தான் இத்தேசத்தில் மிஞ்சும்.

(தொடரும்)

# குழு நிலைச் செயற்பாடுகளும் கற்றலும்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் ஒருபோதும் தனித்து வாழ முடியாது. தன்னுடைய தேவைகள் பலவற்றையும் நிறைவு செய்வதற்கு ஏனைய சமூக அங்கத்தவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டியவனாகக் காணப்படுகின்றான். எனவே சமூக விலங்காகிய மனிதன் ஏனையவர்களுடன் சிறப்பான முறையிலே தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

இவ்வகையில் குழுவாகச் செயற்படல் என்பது சமூகத் திறன்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. குழுச் செயற்பாடானது மாணவ சமுதாயத்துக்குப் பிறருடன் இணைந்து செயற்படக் கூடிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இதனூடாக சமூக இசைவாக்கமுள்ள, சமூகமயமான ஒரு சமுதாயத்தை உருவாக்கக் கூடிய ஒரு முயற்சியாகவும் அமைகின்றது.

ஆரம்ப வகுப்புக்களைப் பொறுத்தவரையில் குழு நிலைச் செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவமுடையன. எனினும் இடைநிலை, உயர்தர வகுப்புக்களிலும் குழுநிலைச் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை பல்வேறு கல்விச் சீர்திருத்தங்கள் விதந்துரைத்துள்ள போதிலும் நடைமுறையில் அவை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதில்லை.

அறிவை மட்டும் பெற்று அறிவுமையப் பரீட்சை முறையில் உயரிய மட்டத்தில் சித்தி பெற்று பின்னர் சமூகத்தில் செய்வதறியாது திகைக்கும் இளைஞர், யுவதிகளை எமது சமூகத்தில் இன்று தாராளமாகக் காண்கின்றோம். அறிந்து கொள்ளுதல், அறிந்தவற்றை தேக்கிவைத்திருத்தல், அவ்வாறு தேக்கி வைத்துள்ளவற்றுக்கு அமைவாக நடந்து கொள்ளுதல் ஆகிய மூன்று சந்தர்ப்பங்களையும் தாண்டி தலையை மட்டும் போசிப்பதற்குப் பதிலாக கூடவே இதயத்தையும் கைகளையும் போசிக்கும் கல்வி முறைமையின் தேவை உணரப்பட்டு அதனை அடையும் வகையில் புதிய சகத்திரத்தின் முதலாவது கலைத்திட்ட மறுசீரமைப்பு 2007 இல் முன்வைக்கப்பட்டது.

பூகோளமயமாதல் காரணமாகத் தோன்றியுள்ள புதிய தகவல் யுகத்தில் வெற்றியடையக்கூடிய இளைஞர் சந்ததியை நாட்டுக்கு வழங்குவதற்கென பல மாற்றங்கள் இடம்பெற்றன. தற்கால சமூகத்தில் சீர்குலைந்து வருகின்றதும் வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்துவதற்கு இன்றியமையாததுமான

1. சிந்தனைத் திறன்கள்
2. சமூகத் திறன்கள்
3. தனியாள் திறன்கள்

ஆகியவற்றை அடுத்த சந்ததிக்கு ஒப்படைக்கும் நோக்கில் இக் கலைத்திட்ட மறுசீரமைப்பு திட்டமிடப்பட்டது.

கற்றற் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு முன்னர் நடைமுறையிலிருந்த பாடக் குறிப்புகளுக்குப் பதிலாக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்குகளின் சேர்க்கையினால் உருவாகும் வாழ்க்கைப் பழக்கமாகும். இக் KASP மாதிரியுடன் ஆளிடைத் திறன்கள் எனும் கூறும் இணைக்கப்பட்டுள்ளது. ஆளிடைத் தொடர்பு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு மாணவர்கள் குழுவாகக் கற்றலில் ஈடுபடுவது அவசியமாகும். எந்தவொரு மனிதனும் ஆசிரியரிடம் ஒரு பகுதியையே கற்றுக் கொள்கின்றான். இரண்டாவது பகுதியை சகபாடிகளிடமும் மூன்றாவது பகுதியை பலதரப்பட்ட அறிவாளிகளிடமும் கற்றுக் கொள்கின்றான் எனக் கூறப்படுகின்றது.

குழு என்ற பதமானது பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுகின்றது. எனினும் பாடசாலைகளிலே மாணவர்கள் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் குறித்த இலக்கை அடைவதற்காக தமது வயதை ஒத்த சகபாடிகளுடன் தொடர்ச்சியாக இணைந்து இடைத்தொடர்புடன் உரையாடிச் செயற்படுதல் எனக் கருதலாம். பரிசோதனைகள், கலந்துரையாடல்கள், செய்முறைகள், செயற்றிட்டங்கள், கண்டறிதல்கள், களப்பயணங்கள், பாத்திரமேற்று நடித்தல் என்பவற்றினூடாக கூட்டாக அனுபவங்களைப் பெறுவதையும் நடத்தை மாற்றங்களைப் பெறுவதையும் குழுச் செயற்பாடுகள் ஊக்குவிக்கும் மாணவர்கள் தனியாகக் கற்பதைவிட குழுவாகக் கற்பதனால் கூடுதலான விளக்கங்களையும் அனுபவங்களையும், அனுபவப் பகிர்வுகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனூடாக தனித்தனியாக செய்ய முடியாத ஒவ்வொரு வேலைகளை ஒன்றாகச் சேர்ந்து செய்து முடிக்கக் கூடியதாக இருக்கும். பிள்ளைகள் இன்று ஏனையோருடன்சேர்ந்து செய்யும்வேலைகளை எதிர்காலத்தில் தாமே தனியாகச் செய்யக் கூடிய ஆற்றலையும் நம்பிக்கையையும் பெறுவர்.

Kert Lewin என்பவர் கற்றல்-கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகளை வாழ்க்கை வெளி என்ற எண்ணக் கருவினூடாக விபரித்துள்ளார். ஒருவரின் கற்றல் நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிக, மானிட, உளவியற் சூழல் அனைத்தும் கற்போனின் உளவியற் சூழலாகின்றது. ஒருவரது புலக்காட்சி, அறிவு, திறன், மனப்பாங்கு, எண்ணம், காட்சிநிலை, தொடர்பாடல், கற்பனை, படைப்பாற்றல் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். அதாவது கற்றல் நிகழ்வதற்கு ஏற்ற வகையில் ஓர் உளவியற்சூழல் குழுச் செயற்பாடுகள் மூலமே உருவாகும் என்கின்றார்.

கற்றற் செயற்பாடு நலிவடையாது இருப்பதற்கு கற்போனின் அவாமட்டம் ஆசிரியரால் அறியப்பட வேண்டும். இவ் வினைத்திறன் மிகு நடவடிக்கையானது குழு நிலையில் இனங்காணப் படுகின்றது. கற்போனின் செயற்படும் ஆற்றல் அளவிடப்படுகின்றது. செயற்படும் ஆற்றலிலுள்ள வலிவு, நலிவுகள் உத்தேசிக்கப்படுகின்றது. நடத்தை மாற்றங்களும், விழுமியப் பரிமாற்றங்களும் இடம்பெறுவதற்கு குழுச்செயற்பாடு வலிமை மிக்க கற்பித்தல் அணுகுமுறையாகும்.

மக்டூகல் "ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மனம் உள்ளது போன்று குழுக்களுக்கும் "குழுமனம்" (Group mind) என்ற ஒன்று உண்டு என்றும் தனிமனிதன் எவ்வாறு தனது மனத்தின் அடிப்படையில் செயற்படுகின்றானோ அதே போன்று குழுக்களின் நடத்தைக்கும் குழுமனம் அடிப்படையாக உள்ளதெனவும் குறிப்பிடுகின்றார். குழுமனம் செயற்படுவதற்கு 4 அடிப்படை ஆக்கநிலைகள் இருத்தல் வேண்டும் என மக்டூகல் குறிப்பிடுகின்றார்.

1. சிறிது காலமேனும் தொடர்ச்சியாக குழு நிலைத் திருத்தல்.
2. குறித்த குழுவினைச் சேர்ந்தவன் எனும் உணர்வு உறுப்பினர்களிடம் இருத்தல்.
3. குழு உறுப்பினர்களிடையே சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் இருத்தல்.
4. குழு நடத்தைக்கான சில மரபுகள்/ விதிமுறைகளை உருவாக்கி இருத்தல்

என்பனவாகும்.

மாணவர்கள் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் குழுவில் ஒற்றுமையாக செயற்படுதல், குழுஈடுபாடு, செயற்பாடுகளில் சுறுசுறுப்புடனும் மகிழ்வுடனும் பங்கேற்றல், சகபாடிகளுடனான தொடர்புகள் அதிகரித்தல், எதிர்பாலாருடன் சுமுகமான இடைவினையுறவு, தலைமைத்துவம் ஏற்றல், குழுவில் பொருட்கள், உபகரணங்களை முறையாகக் கையாளுதலும் பரிமாறுதலும், புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத்தன்மை, பரிவுணர்வு ஏனையோரின் கருத்துக்களுக்கு செவிமடுத்தல், மதிப்பளித்தல், பிறருக்கு உதவுதல், உணர்வுகள், கருத்துக்களைப் பகிர்தல், பயனுள்ள பொழுதுபோக்குகளில் ஈடுபடுதல், அறிவுவிருத்தி, நேர முகாமைத்துவம் பேணுதல், புதிய எண்ணங்கள், சிந்தனைகள், கற்பனைகள் வளர்த்தல், புலன்சார் பயிற்சி, திட்டமிட்டுக் கருமமாற்றுதல் போன்ற நற்பண்புகளை விருத்தி செய்து கொள்வர்.

இதற்கென குழுக்களை உருவாக்கி செயற்பட வைத்தல், குழு அங்கத்தவர்களை குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மாற்றி வெவ்வேறு குழுக்களில் இடம்பெறச் செய்தல், குழுக்களுக்குத் தரமிடுதல், குழுக்களையும் அங்கத்தவர்களின் செயற்பாடுகளையும் கணிப்பீடு, மதிப்பீடு செய்தல் ஆகிய செயற்பாடுகளை ஆசிரியர் நன்கு திட்டமிட வேண்டும். செயற்பாடுகள் மாணவர்களின் மனப்பாங்குகளில் பண்புரீதியான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

வகுப்பறையிலே பல்வேறு இயல்புகள் கொண்ட மாணவர் காணப்படுவர். இவர்களின் சிறப்பான ஆற்றல்கள், ஆற்றல்குறைபாடுளை இனங்கண்டு அவற்றில் வேண்டிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான திட்டமிடல்களை ஆசிரியர் மேற்கொள்வார். இதற்கென மாணவர்களை குழுக்களாக்கும் போது ஆசிரியர் குழுக்களின் இலக்குகளுக்கேற்ப அங்கத்தவர்களை நியமித்தல் வேண்டும். குழுக்கள் தமது இலக்குகளை அடைவதற்காக ஒத்துழைத்து செயற்பட வேண்டும் என்ற விளக்கத்தை மாணவர்கள் பெற்று குழுவின் வெற்றிக்காக அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் செயற்படும் போது நடத்தைகளை



கல்வித் தரிசனம்

மாற்றியமைத்து நல்லியல்புகளைப் பெறுவர்.

மாணவர்களிடம் காணப்படும் கற்றல் இடர்பாடுகள், பிழையான நடத்தைகள், குறைவான அடைவுமட்டம், நேரவிரயம் என்பவற்றை நீக்குவதற்கு குழுச் செயற்பாடுகளை திட்டமிட்டுப் பயன்படுத்த முடியும். குழுக்களிடையே போட்டி ஏற்படும் போது மாணவர்கள் ஒத்துழைத்து கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். சகபாடிகளுக்கு இடர்படும் பகுதிகளில் விளக்கமளித்துக் கற்கத் தூண்டுவர். இதனூடாக சகபாடிக் கற்றல் விருத்தியடைவதுடன் அவர்களின் அடைவு மட்டங்களும் உயர்வடைய வாய்ப்பு உண்டு. குழுக்களில் செயற்பாடுகளுக்கான நேரத்தை ஆசிரியர் வரையறை செய்து நேரமுகாமைத்துவம் பேணும் போது மாணவர் குழுக்கள் போட்டியுடன் ஒத்துழைத்துச் செயற்படுவர். இதனால் குறித்த நேரத்தினுள் ஆக்கபூர்வமாக வினைத்திறன் மிக்க கற்றலில் ஈடுபடப் பழகுவர். பொருத்தமற்ற நடத்தை வெளிப்பாடுகளுக்கான நேரம் இல்லாது செய்யப்படுவதனால் படிப்படியாக சிறந்த கற்றற் பழக்கத்தையும் ஒழுக்க விருத்தியையும் பெறுவர்.

கட்டிளமைப் பருவப் பிள்ளைகளைக் குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதனூடாக அவர்களை நெறி பிறழ்வான நடத்தைகளிலிருந்து விடுவிக்க முயற்சிக்கலாம். பிள்ளைகளின் இயல்பூக்கங்களின் வழியே செல்லாது கட்டுப்பாட்டுடன் செயற்படுவதற்கு குழுச்செயற்பாடுகள் உதவ வேண்டும். இவர்களை ஆக்கத்திறன் விருத்திச் செயற்பாடுகள், சமூக சேவை, விவாதங்கள், பட்டிமன்றங்கள் போன்றவற்றில் ஈடுபடுத்தலாம். பிள்ளைகள் தாமாகவே தமது எண்ணங்கள், கருத்துக்கள், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், சித்திரங்கள், நாவல்கள் மூலம் வெளிப்படுத்த உதவுவதனூடாக இவர்களின் பாலியல் உணர்வுகளை நெறிப்படுத்த உதவலாம். முதியோர் இல்லம், சிறுவர் இல்லம், ஆலயங்கள் மற்றும் விசேட தேவையுள்ளவர்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்ய வாய்ப்பளிக்கலாம். இதனூடாக இவர்கள் பல்வேறு வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றுக் கொள்வர்.

21ம் நூற்றாண்டுக்கான கல்வி பற்றி ஆராய்ந்த சர்வதேச ஆணைக்குழுவின் அறிக்கையில் மனிதகுலம், தனியாட்கள், நாடுகள் என்பவற்றின் எதிர்கால வளர்ச்சிக்கான கல்வியின் பங்கு பற்றிக் கூறியிருப்பதுடன் நான்கு தூண்களினடிப்படையில் கல்வி பற்றிய தொலைநோக்கை முன்மொழிந்தது. அவை,

1. அறிவைப் பெறும் வகையில் கற்றல்
2. செய்வதற்குக் கற்றல்
3. வாழக் கற்றல்
4. இணைந்து வாழக் கற்றல்

என்பனவாகும்.

இதனடிப்படையில் இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் கல்வி இலக்குகளை வகுத்துள்ளன.

1. தொடர்பாடல் திறன்
2. சுற்றாடல் தொடர் பான தகைமைகள்
3. ஒழுக்கம்,சமயம் சார்ந்த தகைமைகள்
4. விளையாட்டு, ஓய்வு நேரப் பயன்பாடு
5. கற்பதற்கு கற்றலுடன் தொடர்புடைய தகைமைகள்
6. ஆளுமை விருத்தி
7. வேலை உலகுக்கு தயார் செய்தல்

ஒரு குழுவில் இணைந்து பணியாற்றக் கற்றல், வெவ்வேறு கலாசாரப் பின்னணியைச் சேர்ந்தவர்களைப் புரிந்து கொள்ளும் உளப்பாங்கினைப் பெறுதல் என்பன பாடசாலைக் கல்வியின் விளைவுகளாக அமைதல் வேண்டும். பிறர் மீது அக்கறை செலுத்துதல், அவர்களுக்குரிய கௌரவம் வழங்குதல், தமது சமூகம் எவ்வாறு இயங்குகின்றது என அறிதல், சிறந்த பண்புகளை வளர்த்தல், சிறந்த ஒழுக்கப் பாங்கான தீர்மானங்களை மேற்கொள்ள வகை செய்தல் என்பன பாடசாலைக் கல்வி மூலம் வழங்கப்பட வேண்டும்.

மாணவர்களை குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் போது பின்வரும் உத்திகளில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. குழுக்களை உருவாக்குதல்
2. வழிகாட்டல்களை வழங்குதல்
3. குறிகாட்டிகளுடன் பணிகளை வழங்குதல்
4. கணிப்பீடு
5. பெறுபேறுகளைப் பகிர்ந்து கொள்ளல்

பல்வேறு ஆற்றல்கொண்ட மாணவர்களைக் குழுக்களாக்கி ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலைவர், செயலாளர், நேரக்காப்பாளர், முகாமையாளர், பேச்சாளர் போன்ற வகிபாகங்களை வழங்கி குழுக்களுக்கு செயற்பாடுகள் வழங்கப்படலாம். இதன் மூலம் தமது பதவி நிலைகளுக்கேற்ப ஒவ்வொருவரும் குழுவில் ஒத்துழைத்து செயற்படுவர்.

உ+ம் - தலைவர்:- தமது குழுவுக்கு வழங்கப்பட்ட செயற்பாடு தொடர்பான எண்ணக்கருவை தாமும் விளக்கிக் கொண்டு ஏனையவர்களும் விளக்கியிருப்பதை கலந்துரையாடி உறுதி செய்தல்.

செயலாளர் :- குழு உறுப்பினர்களின் கருத்துக்களை பதிவு செய்தல்.

நேரக்காப்பாளர் :- தமக்கு வழங்கப்பட்ட நேரத்தினுட் குழுவேலைகள் இடம் பெறுவதை உறுதி செய்தல்.

முகாமையாளர் :- தலைவர், ஏனையவர்களுக்கு உதவுதல்.

பேச்சாளர் :- விடயங்களை விளக்கிக் கூறுதல், முன்வைத்தல் என குழுவில் சிறப்பாக செயற்பட வழிப்படுத்தலாம்.

ஜப்பானில் பல்வேறு ஆற்றல் கொண்ட மாணவர்களை ஒன்றாக இணைத்துக் கற்பிக்கும் முறை பின்பற்றப்படுகிறது.

பின்லாந்தில் மாணவர்களை ஒன்றாக வைத்துக் கற்பிக்கும் முறை பின்பற்றப்பட்டது.

ஐக்கிய அமெரிக்கா விலும் எந்தப் பிள்ளையும் பின் தங்கிவிட இடமளிக்கக் கூடாது எனும் இலக்கை அடைய மாணவர்களின் ஆற்றல்களை கருத்திற் கொள்ளாது ஒன்றாக இணைத்துக் கற்பிக்கப்படுகின்றது. ஜப்பானில் ஆசிரியர்கள் கூட குழுவாகச் செயற்படும் முறை காணப்படுகின்றது.

எனவே பல்வேறு ஆற்றல்கள் கொண்ட மாணவர்களை குழுக்களில் இடம் பெறச் செய்து திட்டமிட்ட செயற்பாடுகளினூடாக பூகோளமயமாதலின் விளைவுகளை எதிர் கொள்ளக் கூடிய மாணவ சமுதாயத்தை உருவாக்குவோம்.

திருமதி செ.டினேஸ்
ஆசிரிய ஆலோசகர்
(ஆரம்பக் கல்வி)
வனிகாமம்.

# அமெரிக்க கூட்டுப்படையின் வான்தாக்குதலில் அப்பாவி மக்கள் 56 பேர் கொன்று குவிப்பு!

(பெய்ரூட்)

சிரியாவின் அலெப்போ மாகாணத்தில் ஐ.எஸ். இயக்கத்தினர் பிடியில் உள்ள கிராமத்தில் அமெரிக்க கூட்டுப்படை வான் தாக்குதலை நடத்தியது.

போர் விமானங்கள் ஐ.எஸ். இயக்கத்தினரின் நிலைகள் மீது குண்டுகளை வீசுவதற்கு பதிலாக தவறுதலாக மக்கள் கூட்டம் நிறைந்த பகுதிகளில் குண்டுகளை வீசியுள்ளன.


இந்த தாக்குதலில் சிறுவர்கள் 11 பேர் உடபட அப்பாவி மக்கள் 56 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். மக்கள் அந்த கிராமத்தை விட்டு வெளியேற ம்றபட்டபோது குண்டு வீச்சில் சிக்கி உயிரிழந்து விட்டதாக மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்து உள்ளது. (இ-5)





## தென்கொரியாவிலுள்ள அமெரிக்க அணுஆயுத கூடங்களை தாக்கவே ஏவுகணைகளைப் பரிசோதித்தோம்

### வடகொரியா அறிவிப்பு



(பியாங்யாங்)

தென் கொரியாவில் உள்ள அமெரிக்க அணு ஆயுதங்களை தாக்கி அழிக்கவே அடுத்தடுத்து மூன்று ஏவுகணைகளை பரிசோதித்ததாக வடகொரியா தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியில் வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது. 3 முறை அணு குண்டு வெடித்து சோதித்துள்ள அந்த நாடு, கடந்த ஜனவரி மாதம் ஐதரசன் குண்டு வெடித்து உலக அரங்கை அதிர வைத்தது.

இதற்காக அந்த நாட்டின் மீது கடுமையான பொருளாதார தடைகளை ஐ.நா. பாதுகாப்பு சபையும், அமெரிக்காவும் விதித்துள்ளன. ஆனாலும், வடகொரியா அவற்றை கண்டு கொள்ளாமல் தொடர்ந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதித்து வருகிறது.

இந்தநிலையில் கடந்த திங்கட்கிழமை அடுத்தடுத்து கண்டம் விட்டு கண்டம் பாயும் மூன்று ஏவுகணைகளை தனது கிழக்கு கடலோர பகுதியில் ஏவி வடகொரியா பரிசோதித்தது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உனனின் மேற்பார்வையில் இந்த ஏவுகணை பரிசோதனைகள் நடைபெற்றதாகவும், தென்கொரியாவுக்குள் அமெரிக்கா அணு ஆயு தங்களை குவிக்க திட்டமிட்டுள்ளவும் துறைமுக நகரம் மற்றும் விமானத் தளங்களின் தூர இலக்கை தாக்கி அழிப்பதற்கான எங்களது புதிய ஏவுகணை சோதனைகள் திட்டமிட்டபடி வெற்றிகரமாக அமைநததாக வடகொரியா பெருமிதம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தலை எதிர்கொள்ள, அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து நிறுவவுள்ள ஏவுகணை தடுப்பு கேடய அமைப்பை (Terminal High Altitude Area Defence (THAAD) system) தாக்குதல் மூலம் அழித்து நிர்மூலம் ஆக்குவோம் என வடகொரியா மிரட்டி இருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## மூன்று ஏவுகணைகளை சோதித்தது வடகொரியா



(பியாங்யாங்)

வடகொரியா வடக்கு கடற்கரையில் கண்டம் விட்டு கண்டம் பாயும் 3 ஏவுகணைகளை கடலுக்கு ஏவி இருப்பதாக அமெரிக்க மற்றும் தென்கொரிய அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஹ்வாங்ஜ பிராந்தியத்தில் இருந்து இந்த ஏவுகணைகள் ஏவப்பட்டதாகவும் அவை, சுமார் 500 முதல் 600 கிலோமீற்றர்கள் தாவியதாகவும் தென் கொரிய கூட்டுப்படை பிரதானி தெரிவித்தார்.

இதில் முதல் இரு ஏவுகணைகளும் குறுகிய தூர ஸ்கட் ஏவுகணைகள் என்றும் மூன்றாவது மத்திய தூர ரொடொங் ஏவுகணை என்றும் நம்பப்படுகிறது. வடகொரிய அச்சுறுத்தலை எதிர்கொள்ள ஏவுகணை எதிர்ப்பு முறையை நிறுவுவதாக அமெரிக்கா மற்றும் தென்கொரியா அறிவித்திருக்கும் நிலையிலேயே இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடகொரியா எந்தவொரு அணு ஆயுத அல்லது கண்டம் தாவும் ஏவுகணையை சோதிக்கவும் ஐ.நா. தடை விதித்துள்ளது.

எனினும் கடந்த ஜனவரியில் வடகொரியா நான்காவது அணு சோதனை மேற்கொண்டதை அடுத்தே அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது. புதிதாக சோதிக்கப்பட்டிருக்கும் ஸ்கட் ஏவுகணைகள் தென்கொரியாவின் அனைத்து பகுதிகளிலும் சென்று தாக்கக் கூடிய வகையில் உள்ளதாக தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-5)

## துருக்கியின் போர்விமானங்கள் ஆவேச தாக்குதல் - 20 பேர் பலி



(இஸ்தான்புல்)

ஈராக் - துருக்கி எல்லைப் பகுதியில் முகாம்களை அமைத துள்ள குர்திஷ் போராளிகளை குறிவைத்து துருக்கி நாட்டு போர்விமானங்கள் நடத்திய ஆவேச தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

ஈராக்கின் வடபகுதிக்கு சுயஆட்சி உரிமை கோரி போராடிவரும் குர்திஷ்தான் பிரிவினைவாதிகள், அந் நாட்டின் அரசுப் படைகளுக்கு எதிராக ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஈராக் மற்றும் துருக்கி நாடுகளுக்கான எல்லைப்பகுதியில் முகாம்களை அமைத்துள்ள குர்திஷ் போராளிகள், அவ்வப்போது துருக்கியின் எல்லையோர பகுதிகளிலும் அதிரடியாக தாக்குதல்களை நடத்துகின்றனர்.

கடந்தவாரம், இராணுவப் புரட்சியின் மூலம் துருக்கி ஜனாதிபதி தாயிப் எர்டோகன் தலைமையிலான ஆட்சியை கவிழ்க்க நடத்தப்பட்ட சதி ஒடுக்கப்பட்ட நிலையில், ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் குர்திஷ் போராளிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகிறது.

இந்நிலையில், ஈராக் - துருக்கி எல்லைப்பகுதியில் முகாம்களை அமைத்துள்ள குர்திஷ் போராளிகளை குறிவைத்து துருக்கி நாட்டு போர் விமானங்கள் நேற்று முன்தினம் நடத்திய ஆவேச தாக்குதலில் 20 குர்திஷ் போராளிகள் கொல்லப்பட்டதாக துருக்கி நாட்டு ஊடகங்கள் நேற்று செய்திவெளியிட்டுள்ளன.(இ-5)

## துருக்கியில் 15,000இற்கும் மேற்பட்ட கல்வித்துறை ஊழியர்கள் பணிநீக்கம்



15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களை துருக்கி கல்வி அமைச்சகம் பணி இடை நீக்கம் செய்துள்ளது.

துருக்கியின் உயர் கல்வி வாரியம், தனியார் மற்றும் அரச பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 1,500 இற்கும் மேற்பட்ட பீடாதிபதிகளை பதவி விலக உத்தர விட்டதாக அரச செய்தி முகாமை அனாடொலு தெரிவித்துள்ளது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் அதிகாரிகள் ஏற்கனவே கைது செய்யப்பட்டனர் அல்லது பணியிடை நீக்கம் அல்லது பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க மதகுரு ஃபெத்துலாக் வுலனின் இயக்கத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் 24 தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களின் உரிமங்களை துருக்கியின் ஒளிபரப்பு ஆணையம் இரத்து செய்துள்ளது.

இந்த ஆட்சிக்கவிழ்ப்பு சதிக்கு மதகுரு ஃபெத்துலாக் வுலனின் இயக்கத்தின் மீது அரசு குற்றம் சாட்டியுள்ளது. (இ-5)

## அமெ.ஜனாதிபதி வேட்பாளராக டொனால்ட் டிரம்ப் அறிவிப்பு

அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சியின் அதிகாரபூர்வ ஜனாதிபதி வேட்பாளராக டொனால்ட் டிரம்ப்பை அக் கட்சி அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் ஜனாதிபதியான ஒபாமாவின் பதவிக் காலம், இந்த ஆண்டுடன் முடிவடைவதையடுத்து புதிய ஜனாதிபதியினை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறுகிறது.


இதில், ஆளும் கட்சியாகிய ஜனநாயக கட்சி மற்றும் எதிரக் கட்சியான குடியரசுக் கட்சியின சார்பில், ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்வதற்காக வாக்கெடுப்பு நடைபெற்று முடிந்துள்ளது.

குடியரசு கட்சியில், ஜனாதிபதி வேட்பாளராக ஆக வேண்டும் என்றால், 1237 பிரதிநிதிகளின் வாக்குகள் பெற வேண்டும். இதில் சில வாக்குகளை மட்டுமே டிரம்ப் பெற வேண்டிய சூழ்நிலை நிலவி வந்தது.

இந்நிலையில், அமெரிக்க குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக டொனால்ட் டிரம்ப்பை அக் கட்சி அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. தன்னுடன் களமிறங்கிய குடியரசுக் கட்சி வேட்பாளர்களை பின்னுக்கு தள்ளியதன் மூலம், குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக டிரம்ப் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று, ஜனநாயக கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளராக முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை அறிவிக்கும் வாய்ப்பு அதிகரத்துள்ளமையினால் டொனால்ட் டிரம்ப் மற்றும் ஹிலாரி கிளிணடன் ஆகிய இருவருக்கும் இடையே நேரடி போட்டி உருவாகியுள்ளது. (இ-5)

# மேலும் 6 மாதங்களுக்கு அவசரநிலை நீடிப்பு பிரான்ஸ் பாராளுமன்றத்தில் நேற்று ஒப்புதல்




(பாரிஸ்)

**பிரான்ஸ் நாட்டின் நைஸ் நகரில் மக்கள் கூட்டத்திற்குள் கனரக வாகனம் புகுந்ததில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 85 ஆக உயர்ந்துள்ள நிலையில் அந்நாட்டில் அவசர நிலை சட்டத்தை மேலும் ஆறுமாத காலத்துக்கு நீடித்து ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே பிறப்பித்திருந்த உத்தரவுக்கு பாராளுமன்றம் நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.**


பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி இசைக் கச்சேரி அரங்கு, காற்பந்து மைதானம், ஹோட்டல்கள் என 6 இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தக் கொடூர தாக்குதலில் 125இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அந்நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

பின்னர் பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு அவசரநிலை பிரகடனம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. அடுத்தடுத்து, நீடிக்கப்பட்டுவந்த இந்த அவசரநிலை சட்டக் காலம் எதிர்வரும் 26ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்தது.

இந்நிலையில், கடந்த 14ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் தேசிய தினக் கொண்டாட்டத்தின்போது நைஸ் நகரில் நடத்தப்பட்ட வாகன தாக்குதலில் 80இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட பின்னர் அந்நாட்டில் அமுலில் இருந்துவரும் அவசர நிலை சட்டம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்படும் என பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே அறிவித்திருந்தார்.

அவரது அறிவிப்புக்கு நேற்று பிரான்ஸ் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. எதிர்வரும் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதி வரை மேலும் ஆறுமாத காலத்துக்கு நாடு முழுவதும் அவசரநிலை சட்டம் அமுலில் இருக்க பாராளுமன்ற எம்.பி.க்கள் ஒருமனதாக ஒப்புதல் அளித்துள்ளனர். (இ-5)

## மகாத்மா காந்தியை கொன்றது ஆர்.எஸ்.எஸ் ராகுலுக்கு எதிராக வழக்கு



'மகாத்மா காந்தியை கொன்றது ஆர்.எஸ்.எஸ்.' என அவதூறாக பேசிய விவகாரத்தில், வருத்தம் தெரிவிக்காவிட்டால, வழக்கு விசாரணையை எதர்கொண்டு தான்ஆக வேண்டும் என்று ராகுல் காந்தியை உச்சநீதிமன்றம் கண்டித்தது.

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, மராட்டிய மாநிலத்தில் சோனாலே என்ற இடத்தில் கடந்த ஆண்டு மார்ச் 6ஆம் திகதி நடந்த காங்கிரஸ் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், "காந்தியை கொன்றது ஆர். எஸ்.எஸ். இயக்கத்தினர் தான்" என பேசியதாக சர்ச்சை எழுந்தது.

இது தொடர்பாக பிவண்டி பகுதி ஆர்.எஸ்.எஸ். செயலாளர் ராஜேஷ் குந்தே அங்குள்ள நீதவான் நீதிமன்றில் ராகுல் காந்தி மீது அவமதிப்பு வழக்கு தொடுத்தார். வழக்கில் அவர், தனது பேச்சின் மூலம் ராகுல் காந்தி, ஆர். எஸ்.எஸ். இயக்கத்தின் நற்பெயரைக் கெடுக்க முயற்சித்தார் என குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்ற நீதவான் நீதிமன்றம் கடந்த ஜனவரி 6ஆம் திகதி விசாரணைக்கு ஆஜராகுமாறு ராகுல் காந்திக்கு அழைப்பாணை அனுப்பியது. ஆனால் அவர் வழக்கை தள்ளுபடி செய்ய கோரி உயர்நீதிமன்றை நாடினார். ஆனால் அவரது மனு உயர்நீதிமன்றில் தள்ளுபடி செய்யப்பட்டது. அதே நேரத்தில் உச்ச நீதிமன்றம் மேல் முறையீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி அவர் உச்ச நீதிமன்றில் மேல்முறையீடு செய்தார். நீதவான் நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு இடைக் கால தடை விதிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்த வழக்கு அங்கு விசாரணைக்கு வந்தபோது, அவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணியிடம் நீதிபதிகள், "ராகுல் காந்தி தனது கருத்துக்கு வருத்தம் தெரிவித்தாரேயானால், இந்த வழக்கை முடிந்து விடும்" என யோசனை தெரிவித்தனர். ஆனால் அந்த யோசனையை ராகுல் காந்தி ஏற்க மறுத்து விட்டார்.

ஆனால் நீதிபதி தீபக் மிஸ்ரா, "பஞ்சாப் அரியானா உயர்நீதிமன்ற ஆவணத்தில் நாதுராம் கோட்சே ஆர். எஸ். எஸ. தொண்டர் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. காந்தியை கோட்சே கொலை செயதார் என்பதற்கும், காந்தியை ஆர்.எஸ்.எஸ். கொலை செய்தது என்பதறகும் வித்தியாசங்கள் உணடு. நீங்கள் (ராகுல் காந்தி) ஒரு படி மேலே போய்விட்டீர்கள். நீங்கள் உறுதிபடக் கூறக் கூடாது" என கண்டித்தார்.


அதைத் தொடர்ந்து சட்டத்தரணி ஹரின் ராவல், "இந்த வழக்கில் கபில் சிபல் ஆஜராகி வாதாடவுள்ளார். 2 வார காலம் வழக்கு விசாரணையை ஒத்திவைக்க வேண்டும். பதில் மனு தாக்கல் செய்யவும் அனுமதி தர வேண்டும்" என்று கேட்டார்.

ஆனால் 2 வார காலம் அவகாசம் அளிக்க வேண்டும் என்ற அவரது கோரிக்கையை நீதிபதிகள் நிராகரித்து வழக்கு விசாரணையை 27ஆம் திகதி ஒத்திவைத்து உத்தரவிட்டனர். இனிமேல் இந்த வழக்கு தள்ளிப்போட மாட்டாது எனவும் கண்டிப்புடன் கூறினர்.

குற்ற அவதூறு வழக்கைப் பொறுத்தமட்டில் குற்றம் நிரூபிக்கப்பட்டால், குற்றவாளிக்கு 2 ஆண்டு வரை சிறைத்தண்டனை விதிக்க வழி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## துருக்கியில் ஆட்சி கவிழ்ப்பில் ஈடுபடமுயன்ற அமைப்பு இந்தியாவில் செயற்படுகின்றது

### துருக்கி தூதர் தெரிவிப்பு



(டில்லி)

துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட முயன்ற தீவிரவாத அமைப்பு இந்தியாவின் சில இடங்களில் செயற்படுவதாக துருக்கி தூதர் தெரிவித்துள்ளார்.

துருக்கியில் கடந்த 15 ஆம் திகதி இரவு இராணுவத்தின் ஒரு பிரிவினர் ஜனாதிபதி எர்துவானின் ஆட்சியை அகற்ற முயன்றனர். ஆனால் அந்த இராணுவ புரட்சியை எர்துவானின் ஆதரவாளர்கள் முறியடித்தனர். இதில் புரட்சிப்படையைச் சேர்ந்த 100 வீரர்களும் ஏர்துவானின் ஆதரவாளர்கள் 290 பேரும் உயிரிழந்தனர்.

துருக்கி இராணுவ புரட்சிக்கு அமெரிக்காவில் வசிக்கும் மதத் தலைவர் பெதுல்லா குலனே காரணம் என்று ஜனாதிபதி ஏர்துவான் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார். பெதுல்லா பெயரில் இயங்கும் "பெதுல்லாச்சி தீவிரவாத அமைப்பு" தான் ஆட்சி கவிழ்ப்பில் ஈடுபட முயன்றதாகவும் துருக்கி அரசு கூறிவருகிறது.

இந்நிலையில் பெதுல்லாச்சி தீவிரவாத அமைப்பு இந்தியாவின் சில இடங்களில செயற்படுவதாக இந்தியாவிறகான துருக்கி தூதர் பராக் அக்காபர் தெரிவித்துள்ளார்.

நேற்று டில்லியில் பேசிய துருக்கி தூதர் "இந்தியாவின் பல்வேறு நகரங்களில் பெதுல்லாச்சி தீவிரவாத அமைப்பு செயற்படுகிறது.

ஆனால் இந்தியாவில் அவர்களுக்கு இடம் அளிக்கக்கூடாது. இதுகுறித்து இந்திய அரசாங்கத்திடம் பேசியுள்ளோம்.

அரசு உரிய நடவடிக்கை எடுகக வேண்டும். இது குறித்து மேலும் விபரங்களை வெளியிட முடியாது" என்று தெரிவித்தார். (இ-5)

## காஷ்மீர் வன்முறைச் சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்குமாறு மத்திய, மாநில அரசுகளுக்கு மனிதவுரிமை ஆணையகம் நோட்டீஸ்



காஷ்மீர் வன்முறை சம்பவம் குறித்து விளக்கம் அளிக்குமாறு மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் காஷ்மீர் மாநில அரசுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் சார பில் நேற்று முன்தினம் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

காஷ்மீரில் பயங்கரவாத தளபதி பர்கான் வானியும், அவரது ஆதரவாளர்களும் பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதை தொடர்ந்து அங்கு வன் முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இந்த வன்முறை மற்றும் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் பலர் பலியானார்கள். பலர் காயம் அடைந்துள்ளனர். காஷ்மீர் வன்முறை சம்பவம் குறித்து விளக்கம் அளிக்குமாறு மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் காஷ்மீர மாநில அரசுக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் சார்பில் நேற்று முன்தினம் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "காஷ்மீரில் நடந்து வரும் வன்முறை சம்பவங்களையும், அமைதியை நிலைநாட்ட அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளையும் உன்னிப்பாக கவனித்து வருகிறோம். சம்பவம் குறித்து 2 வாரங்களுக்குள் விளக்கம் அளிக்குமாறு மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் காஷ்மீர் மாநில தலைமை செயலாளருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளது" என்று கூறப்பட்டு உள்ளது. (இ-5)




# நம்பிக்கை மோசம்!



ஒருநாள் முல்லாவிடம் ஒரு மனிதன் வந்தான்.

“முல்லா அவர்களே! எனக்குக் கொஞ்சம் பணக்கஷ்டமாக இருக்கிறது. தயவுசெய்து ஒரு பொற்காசு கடனாகக் கொடுங்கள். கூடிய விரைவில் நான் திருப்பிக் கொடுத்து விடுகி றேன்!” என்று அந்த மனிதன் கூறினான்.

அந்த மனிதனைப் பற்றி முல்லாவிற்கு நன்றாகத் தெரியும். கண்டவர்களிடம் கடன் வாங்குவது அவனுடைய வழக்கம். ஆனால், வாங்கிய கடனை அவன் திரும்பித் தரமாட்டான். அந்த மனிதன் திரும்பத் திரும்ப வந்து தனக்குத் தொந்தரவு தரவேண்டாம் என்று எண்ணிய முல்லா, அவனுக்கு ஒரு பொற்காசை அளித்தார்.

அந்த மனிதன் முல்லாவைத் தலை தாழ்த்தி வணங்கிவிட்டுப் போய்விட்டான்.

வாங்கிய கடனைத் திருப்பித் தரவேண்டுமே என்று அஞ்சி அவன தன் வீட்டுப் பக்கமே வரமாட்டான் என்பது முல்லாவின் எண்ணம். ஆனால், அவர் நினைத்ததற்கு மாறாக இரண்டொரு நாட்கள் கழித்து, கடன் வாங்கிய மனிதனே வந்து தான் வாங்கிய கடனைத் திரும்பிக் கொடுத்து விட்டான்.

சில நாட்களுக்கு பிறகு, அதே மனிதன் திரும்பவும் முல்லாவிடம் வந்தான்.

“முல்லா அவர்களே! தயவுசெய்து ஐந்து பொற்காசுகளைக் கடனாகக் கொடுங்கள். கூடிய விரைவில் நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்!” என்றான்.

முல்லா அந்த மனிதனை நோக்கி, “என்னிடம் கடன் வாங்கிய விஷயத்தில் நீ நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டாய். அதனால், உனக்குக் கடன் தரமாட்டேன்!” என்று உறுதியான குரலில் கூறினார்.

அதைக்கேட்டு அந்த மனிதன் திகைத்துவிட்டான்.

”முல்லா அவர்களே! நான் நம்பிக்கைத் துரோகம் செய்தேன் என்றா கூறினீர்கள்? நான்தான் உங்களிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டேனே!” என்றான்.

“அந்த விஷயத்தில்தான் நீ நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டாய். நான் உன்னிடம் பணம் கடன் கொடுத்தபோது, நீ திருப்பித்தர மாட்டாய் என்று நம்பினேன். ஆனால், என் நம்பிக்கைக்கு விரோதமாக நீ கடனைத்திருப்பிக் கொடுத்து விட்டாய். ஒரு வகையில் இது நம்பிக்கைத் துரோகம் தானே?

“இப்போது உன்னைப் பார்க்கும் போது வாங்கிய கடனை நீ திருப்பிக் கொடுத்து விடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது. என் நம்பிக்கைக்கு விரோதமாக நீ வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருந்து விடுவாயோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அதனால், இந்த தடவை உனக்குக் கடன் தர மாட்டேன்!”என்று கூறினார் முல்லா.

கடன் வாங்க வந்த மனிதனின் நோக்கமும அது தான். “ஒரு பொற காசுக் கடனை தான் திருப்பிக் கொடுத்து விட்டால், முல்லா நம்பிக்கை கொண்டு ஐந்து பொற்காசுகளைக் கடனாகக் கொடுப்பார் கடன் கைக்கு வந்ததும் திருப்பிக் கொடுக்காமல் இருந்து விடலாம்,’ என்று அந்த மனிதன் திட்டமிட்டிருந்தான்.

அதை எப்படியோ விளங்கிக் கொண்ட முல்லா தனக்குக் கடன் கொடுக்காமல் தவிர்த்துவிட்டார் என்பதை உணர்ந்து அந்த மனிதன் முல்லாவின் புத்திசாலித்தனத்தை எண்ணி ஆச்சரியம் அடைந்தான்.

(முற்றும்)




- கிமு 356 - ஏழு உலக அதிசயங்களுள் ஒன்றான கிரேக்கக் கோயில் ஆர்ட்டெமிஸ் கோயில் தீவைத்துக் கொளுத்தப்பட்டு அழிக்கப்பட்டது.
- 1545 - ஆங்கிலக் கால்வாயில் வைட் தீவில் முதற்தடவையாக பிரெஞ்சுப் படைகள் தரையிறங்கின.
- 1718 - ஒட்டோமான் பேரரசுக்கும் வெனிஸ் குடியரசுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டது.
- 1774 - ரஷ்யாவும் ஒட்டோமான் பேரரசும் தமது ஏழு ஆண்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.
- 1831 - பெல்ஜியத்தின் முதலாவது மன்னர் லெப்பால்ட் ஐ முடி சூடிய நாள்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவில் மனாசஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற முக்கியமான போரில் கூட்டமைப்பு அணி வெற்றி பெற்றது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் குவாமில் தரையிறங்கி ஜப்பானியப் படைகளுக்கெதிராகத் தாக்குதலை ஆரம்பித்தனர் (ஆகஸ்ட் 10 இல் இது நிறைவடைந்தது).
- 1954 - ஜெனீவா மாநாட்டில் வியட்நாம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
- 1961 - நாசாவின் மனிதரை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்தில் இரண்டாவது பயணம் மேர்க்குரி-ரெட்ஸ்டோன் 4. கஸ் கிரிசம் என்பவர் விண்வெளிக்குப் பயணித்தார்.
- 1964 - சிங்கப்பூரில் மலே இனத்தவர்களுக்கும் சீனர்களுக்கும் இடையில் கலவரம் மூண்டதில் 23 பேர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்தனர்.
- 1969 - நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்றின் ஆகியோர் அப்பல்லோ 11 விண்கலத்தில் சென்று சந்திரனில் நடந்த முதல் மனிதர் என்ற புகழைப் பெற்றனர்.
- 1972 - வட அயர்லாந்து தலைநகர் பெல்பாஸ்ட்டில் இடம்பெற்ற 22 தொடர் குண்டு வெடிப்புகளில் 9 பேர் கொல்லப்பட்டு 130 பேர் படுகாயமடைந்தனர்.
- 1977 - நான்கு நாட்கள் நீடித்த லிபிய-எகிப்தியப் போர் ஆரம்பமானது.
- 2007 - ஹரி பொட்டர் தொடர் நாவலின் கடைசிப் பாகம் வெளிவந்தது.

**பிறப்புகள**

- 1899 - ஏர்னெஸ்ட் ஹெமிங்வே, அமெரிக்க எழுத்தாளர். (இ. 1961)
- 1951 - ராபின் வில்லியம்ஸ், அமெரிக்க நடிகர். (இ. 2014)

**இறப்புகள்**

- 1920 - அன்னை சாரதாதேவி, ஆன்மிகவாதி, சுவாமி இராமகிருஷ்ணரின் மனைவி. (பி. 1853)
- 1926 - ஃபிரெடெரிக் ஹன்டர் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டக்காரர். (பி. 1886)
- 1998 - அலன் ஷெப்பர்ட், விண்வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கர். (பி. 1923)
- 2001 - சிவாஜி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர். (பி.1927)
- 2009 - கங்குபாய், இந்துஸ்தானி இசைப்பாடகி (பி.1913)
- 2010 - டேவிட் வாரன், கருப்பு பெட்டியை கண்டு பிடித்தவர்.

**சிறப்பு நாள்**

- பெல்ஜியம் - தேசிய நாள்.
- பொலீவியா - மாவீரர் நாள்.
- குவாம் - விடுதலை நாள். (1944)
- சிங்கப்பூர் - இன சமத்துவ நாள்.

# சிவாஜி கணேசன்



சிவாஜி கணேசன் புகழ் பெற்ற தமிழ் திரைப்பட நடிகர் ஆவார். விழுப்புரம் சின்னை பாப்பிள்ளை கணேசன் என்பது இவரது இயற்பெயர். இவர், பராசக்தி என்ற திரைப்படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமானார். “சிவாஜி” கணேசன், சின்னையா மன்றாயர் - ராஜாமணி அம்மாள் ஆகியோருக்கு மகனாக பிறந்தார். இவர் மனைவி பெயர் கமலா. மகன்கள் ராம்குமார் மற்றும் பிரபு. மகள்கள் சாந்தி மற்றும் தேன்மொழி. “சிவாஜி”கணேசன், திரையுலகுக்கு வரும் முன்னர் மேடை நாடகங்களில் நடித்து வந்தார். சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்ற நாடகத்தில் பேரரசர் சிவாஜியாக நடித்த கணேசனின் நடிப்புத்திறனை மெச்சிய தந்தை பெரியார், அவரை “சிவாஜி” கணேசன் என்று அழைத்தார். அன்றிலிருந்து அந்த பெயரே நிலைத்தது. “சிவாஜி” கணேசன் 300க்கும் மேற்பட்ட தமிழ் திரைப்படங்களில் நடித்துள்ளார். ஒன்பது தெலுங்குத் திரைப்படங்கள், இரண்டு ஹிந்தித் திரைப்படங்கள் மற்றும் ஒரு மலையாளத் திரைப்படத்திலும் நடித்துள்ளார். நல்ல குரல்வளம், தெளிவான, உணர்ச்சி பூர்வமான தமிழ் உச்சரிப்பு, சிறந்த நடிப்புத் திறன் ஆகியவை இவரின் சிறப்புகளாகும். நடிகர் திலகம், நடிப்புச் சக்கரவர்த்தி என்று பெரும்பாலான மக்களால் அழைக்கப்பட்டார். எனினும், நாடகத்தின் மூலம் திரைப்படங்களுக்கு அறிமுகமானதாலோ என்னவோ, இவருடைய நடிப்பில் நாடகத்துக்குரிய தன்மைகள் அதிக அளவில் தென்படுவதாகக் குறை கூறுவோரும் உண்டு. குறிப்பாக, அக்கால மேடை நாடகங்களில் தொழில் நுட்பக் குறைபாடுகளின் காரணமாக உணர்ச்சிகளை மிகைப்படுத்திக் காட்டினால் தான் பார்ப்பவர்களுக்குப் புரியும். இவர் நடித்த மனோகரா, வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற திரைப்படங்கள் வசனத்திற்காகப் பெயர் பெற்றவை. சென்னை மெரினா கடற்கரை சாலையில் சிவாஜி கணேசன் சிலை 21 ஜூலை 2011 அன்று அமைக்கப்பட்டது.

# தொகுதிவாரித் தேர்தல் முறையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை தொகுதிவாரித் தேர்தல் முறைமையின் கீழ் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இந்தத் தகவலைத் வெளியிட்டார்.

இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசார தேர்தல் முறைமையை மாற்றி புதிய தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையிலேயே 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடத்தத் திட்டமிட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை தொகுதி வாரி தேர்தல் முறைமையின் கீழ் நடத்தவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

1978 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பிற்கமைய முன்னைய தொகுதி வாரித் தேர்தல் முறைமைக்குப் பதிலாக விகிதாசார தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதனால் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டி, முரண்பாடுகள் மற்றும் மோதல்களை அடுத்தே மீண்டும் தொகுதிவாரித் தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்துவது என்ற கருத்து கடந்த பல வருடங்களாக இருந்து வந்தன. எனினும் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் போது தேர்தல் முறைமை உட்பட தற்போதைய அரசியல் சாசனத்தை மறுசீரமைப்பதாக அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த வருட இறுதிக்குள் புதிய அரசியல் சாசனத் தயாரிப்பு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அதற்கு முன்னதாகவே புதிய தேர்தல் முறைமைக்கு அமைய எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது என்று ஜனாதிபதி அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இந்தச் சந்திப்பின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் வற்வரி அதிகரிப்புக்கு தமது கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர். வற்வரி அதிகரிப்பை உச்ச நீதிமன்றம் இடைநிறுத்தியுள்ள போதிலும், அதனால் சுதந்திரக் கட்சி அங்கம் வகிக்கும் நல்லாட்சி அரசாங்கம் தொடர்பில் மக்கள் கடும் அதிருப்தியில் இருப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் எடுத்துரைத்துள்ளனர்.

இதன்போது வற்வரி அதிகரிப்பை தானும் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி, மக்கள் மீது மேலும் சுமைகளை சுமத்தும் வரி விதிப்புக்களை தவிர்க்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார். (இ-10)

# மக்களிடம் கொள்ளையடித்த பணம் மக்களிடமே வழங்கப்படவேண்டும்

## ஜீ.எல்.பீரிஸ் வலியுறுத்து

வற்வரி அதிகரிப்பு என்ற பெயரில் நல்லாட்சியால் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை மீண்டும் மக்களிடமே வழங்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வற்வரி குழப்பங்களுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

குறித்த வற்வரி அதிகரிப்பு யோசனை பாராளுமன்றத்தின் அனுமதியுடன் அல்லாமல் தன்னிச்சையாகவும், சட்டவிரோதமாகவும்கொண்டு வரப்பட்ட ஒன்றெனவும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனவே வற்வரிக்கென ஒதுக்கப்பட்ட நிதியை வைத்துக் கொண்டிருக்காமல் நீதிமன்றின் உத்தரவுக்கமைய குறித்த நிதியினை நிவாரணமாக மக்களுக்கு வழங்க



வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# இலங்கையில் விசா இன்றி 12,000 வெளிநாட்டவர்கள்

உரிய விசா அனுமதியில்லாமல் 12 ஆயிரம் வெளி நாட்டவர்கள் இலங்கையில் இருப்பதாக உள்விவகார மற்றும்வட மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. நாவீன்ன கொழும்பு பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

விசா இன்றி சுமார் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் இலங்கையில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்கின்றனர். சீனா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் பிரஜைகளே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் அதிகவில் தங்கியிருக்கின்றார்கள். இவ்வாறு சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டவர்கள் தங்கியிருக்க அனுமதியில்லை.

இந்த அனைவரையும் கைது செய்து கூடிய விரைவில் நாடு கடத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

இந்த வெளிநாட்டவர்களில் அதிகமானவர்கள் சுற்றுலா விசாக்களின் மூலம் இலங்கை வந்தவர்களாவர்.

விசா காலம் பூர்த்தியானதன் பின்னர் நாட்டில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர் என தகவல்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-10)

## இன்று ஒரு தகவல்

### தூக்கத்தைப் பறிக்கலாமா?

மிகவும் அவசியமிருந்தாலொழிய மற்றவர்கள் தூக்கத்தை நாம் கலைக்கக்கூடாது.இது ஒரு வகையில் மனிதாபிமானம் மிக்க செயலுங் கூட. இதற்காகவா என்னை எழுப்பினாய் என்று மற்றவர்கள் கேட்கக்கூட அல்ல, நினைக்கக்கூட நாம் இடந்தரக் கூடாது.

ஆனால் இந்த விதி முறையற்ற தூக்கத்திற்கும் சோம்பல் அரசர்களுக்கும் பொருந்தாது.

ஒருவரை நாம் தேடிப் போகிறோம்.அவரோ தூங்குகிறார். எழுப்பாதீர்கள் அவரை நான் அப்புறம் வருகிறேன் என்று சொல்லிவிட்டுக் கிளம்புவது தான் நாகரிகம்.மிதமான அவசரம் என்றால் ஒருதாளில் விபரங்களை எழுதிக் கொடுத்துவிட்டோ மற்றவர்களிடம் சொல்லிவிட்டோ வந்துவிடலாம்.போன் மூலமாக என்றால் பேசுபவர்களிடம் விடயத்தைச் சொல்லி எழுந்ததும் சொன்னால் போதும் என அழுத்திச் சொல்லிவிடலாம்.

எழுப்பியிருக்கலாமே! என்பார்கள். தூங்கியவர்கள் அப்படிச் சொல்வது வெறும் சம்பிரதாயத்திற்குத்தான்.

ஒருவர் தூங்குகிறார் என்றால் அவர் நமக்குக் கீழ்ப்படியும் தகுதியை உடையவராக இருந்தாலும் சரி வயதில் இளையவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் தூக்கம் நமக்குக் கிள்ளுக்கீரை என எண்ணிவிடலாகாது.

அது முறையற்ற தூக்கம் என்றால் அவர்களை எழுப்புவதில் நியாயம் இருக்கிறது. இல்லாவிட்டால் அது யாருடைய தூக்கமாக இருந்தாலும் அத்தியாவசியத் தூக்கமே!


மற்றவர்களின் தூக்கத்திற்கு நாம் இடைஞ்சலாய் இருக்கக்கூடாது.ரயிலில் சக பயணிகள் தூங்குவதற்கு இடையூறாக வளவளவென்று நமக்கு வேண்டியவர்களிடம் பேசிக் கொண்டிருப்பதும் பாட்டுக்கேட்டுக் கொண்டிருப்பதும் விளக்கைப் போட்டுக்கொண்டு படிப்பதும் அநாகரிகமான செயல்கள்.மற்றவர்களின் தூக்கத்தைக் கெடுக்க நமக்கு ஒருபோதும் உரிமை இல்லை;அது நல்ல பண்புக்கு அடையாளமுமல்ல.

நான் நியூயோர்க்கிலிருந்து பாரிசிற்கு விமானத்தில் திரும்பிக் கொண்டிருந்தபோது எனக்கு அருகில் அமர்ந்திருந்தவள் ஒரு பிரெஞ்சுப் பெண்மணி. ஓரளவு ஆங்கிலம் தெரிந்தவள். நல்ல தூக்கம் தூங்கி நான் விழித்துக் கொண்ட போது பக்கத்தில் அமர்ந்திருந்த அவளைக் காணோம். எனக்கு ஆச்சரியம் தாள வில்லை. காரணம் என்னைத் தாண்டி அவள் நடந்து போயிருக்கவே முடியாது.இட நெருக்கம் காரணமாக நான் எழுந்து வெளியே வந்தால்தான் அவள் வெளியேற முடியும். இதோ கழிவறைக்குப் போயிருந்த அவளே வந்து விட்டாள். ஓ நீங்கள் விழித்து விட்டீர்களா? என்றாள். நான் எழுந்து வெளியே வந்து அவளுக்கு வழி தந்தேன்.எப்படி என்னைக் கடந்து போனீர்கள்?என்றேன்.I Flew over you! என்றாள். அவள் வேடிக்கையாக அதாவது நான் நன்கு தூங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்துவிட்டு கைப்பிடிகள் மீது கால் வைத்துத் தாண்டியிருக்கிறாள்.நம்மால் அவர் தூக்கம் கலையக் கூடாது என்பதில் அவள் காட்டிய அக்கறை பிரெஞ்சு மக்களைப் பற்றிய எண்ணத்தையே உயர்த்திவிட்டது.எத்தகைய அரிய பண்பு.

தூங்குபவர்கள் நமக்கு உரிமையுள்ளவர்களாக இருந்தால் ஒலியும் ஒளியும் அவர்கள் தூக்கத்தைக்கெடுத்து விடாதபடி சத்தம் போடுபவர்களின் வாய்களை அடக்கி ஜன்னலை மூடி விளக்கை அணைத்து அவர்களை நிம்மதியாகத் தூங்கவிட வேண்டும்.

தூக்கம் என்பது ஓய்வு.வேறு ஒருவகையில் சொல்ல வேண்டுமானால் களைப்புப் பசிக்குத் தரப்படும் உணவு.அதைப் பறிக்க நமக்கு உரிமை இல்லை.


**லேனா தமிழ்வாணன்**



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதிச் சபாநாயகருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் 93 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் கரவெட்டி தஞ்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)




**2015 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கொமர்ஷல் வங்கி சுன்னாகம் கிளையில் அருணலு சேமிப்பை பேணிவந்த மாணவர்களுக்கான விருது வழங்கல் நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி சுன்னாகம் வங்கிக்கிளையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் றோய் றேமிகஸ் நிக்கலஸ் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் மங்கலன் மணிசேகரம் கலந்து கொண்டார்.**



தேசிய மட்டத்தில் கொழும்பில் நடைபெற்ற மாகாணங்களுக்கிடையிலான தமிழ்மொழித் தினப்போட்டியில் வடமாகாணத்திற்குட்பட்ட யாழ்.வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வில்லுப்பாட்டுப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த 16 ஆம் திகதி கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க மகாவித்தியாலயத்தில் மேற்படி போட்டி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## ராஜீவ் கொலை வழக்கு; நளினிக்கு தொடரும் சோகம்

முன்கூட்டியே நளினியை விடுதலை செய்ய சென்னை உயர்நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. முன்கூட்டியே விடுதலை செய்யக் கோரி நளினி தொடர்ந்த வழக்கை உச்ச நீதிமன்றம் முடித்து வைத்துள்ளது. உச்சநீதிமன்ற தீர்ப்பு அடிப்படையில் தமிழக அரசு முடிவு எடுக்க நீதிபதி சத்தியநாராயணன் உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் இதற்கு பதிலளித்த தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நளினியை முன்கூட்டியே விடுவிக்க முடியாது எனப் பதில் அளித்தது. இதனையடுத்து விடுதலையை எதிர்பார்த்து வழக்கு தாக்கல் செய்த நளினி ஏமாற்றமடைந்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 25 ஆண்டுகளுக்கு மேலாக நளினி சிறையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

## பாரதிராஜாவின் 'முதல் மரியாதை' யில் சிவாஜிகணேசன்

**212**

பாரதிராஜாவின் டைரக்ஷனில் சிவாஜி கணேசன் நடித்த முதல் மரியாதை படம் வெள்ளி விழா கொண்டாடியது.

**இளைய தலைமுறை**

சிவாஜிகணேசன் 50 வயதைத் தாண்டிய பிறகு, தன் வயதுக்கும் தோற்றத்துக்குக்கும் ஏற்ற வேடங்களில், இளைய தலைமுறையினருடன் இணைந்து நடித்தார்.

இதனால் கடைசி மூச்சு உள்ளவரை அவரையும் நடிப்பையும் பிரிக்க முடியவில்லை.

அவர் இப்படி இளைய தலைமுறையினருடன் இணைந்து பணியாற்றிய படங்களில் முக்கியமானது முதல் மரியாதை.

**பாரதிராஜா**

16 வயதினிலே படத்தின் மூலம் தமிழ்த்திரை உலகில் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியவர் பாரதிராஜா.

தமிழ் சினிமாவில் மண் வாசனை கமழச் செய்தவர். ஆற்றல் மிக்க இளைஞர்களை டைரக்டர்களாக உருவாக்கி, டைரக்ஷன்துறையில் ஒரு பாரம்பரியத்தை உருவாக்கியவர்.

அவருடைய மனோஜ் கிரியேஷன்ஸ் உருவாக்கிய முதல் மரியாதை, தமிழ்ப்பட உலகிற்கு சிறப்பு சேர்த்த அற்புத படைப்பு.

இப்படத்திற்கு கதை-வசனம் எழுதியவர் செல்வராஜ்.



முதல் மரியாதை படத்தில் சிவாஜியும் ராதாவும்

முதல் மரியாதையின் கதைச்சுருக்கம்:-

கிராமத்து பெரிய மனிதர் மலைச்சாமி (சிவாஜிகணேசன்). அவர் மனைவி பொன்னாத்தா(வடிவுக்கரசி).

அவள் தந்தையின் மானத்தைக் காக்க வேண்டி பொன்னாத்தாவை மலைச்சாமி மணக்க நேரிடுகிறதே தவிர, இருவரும் கணவன் - மனைவியாக வாழவில்லை.

பொன்னாத்தாவின் சுடு சொற்களால் புழுங்கிக் கொண்டிருக்கும் மலைச்சாமிக்கு, இதமான தென்றலாய் அந்த கிராமத்துக்கு வந்துசேருகிறாள் குயில் (ராதா).

பூர்வ ஜென்ம பந்தம் போல், அன்பும் பாசமும் அவர்களைத் தொடருகின்றன.

பல எதிர்பாராத திருப்பங்களுடனும் நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகளுடனும் கதை விரைந்தோடுகின்றது. கடைசியில் குயில் கொலைக் குற்றம்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறாள்.

ஒரு குடிசையில் வாழும் மலைச்சாமியின் உயிர் அவளைக் கடைசிமுறையாகச் சந்திக்க துடித்துக் கொண்டிருக்கிறது.அவரைச் சந்திக்க வருகிறாள் குயில். மலைச்சாமியின் கண்கள் திறக்கின்றன.

குயிலைப் பார்த்த நிம்மதியுடன் அவர் உயிர் பிரிகிறது.

சிவாஜி ஒரு குடிசை வீட்டில் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் காட்சியுடன் தொடங்குகிறது படம்.

கதையை பிளாஷ்பாக்கில் சொல்கிறார் பாரதிராஜா. திரையில் தெரிவது நட்சத்திரங்கள் அல்ல.

ஒரு உண்மைக் கிராமத்தில் வாழும் உண்மையான மனிதர்கள்! அந்த அளவுக்கு சலனப் படத்தை உயிரும் உணர்ச்சியும் கொண்ட காவியமாக மாற்றி விட்டார் பாரதிராஜா.

சிவாஜிகணேசன் ஏற்கனவே நடிப்பின் சிகரங்களைத் தொட்டவர்.

50 வயதைக் கடந்த பின்னரும், அவர் மீண்டும் சிகரத்தை தொட்ட படம் முதல் மரியாதை.

ராதா இப்படிக்கூட நடிப்பாரா? என்று வியக்கும் அளவுக்கு அருமையாக நடித்தார்.

வடிவுக்கரசி, ரஞ்சனி, தீபன், ஜனகராஜ் மற்றும் ஏனைய நடிகர்கள் அனைவரும் சிறப்பாக நடித்தனர்.

பூங்காற்று திரும்புமா, குருவிக்குருவி முதலான அனைத்துப் பாடல்களையும் கவிஞர் வைரமுத்து எழுதியிருந்தார்.இசை இளையராஜா.

**சிவாஜி தகவல்**

முதல் மரியாதையில் நடித்தது பற்றி சிவாஜிகணேசன் கூறியிருப்பதாவது,

பாரதிராஜாவை சின்னப்பிள்ளையில் இருந்து எனக்குத் தெரியும்.

அவர் எடுக்கும் படத்தில் நடிக்க வேண்டும் என்று ஒரு நாள் கேட்டார். எனக்கு அப்போது உடல்நிலை சரியில்லை. இருந்தாலும் சரி என்று ஒத்துக்கொண்டேன். அந்தப் படம் தான் முதல் மரியாதை. (தொடரும்)

## பூநகரி பிரதேச மக்களின் குடிநீர் பிரச்சினை குறித்து

# அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் டக்ளஸ் எம்.பி.பல கேள்விகள்

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசமானது 448.75 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேசமாகும். இங்கு 19 கிராம சேவையாளர் பிரிவுகளில் மொத்தம் 7,310 குடும்பங்களைச் சேர்ந்த 25,742 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் பிரதான தொழில்களாக கடற்றொழிலும், விவசாயமும், கால்நடைகள் வளர்ப்பும் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இம் மக்கள் யாவரும் இடம்பெயர்ந்து நிர்க்கதியாகி மீண்டும் மீளக் குடியமர்ந்து பல அத்தியாவசிய தேவைகள் போதியளவு பூர்த்தி செய்யப்படாத நிலையில் வசித்து வருகின்றார்கள்.

இம்மக்களின் அத்தியாவசிய தேவைகளில்ஒன்று குடிநீர் பிரச்சினையாகும். இப்பிரதேசத்திற்குள் முற்று முழுவதுமாக நீர் விநியோகம் செய்யக்கூடிய நீர் நிலைகள் காணப்படாமை, தற்போது இருக்கும் கிணறுகளில், குளங்களில் கோடை காலங்களில் நீர் எடுக்க முடியாத நிலை, தொடர்ந்து நீர் எடுப்பதால் நீரின் தன்மை மாறுபடல் போன்ற காரணங்களால் இக் குடிநீர் பிரச்சினையை போதியளவு தீர்க்க முடியாதுள்ளது.

இங்குள்ள 19 கிராம சேவையாளர் பிரிவுகளில் 9 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு மாத்திரமே பூநகரி பிரதேச சபையினால் நீர் விநியோகம் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது. இந்நீர் விநியோகமானது பூநகரி பிரதேச சபைக்குரிய நான்கு ரக்டர் பவுசர் மற்றும் குறைந்தளவு ஆளணியையும்கொண்டே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதனால் மேற்படி 9 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் வசிக்கும் மக்களின் குடிநீர்த் தேவையை போதியளவு பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பதாகவும், ஏனைய 10 கிராம சேவையாளர்கள் பிரிவுகளிலும் தேவைக்கான குடிநீர் போதிய அளவு இல்லை எனவும் தெரியவருகிறது. நீர் வழங்கல்மற்றும்வடிகாலமைப்புச் சபையினால் இப் பிரதேச சபைக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்த 6000 லீற்றர் கொள்ளவுடைய பவுசர் தற்போது பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில், பூநகரி



பகுதிக்கு நிரந்தரமாக நீர் வழங்கக்கூடியதான இரு திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ஒன்று - பூநகரிக் குள அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக நீரைப் பெற்றுக் கொள்வது. இதன் ஊடாக நிலத்தடி நீரை நன்னீராக மாற்றுவதன் ஊடாக குடி நீரையும், விவசாயம், கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கான நீரையும் வழங்குவது. இது நீண்ட காலத் திட்டமாகும். இரண்டாவது - இரணைமடு - யாழ்ப்பாணம் குடி நீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் அடிப்படையில் குழாய் மூலம் இப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காண முடியும். இது இடைக்காலத் திட்டமாகும். எனவே, இப்பகுதி மக்களின் கோரிக்கைகளுக்கமைவாக நான் இவ்விரு திட்டங்களையும் வலியுறுத்தி வருகின்றேன். இத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் வரை இப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவையை முன்னிறுத்தி தற்காலிக, உடனடி ஏற்பாடுகள் அவசியமாகின்றன.

மேற்படி கிராமங்களுக்கு போதியளவு குடி நீரை வழங்க 12,500 லீற்றர் கொள்ளளவு உடைய லொறி பவுசர்கள் இரண்டையும், 3,500 லீற்றர்கள் கொண்ட ரக்டருக்குரிய பவுசர்கள் இரண்டையும் பூநகரி பிரதேச சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க முடியுமா?

மேலும் 1000 லீற்றர் கொள்ளவு கொண்ட 10 தண்ணீர் தாங்கிகளை வழங்க நடவடிக்கை எடுக்க முடியுமா?

கடந்த ஆறு மாதங்களில் நீர்விநியோகத்திற்கான எரிபொருள் செலவினமாக மாத்திரம் ஏறக்குறைய நான்கு இலட்சம் ரூபா பூநகரி பிரதேச சபையால் செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இப் பகுதியானது நீண்ட கால யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு, மக்கள் இடம்பெயர்ந்து, முற்று முழுதாக மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதி என்பதால் மேற்படி பிரதேச சபைக்கான வருமானங்கள் போதியளவு அற்ற நிலையே காணப்படுகின்றது.

பூநகரி பிரதேச சபையினால் செலவிடப்பட்டுள்ள மேற்படி எரிபொருள் செலவுகளை பிரதேச சபைக்கு மீள செலுத்துவதற்கான சாத்தியங்கள் ஏதும் உள்ளனவா?

எதிர்வரும் காலங்களில் தற்காலிக ஏற்பாடாக தொடர்ந்தும் தடையின்றி இதற்கு ஏதேனும் நிதி உதவிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியுமா?

அத்துடன், முழங்காவில், நாச்சிக்குடா, கரியாலை, நாகபடுவான் ஆகிய கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கும் நோக்கத்தில் முழங்காவில் நிலத்தடி நீர்த் திட்டமும், ஜெயபுரம் மற்றும் வலைப்பாடு ஆகிய கிராம மக்களுக்கு குடி நீரை வழங்கும் நோக்கத்தில் கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டமும் கடந்த காலத்தில் திட்டமிடப்பட்டு, முன்னெடுக்கப்பட்டிருந்ததை தாங்கள் அறிவீர்கள்.

முழங்காவில் நிலத்தடி நீர்த் திட்டம் எப்போது நிறைவடையும் என்பதைக் கூற முடியுமா?

ஜெயபுரம், வலைப்பாடு கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் என்பன எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது பற்றி குறிப்பிட முடியுமா?

எனது இக் கேள்விகளுக்கான பதில்களையும், எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களையும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் வழங்குவார்கள் என எதிர்பார்க்கின்றேன் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்த விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ)

## மலசலகூடம் அமைத்துத்தருமாறு அமைச்சரிடம் மகஜர் கையளிப்பு

நெல்லியடி நகரப் பகுதியில் மலசலகூடம் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு நெல்லியடி வர்த்தக சங்கத்தால் நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் மகஜர் ஒன்று நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

முன்னாள் பிரதிச் சபாநாயகர் மு.சிவசிதம்பரத்தின் 93 ஆவது பிறந்தநாள் நிகழ்வு நேற்று முன்தினம் கரவெட்டி கஞ்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் கரவெட்டி அபிவிருத்திஒன்றியத்தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், அமைச்சர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை இந்து மா மன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் மேற்படி மகஜர் கையளிக்கப்பட்டது. (இ-5-60)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 785

Search for people, places and things    Nagendram    Home


பாஸ்கர்



சிந்து





அச்சு




அபிசா



அபிஷ்ணவி




குணம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சயனைட் குப்பி மீட்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவிலங்குதுறை பகுதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றிலிருந்து த.வி.பு என பொறிக்கப்பட்ட இலக்கத்தகடு, சேதமடைந்த நிலையிலான அடையாள அட்டை, கைக்குண்டு பழுதடைந்த நிலையிலான சயனைட் குப்பி என்பவை நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளன என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவிலங்குதுறை கிராமத்திலுள்ள காளிகோவில் வீதியில் தங்கராசா தவேந்திரன் என்பவருக்கு சொந்தமான காணியில் சுற்று வேலி அமைப்பதற்காக குழி வெட்டிக் கொண்டிருந்த போது, மேற்கண்டபொருட்கள் காணப்பட்டுள்ளன.

இதுதொடர்பில், பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து அங்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், அங்கு ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த கைக்குண்டு மற்றும் சயனைட் குப்பி மற்றும் த.வி.பு என பொறிக்கப்பட்ட இலக்கத்தகடு பழுதடைந்த நிலையிலான அடையாள அட்டை என்பவற்றை மீட்டதுடன், கைக்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரனைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-21.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.50 | 148.15 |
| பிரிட்டன் | பவுண்ட் | 188.29 | 194.69 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 158.11 | 164.13 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 145.50 | 151.34 |
| கனடா | டொலர் | 110.16 | 114.54 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 107.35 | 112.18 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.17 | 110.10 |
| இந்தியா | ரூபா | 2.1623 | ------- |
| சீனா | யுவான் | 21.7217 | -------- |

மத்திய கிழக்கு நாடு


| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.8192 |
| குவைத் | டினார் | 480.4035 |
| ஓமான் | ரியால் | 377.2482 |
| கட்டார் | ரியால் | 39.8847 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7308 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5443 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 90 | 120 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 550 | 300 | 500 | 600 | 550 | 400 | 600 |
| தக்காளி | 160 | 200 | 120 | 160 | 160 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 80 | 100 |
| கோவா | 180 | 200 | 120 | 220 | 160 | 200 | 150 |
| கரட் | 180 | 300 | 150 | 200 | 200 | 200 | 150 |
| பூசணி | 120 | 200 | 80 | 120 | 120 | 120 | 150 |
| புடோல் | 80 | 100 | 80 | 70 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 100 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 90 | 120 | 120 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 180 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 50 | 100 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | — | 150 | 120 | 160 | 150 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 150 | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 140 | 180 | 120 | 140 | 160 | 200 | 150 |
| பீற்றூட் | 150 | 100 | 120 | 140 | 120 | 160 | 160 |
| கறிமிளகாய் | 300 | 600 | 320 | 300 | 200 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 350 | 600 | 400 | 320 | 450 |
| போஞ்சி | 180 | 200 | 130 | 150 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | — | 100 | 100 | 120 | 100 | 210 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 150 | 140 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 15-25 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 400 | 50 | — | 250 | — | 160 |
| வெங்காயப்பூ | 180 | 300 | 130 | 160 | — | 200 | 200 |
| முள்ளங்கி | 50 | 100 | 150 | 80 | 80 | 100 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 50 | 30 | 60 | 60 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கொழும்பு நகரில் விமானப்படைத்தளம் மீது விடுதலைப்புலிகள் விமானத்தாக்குதல் 233



### குண்டு வீச்சு

கொழும்பில் உள்ள விமானப்படைத்தளத்தின் மீது விடுதலைப்புலிகளின் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து , விமானப் படை பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளம் என்ற இடத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பொக்கணை என்ற இடத்திலும் விமானப்படையினர் 4 மிக் ரக போர் விமானங்கள் 26-03-2007 அன்று சரமாரியாகக் குண்டுகளை வீசி தாக்கின. இதில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

இதற்கிடையே, கொழும்பு விமானப்படை தளத்தின் மீது வான்புலிகள் நடத்திய தாக்குதல் பற்றி 2 குழுக்கள் விசாரணை நடத்த அரசு உத்தரவிட்டது.

### வான்புலிகள்

கொழும்பு நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப்புலிகளிடம் இலகு ரக போர் விமானங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதன் மூலம் விடுதலைப் புலிகளிடம் கடற்புலிகள் இருப்பதைப் போல வான்புலிகள் இருப்பதும் வெளி உலகின் வெளிச்சத்துக்கு வந்தது.

விடுதலைப்புலிகள் தாங்களாகவே இந்த விமானங்களை தயாரித்துள்ளனர். இரவு நேரத்திலும் போர் விமானத்தை ஓட்டிச்சென்று தாக்குதல் நடத்தும் அளவுக்குப் பயிற்சி பெற்ற விமானிகள் அவர்களிடம் இருப்பது தெரிய வந்தது.

### தமிழ்நாட்டில் படித்தவர்

தமிழ் ஈழம் விமானப் படை என்ற வான்புலிகள் படைப்பிரிவை உருவாக்கியதில் முக்கிய பங்கு வகித்தவர் சங்கர் என்ற வைத்தியலிங்கம் சொர்ணலிங்கம் ஆவார். பருத்தித்துறையில் உள்ள ஹாட்லி கல்லூரியின் முன்னாள் மாணவரான இவர் தமிழ்நாட்டில் உள்ள இந்துஸ்தான் என்ஜினியரிங் கல்லூரியில் ஏரோநாட்டிக்கல் என்ஜினியரிங் பட்டம் பெற்றவர். ஏர் கனடாவில் ஏரோநாட்டிகல் என்ஜினியராகப் பணியாற்றி இருக்கிறார். வான்புலிகள் படைப்பிரிவின் தலைவராக இருந்த சங்கர் கடந்த 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கொல்லப்பட்டார்.

கொழும்பு விமானப்படை தளத்தின் மீது வான்புலிகள் வீசிய 4 குண்டுகளும் 40முதல் 50 அங்குல நீளமும், 10 முதல் 12அங்குல விட்டமும் கொண்டது ஆகும். இந்தக் குண்டுகள் விமானியின் கட்டுப்பாட்டின் மூலம் விமானத்திலிருந்து கீழே போடும் வகையில் பொருத்தப்பட்டிருந்தன.

மேற்கண்ட தகவல்கள் , விடுதலைப்புலிகளின் ஆதரவு இணையத்தளமான தமிழ் நெட்டில் வெளியாகின.

கொழும்பு நகரில் விடுதலைப்புலிகள் மீண்டும் விமானத்தாக்குதல் நடத்தினார்கள். அங்குள்ள எண்ணெய் சேமிப்பு கிடங்குகள் மீது விடுதலைப்புலிகளின் போர் விமானங்கள் குண்டுகளை வீசியதால் அவை தீப்பற்றி எரிந்தன.

விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்துவதாக கூறி, அப்பாவி தமிழர்கள் வசிக்கும் பகுதிகள் மீது சிங்கள இராணுவ விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வந்தன.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் 25-03-2007 அன்று கொழும்பு நகரில் உள்ள கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தின் மீது விடுதலைப்புலிகளின் போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.

### கொழும்பு நகரில் மீண்டும் குண்டுவீச்சு

இந்த நிலையில் வான்புலிகள் 29-04-2007 அன்று அதிகாலை மீண்டும் தாக்குதல் நடத்தினார்கள்.

கொழும்பு நகரில் உள்ள கொலன்னாவ பகுதியில் அரசுக்குச் சொந்தமான பெற்றோல் சேமிப்புக் கிடங்கு உள்ளது. அதேபோல் அங்குள்ள முத்துராஜவல என்ற இடத்தில் பெற்றோல் மற்றும் எரிவாயு சேமிப்புக் கிடங்கு உள்ளது. அவை புறநகர் பகுதியில் அமைந்துள்ளன.

அதிகாலை 1.45மணி அளவில் வேகமாகப் பறந்து வந்த விடுதலைப்புலிகளின் 2 போர் விமானங்கள் சரமாரியாகக் குண்டுகளை வீசின. அந்தக் குண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறின. எண்ணெய் கிடங்குகளில் தீப்பற்றிக் கொண்டது. இதனால் அந்தப்பகுதி முழுவதும் தீப்பிழம்பும் புகை மண்டலமாகக் காட்சி அளித்தது.

### பீரங்கித் தாக்குதல்

குண்டுகள் வெடித்த அதிர்ச்சியில் நகரமே குலுங்கியது.

விடுதலைப்புலிகளின் விமானங்கள் குண்டு வீசியதும் அங்கிருந்த இராணுவ வீரர் கள் உஷாராகி விமான எதிர்ப்பு பீரங்கிகள் மூலம் விடுதலைப் புலிகளின் விமானங்களை நோக்கிச் சுட்டனர். ஆனால் பலன் இல்லை. விடுதலைப் புலிகளின் விமானங்கள் வந்த காரியத்தை முடித்து விட்டு தங்கள் தளத்தை நோக்கி பத்திரமாகத் திரும்பின.

### மக்கள் பீதி


விடுதலைப்புலிகள் அந்தத் தாக்குதலை நடத்திய போது கொழும்பு நகரில் மக்கள் வீடுகளில் அவுஸ்திரேலியா இடையேயான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டு இருந்தனர். நகரில் தொடர்ந்து வானில் தீப்பிழம்பு எழுவதையும் பார்த்த அவர்கள் பதற்றத்துடன் வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர்.

இதற்கிடையே கொழும்பு நகரம் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் நகரம் இருளில் மூழ்கியது. மக்களிடையே பெரும் பீதி நிலவியது.

### விமான நிலையம்

விடுதலைப்புலிகளின் இந்த தாக்குதலைத் தொடர்ந்து கொழும்பு சர்வதேச விமான நிலையம் மின்சார நிலையங்கள் ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட முக்கிய இடங்களில் உள்ள இராணுவவீரர்கள் உசார்படுத்தப்பட்டனர். விமான எதிர்ப்பு பீரங்கிகள் தயார் நிலையில் இருந்தன.

இந்தச் சம்பவம் நடந்த போது கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சில விமானங்கள் கிளம்ப தயாராக இருந்தன.



குண்டு வீச்சில் சேதம் அடைந்த வாகனங்கள்.

(தொடரும்)

# துருக்கியில் ஆட்சிக்கவிழ்ப்பு சதிக்கு பின்னரான 'களையெடுப்பு' தீவிரம்

துருக்கியில் தோல்வி அடைந்த இராணுவ சதிப்புரட்சிக்குப் பின்னர் நாட்டில் களையெடுப்பு நடவடிக்கையை அரசு தீவிரப்படுத்தியுள்ளது. ஆயிரக்கணக்கான பொலிஸார் பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பதோடு மேலும் ஆயிரக்கணக்கான படையினர் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சதிப்புரட்சியின் பின்னணியில் இருந்ததாக குற்றம்சாட்டப்படும் மதகுருவை கையளிக்காவிட்டால்அமெரிக்காவுடனான உறவையும் மீள் பரிசீலனை செய்யப்போவதாக துருக்கி அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. நாட்டில் மீண்டும் மரண தண்டனையை அமுல்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் வலியுறுத்தியுள்ளார்.


கடந்த வெள்ளிக்கிழமை இரவு முறியடிக்கப்பட்ட இராணுவ சதிப்புரட்சிக்குப் பின்னர் இதுவரையும் பொலிஸ், சிவில் சேவை, நீதித்துறை மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 20,000 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டோ அல்லது கைது செய்யப்பட்டோ உள்ளனர். இதில் கிளர்ச்சிப் படையினர் ஆட்சியை கைப்பற்றும் முயற்சியின்போது 200இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

பரந்த அளவிலான பதில் நடவடிக்கைகள் மற்றும் நாட்டில் மீண்டும் மரண தண்டனையை அமுல்படுத்தும் முயற்சி தொடர்பில் மேற்குலக கூட்டணி அதிருப்தி வெளியிட்டிருப்பதோடு, துருக்கி, நாட்டில் சட்ட ஒழுங்கை கடைப்பிடிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்துள்ளது. நேட்டோ உறுப்பு நாடான துருக்கி இஸ்லாமிய தேசம் (ஐ.எஸ்.) குழுவுக்கு எதிரான யுத்த நடவடிக்கையில் அமெரிக்காவின் முக்கிய கூட்டணி நாடாகும்.

எனினும் அரசின் பதில் நடவடிக்கை மீது அதிருப்தி வெளியிடுபவர்கள் அரசை கவிழ்க்க ஆதரவு கொண்டவர்கள் என்று துருக்கி வெளியுறவு அமைச்சு குற்றம் சாட்டியுள்ளது.

சதிப்புரட்சி முயற்சியில் பங்கேற்ற சந்தேகத்தில் தலைநகர் அங்ஹாரா மற்றும்பெரிய நகரான இஸ்தான்புல் உட்பட மொத்தம் 8,000 பொலிஸ் அதிகாரிகள் அவர்களது பதவிகளில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர். அதேபோன்று சுமார் 1500 நிதி அமைச்சு அதிகாரிகளும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சி.என்.என் துருக்கி வெளியிட்டிருக்கும் செய்தியின்படி 30 ஆளுநர்கள் மற்றும் 50இற்கும் அதிகமான உயர் மட்ட சிவில் சேவை அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 3 மில்லியனுக்கும் அதிகமான சிவில் சேவகர்களின் விடுமுறை இடை நிறுத்தப்பட்டிருப்பதோடு, பதவி நீக்கம் செய்யப்பட்டிருககும் நீதிபதிகள் மற்றும் அரச சட்டத்தரணிகளின் எண்ணிக்கை 3,000ஐ நெருங்கியுள்ளது.



6,038 படையினர் உட்பட 7,543 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக பிரதமர் பினாலியில்திரிம் குறிப்பிட்டுள்ளார். இதில் சிலர் ஆடை களையப்பட்டு உள்ளாடையுடன் கையில் விலங்கிட்டு விளையாட்டு அரங்குகளில் நிறுத்தப்பட்டிருக்கும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. 26 இராணுவ ஜெனரல்கள் மற்றும் கடற்படை தளபதிகளை தடுப்புக்காவலில் வைக்க நீதிமன்றம் கடந்த திங்களன்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் விமானப்படை தளபதி அகின் ஒஸ்டுர்க் இந்த சதிப்புரட்சியின் இணைத் தலைவராக இருந்ததை ஒப்புக்கொண்டதாக துருக்கி அரச செய்தி நிறுவனமான அனடொலு செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் தனியார் தொலைக்காட்சியான ஹாபர் துர்க் இதற்கு முரணாக, தான் சதிப்புரட்சியை தடுக்க முயன்றதாக குறிப்பிட்டிருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட பல காயங்களோடு காணப்பட்ட தளபதி, இந்த எழுச்சியில் தனக்கு எவ்வித ஈடுபாடும் இல்லை என்று மறுத்துள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இராணுவ சதிப்புரட்சிக்கு மூளையாக செயற்பட்டவர் அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் மத குரு பதுல்லாஹ் குலன் என்று துருக்கி அரசு குற்றம் சுமத்துகிறது. எனினும் அவர் அதனை மறுத்து வருகிறார்.

குலனை நாடுகடத்த அமெரிக்காவை கோரும் ஆவணம் இந்த வாரம் பூர்த்தி செய்யப்படும் என்று எர்துவான் சி.என்.என் தொலைக்காட்சியிடம் குறிப்பிட்டுள்ளார். அவர் குற்றச் செயலில் ஈடுபட்டதற்கான ஆதாரத்தை முன்வைத்தாலேயே நாடுகடத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை அழிக்க முன்னின்றவர் பற்றி எமது நண்பர்கள் (அமெரிக்கா) ஆதாரம் கேட்பது அதிருப்தி அடையச் செய்கிறது. இந்த தருணத்தில் அவர்கள் எமது நண்பர்களா? என்ற கேள்வியும் எழுகிறது" என்று பிரதமர் யில்திரிம் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வன்முறையில் 232 பேர் கொல்லப்பட்டதாகவும் அதில் 208 பேர் அரச ஆதரவு சிவிலியன்கள், பொலிஸார் மற்றும் படையினர் என்றும் மேலும் 24 பேர் சதிகாரர்கள் என்றும் யில்திரிம் குறிப்பிட்டார். இந்த வன்முறைகளில் மொத்தம் 290 பேர் கொல்லப்பட்டதாக முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்போது கிளர்ச்சி படையினர் டாங்கிகள், தாக்குதல் ஹெலிகொப்டர்கள் மற்றும் போர் விமானங்கள் கொண்டு ஆட்சியை கைப்பற்றுவதற்காக நாடாளுமன்றம், உளவுப் பிரிவு தலைமையகங்கள் மீது தாக்குதல்களை நடத்தியதோடு இஸ்தான்புல்லின் பிரதான விமான நிலையம் மற்றும் பாலங்களை கைப்பற்ற முயன்றனர். இந்த வன்முறைகளில் மேலும் 1,400இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

மரண தண்டனை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்ற தன்னுடைய ஆதரவாளர்களின் கோரிக்கைகளை நாடாளுமன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று எர்துவான் சி.என்.என் தொலைக்காட்சியிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால், மரண தண்டனை மீண்டும் அறிமுகப் படுத்தப்பட்டால், ஐரோப்பிய ஒன்றியத்தில் சேருவதற்கான துருக்கியின் விருப்பம் நிறைவேறாமல் போகும் என்று பல ஐரோப்பியத் தலைவர்கள் எச்சரித்துள்ளனர். துருக்கி ஐரோப்பிய ஒன்றியத்தில் சேரும் முயற்சியாகவே 2004 இல் மரண தண்டனையை நீக்கியது.

இராணுவ சதிப்புரட்சி நிகழும்போது மார்மரிஸ் கடற்கரை சுற்றுலா தலத்தில் குடும்பத்தினருடன் விடுமுறையை கழித்துக் கொண்டிருந்த எர்துவான், தொலைகாட்சி ஊடே மக்களை வீதிக்கு இறங்க அழைப்பு விடுத்தார். எர்துவானால் சனிக்கிழமை அதிகாலையில் விமானத்தின் ஊடே இஸ்தான்புல் திரும்ப முடிந்தது. அப்போது அவர் வரும் விமானம் கிளர்ச்சிப்படை போர் விமானிகளுக்கு தெரிந்த போதும் அதனை சுட்டு வீழ்த்த தயக்கம் காட்டியுள்ளனர்.

மார்மரிஸில் இருந்து சற்று தாமதித்து சென்றிருந்தாலும் தான் கொல்லப்பட்டிருக்கலாம் என்று எர்துவான் திங்களன்று குறிப்பிட்டார். "எனது இரு உதவியாளர்கள் கொல்லப்பட்டார்கள், உயிர்த்தியாகம் செய்தனர்" என்று சி.என்.என்னுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார். "நான் இன்னும் 10 அல்லது 15 நிமிடங்கள் எடுத்துக் கொண்டிருந்தால் கொல்லப்பட்டு அல்லது பிடிபட்டிருப்பேன்" என்றும் தெரிவித்தார்.

இந்த இராணுவ சதிப்புரட்சியில் ஈடுபட்ட மேலும் சில படையினரை துருக்கி பாதுகாப்புபடையினர்தொடர்ந்து தேடி வருகின்றனர்.

இவர்கள் பல நகரங்களிலும் கிராமப் பகுதிகளிலும் சல்லடையிட்டு தேடப்பட்டு வருகின்றனர். எனினும் தற்போது ஆட்சிக்கவிழ்ப்பு அச்சுறுத் தல்கள் இல்லை என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ"க்கு தெரிவித்துளார்.

இராணுவ சதிப்புரட்சிக்கு முயற்சித்த சில உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த இராணுவ சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டு தொடர்ந்து ஐந்தாவது நாளாகவும் துருக்கியின் மூன்று மிகப்பெரிய நகர சதுக்கங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு அரசுக்கு ஆதரவை வெளியிட்டு வருகின்றனர். (இ-5)



## தீக்குழிக்கு பால் வார்க்கும் சடங்கு

ஏறாவூர் -04 காட்டுமாஞ்சோலை ஸ்ரீ பத்திரகாளி யம்மன் தேவஸ்தான வருடாந்த திருச்சடங்குப் பெருவிழா கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தீமிதிப்பு இடம்பெற்றது. இன்று தீக்குழிக்கு பால் வார்க்கும் தெளிவு சடங்கு , மாலை வைரவர் பூஜை என்பன நடைபெறும். (இ

## பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

க.பொ.த.(உ/த), தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைகளில் கடமையாற்றும் இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 2016.07.27 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தீவக வலயம், தென்மராட்சி வலயம், ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் அனைவரும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டால் மாத்திரமே பரீட்சைக் கடமைகளில் கடமையாற்ற முடியும் என்பதால் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## அறிவொளி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா 23 ஆம் திகதி

யாழ். மாவட்ட சர்வோதய நிறுவனத்தின் ஆதரவில் ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலைய நிர்வாகத்துடன் இயங்கும் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை மறுதினம் 23 ஆம் திகதி சனிக்கிமை பிற்பகல் ஒரு மணியளவில்யாழ். வண்ணார்பண்ணை வைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும்.

அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட சர்வோதய இணைப்பாளர் சி.யுகேந்திரா, யாழ். மாநகர சபை பொதுசன உத்தியோகத்தர் ச.லோகசிவம், வண்ணார் பண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் ச.ரூபசிங்கம், ஜே/ 88 புதிய சோனகதெரு கிராம அலுவலர் ர.சல்பீர், ஜே/ 99 வணணார்பண்ணை மேற்கு கிராம அலுவலர் திருமதி. ரஜனிகாந்த், ச.பாலசுப்பிரமணியம், யாழ்.கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் ஜெகதாரணி சத்தியசீலன்,யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை ஆசிரியர் திருமதி சாமினி சிவராஜ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் வரவேற்புரையினை முன்பள்ளி பொறுப்பாசிரியர் சதீஸ்வரன் மொமினிக்கா வழங்குவார். (இ)

## சிவத்தமிழ் அருட்சுனைஞர் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தெய்வத்தமிழ் திருக்கோவிலாக மலர்ந்துள்ள ஞானலிங்கேச்சுவரத்தில் திருக்கோவில் கருவறைகளில் செந்தமிழில் வழிபாடு இயற்றுவதற்கும் வாழ்வியல் சடங்குகளை தாய்மொழியில் ஆற்றுவதற்கும் பயிற்சி அளிக்கும் வகையில் குருகுலக்கல்வியாக அருட்சுனைஞர் (அர்ச்சகர்) பயிற்சி நெறி நடைபெற்று வருகின்றது.

திருமுருக கிருபானந்த வாரியாரினைக் குருவாகக் கொண்ட செந்தமிழ் வேள்விச்சதுரர் சத்தியவேல் முருகனார் அவர்தம் மாணாக்கர் சிவருசி சசிகுமார் தொண்டராப்பொடிகளால் குருத்தீக்கை அளிக்கப்பட்டு திருக்குடமுழுக்கு தினம் தொடக்கம் பலர் ஞானலிங்கேச்சுவரப் பெருமான் முன்றலில் இப்பயிற்சி நெறியில் தங்களை ஈடுபடுத்தி வருகின்றனர்.

இப்பயிற்சி நெறியில் சைவ உணவு பழக்கமுள்ளவராக, மது, புகைத்தலற்றவராக, ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவராக உள்ள எவரும் இணைந்து கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் இறையியல் கற்கை நெறியாக சைவ சித்தாந்தம், யோகாசனம், பிரசங்கம், பண்ணிசை, ஆற்றுப்படுத்துகை ஆகிய வடயதானங்களையும் மேலதிகமாக உள்ளடக்கி முன்னெடுககப்படவுள்ள பயிற்சிநெறியை பூர்த்தி செய்வோருக்கு தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் திருக்கோவில் பூசை, வாழ்வியல் சடங்குகளை தாய்மொழியில் ஆற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும்.

பக்தி மொழியாம் தாய்த் தமிழில் பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்வியல் சடங்குகளை ஆற்ற விரும்புவோர் திருக்கோவிலுடன் தொடர்பு கொண்டு ஒழுங்குகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்புகளுக்கு ஞானலிங்கேச்சுவரம் இணுவில் தெற்கு இணுவில். தொலைபேசி:- 075 457 5745, 077 844 5805 என அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-5)

## சாராயம் விற்ற பெண் கைது

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் சாராய விற்பனையில் ஈடுபட்ட குடும்பப்பெண் ஒருவரை போதை ஒழிப்பு பொலிஸ் பிரிவினர் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

இவரிடமிருந்து 750 மில்லி லீற்றர் சாராயமும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# ஆடி மாத இராசி பலன்கள்

## 16.07.2016–16.08.2016



*மூத்தவர்களின் ஆலோசனை முன்னேற்றத்தை தரும் என்று சொல்லும் கும்ப ராசி நேயர்களே!*

துர்முகி வருடம் ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஜென்ம ராசியிலேயே கேது சஞ்சரிக்கிறார். சப்தம ஸ்தானத்தில் ராகுவோடு குரு சஞ்சரிக்கிறார். எனவே மாதத் தொடக்கத்தில் குருவின் பார்வையால் குழப்பங்கள் அகலும். உடன் இருப்பவர்களால் நன்மை கிடைக்கும். இழப்புகளை ஈடு செய்ய எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. பணப்பற்றாக்குறை அகலும்.

உங்கள் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால், ஆரோக்கிய தொல்லை உண்டு. மனக்குழப்பம் அதிகரிக்கும். ஒரு செயலை தொடங்குவதற்கு முன்பு அதன் விளைவு எப்படி இருக்குமோ என்று சஞ்சலப்படுவீர்கள். காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும் என்றாலும், குழப்பங்கள் மேலிட்டுக் கவலையை உருவாக்கும். தன்னம்பிக்கையைத் தளரவிடாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

குல தெய்வத்தையும், குடியிருக்கும் வீட்டிற்கு அருகிலுள்ள எல்லை தெய்வத்தையும் வழிபடுவதன் மூலம், தொல்லையில் இருந்து விடுபடலாம். புத சுக்ர யோகம் இருப்பதால் விலை உயர்ந்த பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. எப்படி இருந்தாலும் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு அஷ்டம குருவால் அலைச்சல்களும், ஊர் மாற்றங்களும் நிகழ்வதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளன.

செவ்வாய் பலம் பெற்றிருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். சகோதர வர்க்கத்தினரால் ஏற்பட்ட சங்கடங்கள் மாறும். பூமி விற்பனையில் இருந்த தடைகள் அகலும். நீண்ட நாட்களுக்கு முன்பு வாங்கிப் போட்ட இடத்தை, மிகக் குறைந்த விலைக்கு கேட்கிறார்களே என்று கவலைப்பட்டிருப்பீர்கள். இப்பொழுது உயர்ந்த விலைக்கு கேட்டு உங்களை மகிழ்விக்கப் போகிறார்கள்.

கன்னி ராசியில் குரு சஞ்சரித்த பிறகு, உங்கள் எண்ணங்கள் ஈடேற சிறப்பு வழிபாடுகள் தேவை. உறவினர் பகை உருவாகாமல், அவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். மற்றவர்களிடம் ஏதேனும் பொறுப்பை ஒப்படைத்தால், அந்த வேலையில் உங்களின் மேற்பார்வை அதிகம் தேவைப்படலாம். இல்லையேல் காரியம் முடிவடையாமல் கவலையைக் கொடுக்கும்.

## வளர்ச்சி கூட வழிபாடு தேவை!

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஜுலை 24ஆம் திகதி சிம்ம ராசிக்குப் புதன் செல்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதியான புதன் சிம்மத்திற்குச் செல்லும் பொழுது, பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்களின் எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். புத்திரப் பேறுக்காக காத்திருக்கும் தம்பதிகளுக்கு புத்திர விருத்தி உண்டாகும். இனத்தாரின் ஒத்துழைப்போடு பணத தேவைகள் பூர்த்தியாகும். உறவினர்களின் இல்ல விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும். தொழிலில் பங்குதாரர்களாக




இணைவதற்கு சிலர் முன்வருவர்.

**சிம்மச் சுக்ரனின் சஞ்சாரம்!**

சிம்ம ராசிக்கு ஒகஸ்ட் முதலாம் திகதி சுக்ரன் வருகிறார். உங்கள் ராசிக்கு 4,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். எனவே சுகங்களையும், சந்தோஷங்களையும் அவர்தான் வாரி வழங்க வேண்டும். அவர் உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்தில் வரும்பொழுது, சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். சுற்றத்தார் போற்றுமளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும். பிள்ளைகளால் உதிரி வருமானம் கிடைக்கும். பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். நல்லவர்களின் தொடர்பு ஏற்படும். நகை வாங்குவதில் நாட்டம் செல்லும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**


இதுவரை உங்கள் ராசியைப் பார்த்து வந்த குருபகவான், ஒகஸ்ட் 2ஆம் திகதி அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கப்போகிறார். எனவே இனி எதிலும் கூடுதல் கவனம் தேவை. இடமாற்றம், ஊர்மாற்றம், உத்தியோக மாற்றங்கள் மட்டுமல்லாமல் பதவி மாற்றம், இலாகா மாற்றங்கள் போன்றவைகள் கூடத் தானாக வந்து சேரலாம். அதிக முயற்சியின் மூலமே ஆதாயத்தை அடைய முடியும். குடும்ப உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பது நல்லது.

இம்மாதம்வியாழக்கிழமை தோறும்விரத மிருந்து குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப்பலன்கள்**

இம்மாதம் ஒகஸ்ட் முதலாம் திகதி வரை தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லைகள் அகலும். கட்டடப் பணிகள் பூர்த்தியாகும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உடன்பிறப்புகளும் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள். பிள்ளைகளுக்கும் வேலை கிடைத்து உதிரி வருமானங்களைக் கொண்டுவந்து சேர்ப்பர். ஆன்மீகப் பயணங்கள் அதிகரிக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு விரயங்கள் அதிகரிக்கும். எதிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். நடராஜர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



*கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கும் மீன ராசி நேயர்களே!*

துர்முகி வருடம் ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே ஆறில் குரு சஞ்சரிப்பதாலும், விரய ஸ்தானத்தில் கேது வீற்றிருப்பதாலும் எதிலும் கொஞ்சம் நிதானம் செலுத்துவது நல்லது. அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதில் கூட அலைச்சல்கள் ஏற்படலாம். படிப்படியாக முன்னேற்றங்கள் வந்து கொண்டிருந்தாலும், பணப்பிரச்சினை தலைதூக்கிக் கொண்டிருக்கும்.

சந்திர மங்கள யோகத்தோடும், புத ஆதித்ய யோகத்தோடும், புத சுக்ர யோகத்தோடும் மாதம் தொடங்குவதால், கல்யாண வாய்ப்புகளுக்காகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் திடீரென வரன்கள் வந்து முடிவாகலாம். பாகப்பிரிவினைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் முடிவுக்கு வரும். பழைய வழக்குகள் சாதகமாக அமைந்தாலும், 6ஆம் இடத்து குருவின் ஆதிக்கத்தால் புதிய வழக்குகள் வந்து சேரலாம்.

தொழிலில் நண்பர்களை கூட்டுச் சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள். பழைய தொகை முடங்கிப் போய்விட்டதே என்ற கவலை அகன்று, புதிய சகாப்தம் தோன்றப் போகின்றது. அனைத்துச் சிக்கல்களில் இருந்தும் விடுபடப் போகிறீர்கள். ஆதாயம் கூடுதலாகக் கிடைக்கும் விதத்தில் குருவும் உங்கள் ராசியைப் பார்க்கப் போகின்றது.

உங்கள் ராசிக்கும் 10ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் குருபகவான். அவர் இந்த மாதம் கன்னி ராசிக்குப் பெயர்ச்சியாகி உங்கள் ராசியைப் பார்க்கிறார். அது யோகம்தான். முன்னேற்றப் பாதையில் ஏற்பட்ட முட்டுக் கட்டைகள் அகலும். பெண்வழிப் பிரச்சினைகளும், மண், பூமி வாங்குவதில் ஏற்பட்ட தாமதங்களும் அகலும். மக்கள் செல்வங்களோடு ஏற்பட்ட மோதல்கள் சரியாகும். தக்க விதத்தில் பொருளாதார முன்னேற்றம் காண்பீர்கள்.

லாபாதிபதி வக்ரம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில், பணம் வருவதில் சில தடைகள் ஏற்படலாம். பணம் தருவதாகச் சொன்னவர்கள் குழப்பத்தின் காரணமாகத் தர மறுப்பர். அரசியலில் உள்ளவர்களுக்கு மேலிடத்தின் நிர்ப்பந்தத்தால் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். தெய்வப் பற்றுமிக்க நீங்கள், திசாபுத்திக்கேற்ற தெய்வங்களை வழிபடுவது நல்லது. பொதுவாக அம்மன் வழிபாடு நிம்மதி வழங்கும்.

## பார்க்கும் குருவால் பலன் கிடைக்கும் நேரம்!

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஜுலை 24ஆம் திகதி சிம்மத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் ஆறில் சஞ்சரிக்கும் பொழுது யோகத்தை வழங்கும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். வளர்ச்சிப் பாதையில் இருந்த தளர்ச்சிகள் அகலும். உறவினர்களின் மனக்கசப்பு மாறி இணைந்து செயற்படத் தொடங்குவர். உத்தி




யோகத்தில் உயர்பதவி கிடைப்பதற்கான சூழ்நிலை உருவாகலாம். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு உண்டு.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

ஒகஸ்ட் முதலாம் திகதி சிம்ம ராசிக்கு சுக்ரன் செல்கிறார். 3,8க்கு அதிபதி 6இல் மறையும்பொழுது இன்னும் யோகம் அதிகமாகவே வந்து சேரும். பொன், பொருள் சேர்க்கை உண்டு. புதிய பாதை புலப்படும். அண்ணன், தம்பிகளின் அரவணைப்போடு எண்ணிய காரியத்தை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பிறர் போற்றுமளவிற்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முன் வருவீர்கள். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். அதிக சம்பளம் கிடைத்த செய்தி கேட்டு மகிழவீர்கள். சொத்துக்களில் நடைபெற்ற வழக்குகள் சாதகமாக முடியும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

ஒகஸ்ட் 2ஆம் திகதி சப்தம ஸ்தானத்தில் குரு சஞ்சரித்து உங்கள் ராசியைப் பார்க்கப் போகிறார். எனவே வெற்றிக்குரிய தகவல் வீடு வந்து சேரும். சுற்றத்தார் உங்கள் முன்னேற்றம் கண்டு வியப்பர். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். உடன் இருப்பவர்கள் பகையை மறந்து பணிபுரிய ஒத்து வருவார்கள். ஆரோக்கியத் தொல்லை அகலும்.

இம்மாதம் திங்கட்கிழமை தோறும் சிவனையும், உமையவளையும் வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இந்த மாதம் தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாறுதலாகி வந்த வீட்டில் மனநிம்மதி கூடும். கணவன் மனைவிக்குள் கனிவும், பாசமும் அதிகரிக்கும். ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். வருமானம் திருப்திதரும். பிள்ளைகளின் வளர்ச்சி பெருமைக்குரியதாக இருக்கும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் குறையும். தங்கம், வெள்ளி ஆபரணங்கள் வாங்கி அணியும் ஆவல் பூர்த்தியாகும். உத்தியோகத்தர்களுக்கு நினைத்த இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். அம்பிகை வழிபாடு அனுகூலம் தரும்.

(முற்றும்)

எதையும் அற்பமானது என்று கருதினால் நீயே அற்பமாகி விடுவாய்.
–தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எம் ஆசை மகனே! ஹக்கீம் நாம் கூற வேண்டியதை நீ கூறு!

போர்க்குற்றம் தொடர்பில் இராணுவத்திற்கு எதிரான விசாரணை அவசியமில்லை. போரில் நடந்த இழப்புக்களுக்கும் குற்றங்களுக்கும் தீர்வு வேண்டும் என்று தமிழ் மக்கள் அடம்பிடித்தால், நல்லிணக்கம் ஏற்பட மாட்டாது என்று தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மு. சிவசிதம்பரத்தின் 93ஆவது பிறந்த தின நிகழ்வு வடமராட்சியில் உள்ள கரவெட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போது அதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டதில் ஆச்சரியங்கள் இல்லை. ஏனெனில் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது, போர்க்குற்ற விசாரணையைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு ஜெனிவாவுக்குச் சென்ற ரவூப் ஹக்கீம் அங்கு தமிழ் மக்களுக்கு எதிராக கடும் பிரசாரம் செய்தார்.

வன்னிப் போரில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட போது, எதுவும் பேசாமல் பார்த்திருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் இப்போது, அடம்பிடித்தால் நல்லிணக்கம் ஏற்படாது என்று தமிழ் மக்களுக்கு அறிவுரை கூறுவதுதான் ஆச்சரியத்துக்குரியது.

பேரினவாத ஆட்சி அதிகாரத்தின் கொடூரத்தனங்கள் அரங்கேறிய வன்னிப் பெருநிலப்பரப்பில் அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழித்த போது அதனைப் பார்த்திருந்த ரவூப் ஹக்கீம் தமிழ் மக்களுக்கு அறிவுரை கூற எந்த வகையிலும் தகுதியற்றவர்.

அதேநேரம் அமரர் மு.சிவசிதம்பரத்தின் பிறந்த தின நிகழ்வில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொள்வது என்பது எந்த வகையிலும் பொருத்துடையதன்று.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரத்தின் பிறந்த தின நிகழ்வில் நல்லதொரு அரசியல் உரை இடம்பெற வேண்டும் என நம் தமிழ் அரசியல் தலைமை நினைத்திருந்தால்,

தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என குரல் கொடுக்கக் கூடிய சிங்கள அரசியல்வாதிகளை அழைத்து அவர்கள் உரையாற்றுவதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

இதைவிடுத்து போர்க்குற்ற விசாரணையைத் தடுக்க பாடுபட்ட ஒருவரை–தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கக்கூடாது என சதா சிந்திக்கின்றவரை அழைத்து அவரை உரையாற்றுவதற்கு ஏற்பாடு செய்தமை தமிழ் அரசியல் தலைமையின் ஒரு திட்டமிட்ட செயல் என்பது மறுக்க முடியாத உண்மை.

சரி! நல்ல நோக்கத்துடன் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அழைத்து பேச வைத்தோம் என்றால், அமைச்சர் ரவூப் ஹக்கீம் என்ன பேசினார். நடந்து முடிந்த சம்பவங்களுக்கு தீர்வு வேண்டும் என்று தமிழினம் அடம்பிடித்தால் நல்லிணக்கம் ஏற்படாது என்று பேசினார்.

இவ்வாறு கூறுவதற்கு இவர் யார்? போரில் தம் உறவுகளை இழந்தவர்களைப் பற்றி பேசாமல் விட்டு விடுங்கள் என்று கூறுகின்ற அமைச்சர் ரவூப் ஹக்கீம், வடபுலத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட நினைவை பெரும் எடுப்பில் ஏற்பாடு செய்தது ஏன்? அந்த நிகழ்வையும் மறந்து–மன்னித்து விட்டிருக்கலாம் அன்றோ! அதைச் செய்யாதவர் தமிழர்களின் இழப்புகளுக்கு தீர்வு தேடக்கூடாது என்று கூறுவது அவர் கடைப்பிடிக்கும் இஸ்லாமிய மார்க்கத்துக்கு ஏற்புடையதா? நியாயமானதா?

அட! எங்கள் தமிழ் அரசியல் தலைமைதான் நினைத்ததை, தான் கூறாமல் அமைச்சர் ரவூப் ஹக்கீமைக் கொண்டு கூறியுள்ளது. இதுதான் உண்மை.

இல்லையென்றால் அமரர் மு.சிவசிதம்பரத்தின் பிறந்த தின நிகழ்வு நினைவில்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோரின் முன்னிலையில், போர்க்குற்ற விசாரணை அவசியமில்லை என்று ரவூப் ஹக்கீம் எப்படிச் சொல்ல முடியும். ஆக, தம்பி ஹக்கீம் இனி ஒருக்கா பிரபாகரன் பிறந்த மண்ணுக்கு வந்து போர்க்குற்ற விசாரணை அவசியமில்லை, நீங்கள் அடம்பிடித்தால் எல்லாம் கெட்டுப் போய்விடும் என்று எங்கட தமிழ் மக்களுக்கு சொல்லிவை.

நாங்கள் சொல்ல வேண்டியதை நீ சொன்னால் நல்லதுதானே. இதை நீ சொல்வதற்காக அமரர் சிவசிதம்பரத்தின் பிறந்ததின நிகழ்வை ஏற்பாடு செய்கிறோம் என்று எங்கட தலைமை சொல்லாமல் அமைச்சர் ஹக்கீம் ஒருபோதும் இப்படிப் பேசியிருக்க மாட்டார் என்பதை எந்தக் கோயிலிலும் சத்தியம் செய்ய நாம் தயார்.

# படை வீரர்களுக்கான நலன்புரி திட்டங்களை மேலும் விரிவுபடுத்த ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

தாய் நாட்டின் சுதந்திரத்திற்காகவும் ஆட்புல ஒருமைப்பாட்டிற்காகவும் உயிர்த்தியாகம் செய்த படை வீரர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் இராணுவ வீடமைப்பு வேலைத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

நேற்று பிற்கல் கொழும்பு பாதுகாப்பு அமைச்சு தலைமையகத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இவ்வாறு பணிப்புரை வழங்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி இக் கலந்துரையாடலில் பங்கேற்றதுடன் அமைச் சின் செயற்பாடுகள் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

முப்படைகளைச் சேர்ந்த உறுப்பினர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களையும் செயலூக்கமான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு அறிவுரை வழங்கிய ஜனாதிபதி, படைவீரர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேறம் பற்றிக் கேட்டறிந்தார்.

பத்தரமுல்ல அகுரேகொடையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இராணுவ தலைமையகத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

கரையோரப் பாதுகாப்புக்காக கடற்படையினரின் அனுசரணையில் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் சுற்றாடல் அமைச்சு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் அமைச்சு மற்றும் கடற்படை ஆகியன ஒன்றிணைந்து இதற்கான புதியதொரு செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் தேவைப்பாட்டை இதன்போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (செ-11)

# இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அ.தி.மு.க. – தி.மு.க. கோரிக்கை

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநிலங்களவையில் அதிமுக, திமுக உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதிமுக உறுப்பினர் விஜிலா சத்யானந்த், மாநிலங்களவையில் நேற்று முன்தினம் இந்தப் பிரச்சினையை எழுப்பினார். அப்போது அவர் பேசும் போது,

"கடந்த 15ஆம் திகதி இலங்கை கடற்படை 4 தமிழக மீனவர்களை கைது செய்தது. இது மீனவர்களின் உரிமையை மீறும் செயல். கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்யவும் அவர்களது படகுகளை மீட்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விவகாரத்தில் வெளியுறவு அமைச்சகம் உடனடியாக தலையிட வேண்டும்" என்றார்.

இதையடுத்து திமுக உறுப்பினர் திருச்சி சிவா பேசும் போது, "தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் அடக்குமுறை தொடர்கிறது. அண்மையில் இந்திய கடல் பகுதியில் மீன்பிடித்த 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், அவர்களது படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர். கைதான மீனவர்களை விடுதலை செய்யவும் அவர்களது படகுகளை மீட்கவும் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார். (இ-5)

# ஐரோப்பிய நாடுகளின் தேவைக்கேற்ப மீன்களை விநியோகிக்க முடியவில்லை

## அமைச்சர் அமரவீர கவலை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன் ஏற்றுமதித் தடை அண்மையில் நீக்கப்பட்ட நிலையில், ஐரோப்பிய நாடுகளின் மீன் தேவைக்கு ஏற்றளவுக்கு, மீன்களை விநியோகிக்க முடியாத நிலையில் இருப்பதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகள் 1000 மெட்ரிக் தொன் மீன்களை கோரியுள்ளன. ஆனால உள்ளூரில் மீன்களின் கையிருப்பு குறைவாக இருப்பதால், இந்த தேவையை நிறைவு செய்ய முடியாதிருப்பதாக, கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கப்பட்ட பின்னர், 200 மெட்ரிக் தொன் மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

மீன் ஏற்றுமதி நிறுவனங்களால் 1000 மெட்ரிக் தொன் மீன்கள் கோரப்பட்ட போதும், குறைந்தளவு மீன்களே விநியோகிக்கப்படுவதால், அந்த நிறுவனங்களின் கேள்விப் பத்திரங்களை இரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** ஆதிவிநாயகர் கோவில் பிரதேசம், ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கொம்புவைத்த குளம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சத்திய தரிசனம்



## வெறுப்பும் இல்லை கோபமும் இல்லை

❖ யாரேனும் ஒருவர் உண்மையாகவே கடவுளை எங்கே காணலாம் என்று கேட்டால், விடை சொல்வதை தவிர்க்காதே. உன் இதயத்திலிருந்து எழுந்து நாவிற்கு வரும் விடையைச் சொல்லி விடு. புட்டபர்த்திக்கு அனுப்பு. உன் ஆனந்தத்தைப் பகிர்ந்து கொள்ள அழைப்பு விடு.

❖ புட்டபர்த்திக்கோ, வேறு புனிதத்தலங்களுக்கோ வரும்போது உங்கள் "கார்" சக்தி ஏற்றப்படுகிறது. உங்கள் சாதனா முயற்சியில் சக்தி ஏற்றிக் கொள்ளுங்கள். வீட்டுக்கு வந்த பிறகு "காரை" வேலையின்றிச் சும்மா வைத்திராதீர்கள். தொடர்ந்து அது இயங்கட்டும். பேட்டரி தானே சக்தி ஏற்றக் கொள்ளும். நீங்களும் உங்கள் "சத்சங்கம்", "சத் பிரவர்த்தனை", "பஜனை", "நாமஸ்மரணை" ஆகியவற்றைத் தொடரா விட்டால் வீணாகி விடும்.

❖ தியானத்துக்கேற்ற நேரம் பிரம்ம முகூர்த்தம் (காலை 3 முதல் 6 மணி வரை). ஒருவர் அதே நேரத்தில், அதே கால அளவில் ஒவ்வொரு நாளும் தியானம் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது நல்லது.

❖ நாடுகள் பல, பூமி ஒன்று அணிகள் பல, ஆணிப் பொன் ஒன்று உயிரினங்கள் பல, மூச்சுக்காற்று ஒன்று.

❖ நான் அன்புக் கண்ணாடி அணிகிறேன். விரும்பினாலும் என்னால் எவரையும் வெறுக்க இயலாது. என்னிடம் வெறுப்பும், வெஞ்சினமும் இல்லை. எச்சரிக்கவும், திருத்தவும் நான் சீறலாம். ஆனால் எப்போதும் வெறுப்பதில்லை. நான் ஆனந்தம். ஆனந்தம் மட்டுமே. நான் ஞானம், ஆனந்தம், சாந்தி! அது என் இயற்கை.

❖ எவர் முயன்றாலும், எவ்வளவு காலம் முயன்றாலும், எந்த வழிகளில் முயன்றாலும் என் சக்தி, என் ஆற்றல், என் மர்மம் புரிந்து கொள்ள முடியாதவை

# யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் கற்றல் நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பின

யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நேற்றைய தினம் வழமைக்கு திரும்பியுள்ளன.

கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட புகுமுக மாணவர்கள் வரவேற்பு நிகழ்வில் ஏற்பட்ட முரண்பாடு தமிழ், சிங்கள மாணவர்களிடையே கைகலப்பாக மாறிய நிலையில் யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் என்பவற்றில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டு பல்கலைக் கழகச் செயற்பாடுகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில் தற்போது குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன் மாணவர்கள் மத்தியிலும் அமைதி நிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களின் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் வழமை போல் நேற்றையதினம் ஆரம்பமாகியுள்ளன.

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்த வெளிமாவட்ட மாணவர்கள் வெளியேறியுள்ள நிலையில், வெளிமாவட்டத்தைச் சேர்ந்த வவுனியா வளாக மாணவர்கள் தமது வீடுகளுக்கு செல்லாது தமது விடுதிகளிலேயே அமைதியாக கடந்த தினங்களில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# சம்பியனானது யாழ்.கல்வி வலயம்



யாழ்ப்பாணக் கல்வி வலயம் தடகள மற்றும் மைதானப் போட்டிகளில் 739 புள்ளிகளையும் பெற்று 1795 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் சம்பியனாகியது. இரண்டாமிடத்தை 1041 புள்ளிகள் பெற்ற வலிகாமம் கல்வி வலயமும், மூன்றாமிடத்தை 741 புள்ளிகள் பெற்ற வடமராட்சி வலயமும், நான்காமிடத்தை 719 புள்ளிகள் பெற்ற மன்னார் வலயமும் பெற்றுக் கொண்டன. தொடர்ந்து கிளிநொச்சி -456, முல்லைத்தீவு 370, வவுனியா தெற்கு 310, துணுக்காய் - 256, தென்மராட்சி - 242, மடு - 188, வவுனியா வடக்கு - 114, தீவகம் 60 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டன.

வடமாகாண கல்வி, விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் 1795 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாணக் கல்வி வலயம் சம்பியனாகியது.

வடமாகாண விளையாட்டுப் போட்டிகளின் பெரு விளையாட்டுப் போட்டிகள் ஏற்கனவே முடிவடைந்த நிலையில், தடகள மற்றும் மைதான போட்டிகள் கடந்த 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையில் புதிதாக மீளப்புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதனடிப்படையில் பெருவிளையாட்டுப் போட்டிகளில் 1056 புள்ளிகளைப் பெற்றிருந்த

இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வெற்றிபெற்ற வீரர்களுக்கான கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார். (க)

# பாடசாலை ரீதியில் மகாஜனா முதலிடம்



வடமாகாண கல்வி, விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பாடசாலையாக வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி பெற்றுள்ளது. பெருவிளையாட்டு, தடகள மைதான போட்டிகளின் அடிப்படையில் அவ்வணி மொத்தமாக 228 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது.

வடமாகாண பெரு விளையாட்டுப் போட்டிகள் ஏற்கனவே முடிவுற்ற நிலையில், மைதான மற்றும் தடகள போட்டிகள் கடந்த 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன. இறுதிநாள் பரிசளிப்பு விழாவில் அதிக புள்ளிகளைப் பெற்ற பாடசாலைகளுக்கும் வெற்றிக்கேடயங்கள் வழங்கப்பட்டன. இதில் முதலிடத்தை தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து முறையே 10 இடங்களுக்குள் வந்த பாடசாலைகளாக, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - 152, மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயம் -127, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி - 126, அளவெட்டி அருணோதயக் கல்லூரி - 120, முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம் 119, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 108, சென்.ஜோன்ஸ் கல்லூரி 82, ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் 80, பளை மத்திய கல்லூரி - 79 ஆகியன பெற்றுக்கொண்டன. (க)

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப்போட்டி முடிவுகள்

(தொடர்ச்சி)

**21 வயது பெண் 5000மீற்றர்**

முக்கொம்பன் அ.த.க.பாடசா லையைச் சேர்ந்த கே. வான்மதி முதலாமிடத்தையும் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த பி. மகிழ்நிலா இரண்டாமிடத்தையும் இளவாலை கன்னியர் மடம் ம.வியைச்சேர்ந்த கே.கஜரூபி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**19 வயது ஆண்கள் 5000 மீற்றர்**

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பி. ஜனார்த்தனன் முதலாமிடத்தையும் நெளுக்குளம் கலைமகள் ம.வியைச்சேர்ந்த எஸ்.கிந்துஸன் இரண்டாமிடத்தையும் உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தைச்சேர்ந்த இ.அனுஜன் மூன்றாமிட த்தையும் பெற்றுக் கொண்டனர்.

**21 வயது ஆண்கள் 5000 மீற்றர்**

முருங்கன் ம.வியைச்சேர்ந்த வி.ஹரிகரன் முதலாமிடத்தையும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.அலக்ஸ் இரண்டாமிடத்தையும் அருணோதயா கல்லூரியைச் சேர்ந்த ஆர்.கண்ணன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**21 வயது ஆண்கள் கோலூன்றி பாய்தல்**

அருணோதயாக்கல்லூரியைச் சேர்ந்த எம்.சாள்ஸ் அன்ரனி முதலாமிடத்தையும் பி.பிரேம்கஜன் இரண்டாமிடத்தையும் வித்தியானந்தாக்கல்லூரியைச்சேர்ந்த பி.நிருஜன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**21 வயது பெண் நீளம் பாய்தல்**

முருங்கன் ம.வியைச்சேர்ந்த ஏ.வினிபேர்ட் ஜஸ்மிதா முதலாமிடத்தையும் நானாட்டான் ம.வியைச் சேர்ந்த வை.கஜந்தினி இரண்டாமிடத்தையும் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச்சேர்ந்த எஸ்.வினுசிகா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**15வயது பெண்கள் தட்டெறிதல்**

வடமராட்சி இந்துபெண்கள் பாடசாலையைச் சேர்ந்த எஸ்.ஜனோசா முதலாமிடத்தையும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜே.விதுசிகா இரண்டாமிடத்தையும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த எ.மதுஸா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**17 வயது ஆண்கள் முப்பாய்ச்சல்**

கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த எஸ்.டெனிஸன் முதலாமிடத்தையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கே.கவிலவன் இரண்டாமிடத்தையும் பாண்டியன்குளம் ம.வியைச் சேர்ந்த பி.நிருஜன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**19 வயது பெண்கள் குண்டு போடுதல்**

உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சுகந்திகா முதலாமிடத்தையும் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையைச் சேர் ந்த கே.சாகித்தியா இரண்டாமிடத்தையும் விக்டோறியா கல்லூரியைச்சேர்ந்த எஸ். ஜெவமலர் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**15 வயது ஆண்கள் உயரம் பாய்தல்**

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். றதுஸிகன் முதலாமிடத்தையும் மடுகந்த தேசிய பாடசாலையைச்சேர்ந்த எஸ்.எம்.ஜி.உதயங்க இரண்டாமிடத்தையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச்சேர்ந்த ஆர். வேணுகாந்த் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**21 வயது பெண்கள் ஈட்டி எறிதல்**

மகாஜனாக்கல்லூரியைச்சேர்ந்த ஜெ.அனித்தா முதலாமிடத்தையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.சர்மிலா இரண்டாமிடத்தையும் மடுகந்த தேசிய பாடசாலையைச் சேர்ந்த எம்.இந்துமதி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**17 வயது பெண்கள் கோலூன்றி பாய்தல்**

மகாஜனாக்கல்லூரியைச்சேர்ந்தசிஹெறினா முதலாமிடத்தையும் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.திவ்வியா இரண்டாமிடத்தையும் அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.ஜெனிஷா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**19 வயது பெண்கள் நீளம் பாய்தல்**

உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த எஸ். அஹறாணி முதலாமிடத்தையும் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த எல்.பானுசா இரண்டாமிடத்தையும் கௌரியம்பாள் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த பி.பிரியதர்சினிமூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**17வயது ஆண்கள் தட்டெறிதல்**

ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ரி. அபிசாந் முதலாமிடத்தையும் பி.ஆனந்த் இரண்டாமிடத்தையும் எம்.அபிராம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**13 வயது பெண்கள் 100 மீற்றர்**

சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த எம்.நிருத்திகா முதலாமிடத்தையும் சென்.ஆன்ஸ் ம.ம.வியைச் சேர்ந்த ஜே.அபிஷா மார்க் இரண்டாமிடத்தையும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த கே.மிதுஷா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**13வயது ஆண்கள் 100 மீற்றர்**

கனகரட்ணம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.நிலவன் முதலாமிடத்தையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த செந்தீஸ் இரண்டாமிடத்தையும் வள்ளிபுனம் இரண்டாம்தர உயர் தரப்பாடசாலையைச் சேர்ந்த எஸ்.சஞ்ஜீவன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**17 வயது பெண்கள் 800 மீற்றர்**

கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.டென்சிகா முதலாமிடத்தையும் அடம்பன் ம.ம.வியைச் சேர்ந்த எம்.மேரி ஜென்சி இரண்டாமிடத்தையும் தட்சனாமருதமடு அ.த.க.பாடசாலையைச்சேர்ந்த என்.நிவேதிகா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**19 வயது பெண்கள் 800 மீற்றர்**

தட்சனாமருதமடு அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த பி.பிரியங்கா முதலாமிடத்தையும் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த எஸ்.விதுசா இரண்டாமிடத்தையும் கற்கிடந்தகுளம் றோ.க.த.க.பாடசாலையைச்சேர்ந்த எஸ்.மதுரா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**21 வயது பெண்கள் 800 மீற்றர்**

நானாட்டான் ம.வியைச்சேர்ந்த பி.தீபா முதலாமிடத்தையும் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.மகிழ்நிலா இரண்டாமிடத்தையும் என்.யாழிசை மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**17 வயது ஆண்கள் 800 மீற்றர்**

பாத்திமா ம.ம.வியைச் சேர்ந்த என்.கிளஸ்ரன் முதலாமிடத்தையும் கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.ரேனுஜன் இரண்டாமிடத்தையும் பாலிநகர் ம.வியைச் சேர்ந்த ஜெ.ஜினேஸ்குமார் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**19 வயது ஆண்கள் 800 மீற்றர்**

பாத்திமா ம.ம.வியைச்சேர்ந்த ஏ.அபினாஷ் முதலாமிடத்தையும் அரிப்பு றோ.க.த.க.பாடசாலையைச்சேர்ந்த ஜே.ஏ.றோஜன் பெர்னாண்டோ இரண்டாமிடத்தையும் யாழ். மத்திய கல்லூரியைச்சேர்ந்த எஸ்.சீந்துரன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**21 வயது ஆண்கள் 800 மீற்றர்**

உடுப்பிட்டி அ.மி. கல்லூரியைச்சேர்ந்த எஸ்.சக்தியன் முதலாமிடத்தையும் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர்.கவின் இரண்டாமிடத்தையும் முருங்கன் ம.வியைச் சேர்ந்த வி.ஹரிகரன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**13வயது பெண்கள் நீளம் பாய்தல்**

கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசா லையைச் சேர்ந்த என்.யதுர்சனா முதலாமிடத்தையும் உயரப்புலம் மெ.மி. த.க.பாடசாலையைச் சேர்ந்த எஸ்.சிலோஜா இரண்டாமிடத்தையும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜி.விவேகா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**19 வயது ஆண்கள் உயரம் பாய்தல்**

சென்.ஹென்றீஸ் கல்லூரியைச்சேர்ந்த ஏ.டக்சன் முதலாமிடத்தையும் அருணோதயாக்கல்லூரியைச் சேர்ந்த எஸ்.யதுர்சன் இரண்டாமிடத்தையும் யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜெ.சஜீப் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**17வயது பெண்கள் குண்டு போடுதல்**

உடுவில் மகளிர் கல்லூரியைச்சேர்ந்த எஸ்.ஜஸ்மி முதலாமிடத்தையும் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த பி.டிலக்ஷனா இரண்டாமிடத்தையும் ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த எம்.தமிழ்நிலா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**13 வயது பெண்கள் 200 மீற்றர்**

சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த எம். நிருத்திகா முதலாமிடத்தையும் கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த என்.யதுர்சனா இரண்டாமிடத்தையும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த கே.மிதுஷா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

**15 வயது பெண்கள் 200 மீற்றர்**

சிலாவத்துறை ஜி.எம்.எம். பாடசாலையைச் சேர்ந்த ஜே.அபிஷா முதலாமிடத்தையும் அழகல்ல வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர்.எம்.பி. சமனலி இரண்டாமிடத்தையும் கரணவாய் ம.வி.யைச் சேர்ந்த ரி.கம்சாயினி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

**17வயது பெண்கள் 200 மீற்றர்**

கற்கிடந்தகுளம் றோ.க.த.க.பாடசாலையைச்சேர்ந்த எ.அனுசலா முதலாமிடத்தையும் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த யு.மானழிதா இரண்டாமிடத்தையும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஏ.மேரி தர்சிகா மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

(தொடரும்...)

## பல்கலை மாணவர்...

விஞ்ஞான பீட இரண்டாம் வருட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட இந்த நிகழ்வில், புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வினை தமிழ் பாரம்பரிய முறைப்படி தவில், நாதஸ்வர இசையுடன் அழைத்து வருவது எனவும், சிங்கள கலாசார நிகழ்விற்கு மண்டபத்திற்குள் அனுமதியும் வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டு நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

சம்பவ தினமன்று மாணவர்கள் அனைவரும் தவில் நாதஸ்வர இசையுடன் அழைத்து வரப்படும் போது, திடீரென நிகழ்ச்சி ஒருங்கிணைப்புக்கு மாறாக சில வெளிக்கலைஞர்களுடன் கண்டிய நடனம் கொண்டுவரப்பட்டது. எவ்வித முன்னறிவித்தலும் இன்றியும், பல தசாப்தகால வழமையை மாற்றும் நோக்குடனும் கண்டிய நடனம் கொண்டு வரப்பட்டதால்,

தமிழ் மாணவர்கள் தலையிட்டு இந்த நிகழ்வு தமிழ் பாரம்பரியத்துடனே நடைபெற வேண்டும் எனவும், உள்ளே சிங்கள நிகழ்வுகளுக்கான அனுமதி உண்டு எனவும் சுட்டிக்காட்டினார்கள். இதனை சிங்கள மாணவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்ததன் காரணமாக இரு தரப்பு மாணவர்களிடையேயும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதல் அடிதடி வரைக்கும் சென்றிருந்தது.

இதில் இருதரப்பு மாணவர்களும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டும் சிலர் அச்சுறுத்தலுக்கு பயந்து தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிங்கள மாணவர்களில் நால்வரில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த மாணவன் வைத்திய சாலையில் தனது வாக்கு மூலத்தில் யாழ்.பலகலைக்கழக மாணவனே தன்னை பயங்கரமாக தாக்கியதாக தெரிவித்துள்ளார். இந்த வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் தங்கேஸ்வரன் சிசிதரன் உட்பட மூவரை கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

எனினும் குறித்த கைது நடவடிக்கை பொலிஸாரின் தலையீட்டுடன் இடம்பெற்றால் யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் மத்தியில் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தும் என அவசர அவசரமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பொலிஸ்மா அதிபருடனும், சட்டம் ஒழுங்கு அமைச்சரிடமும் பேசியிருந்தது. இதன் போது மாணவனை பல்கலைக்கழக நிர்வாகம் சார்ந்தோரே நீதிமன்றுக்கு அழைத்து வருவதாகவும் பொலிஸ்மா அதிபருக்கு உறுதியளிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் நேற்றைய தினம் குறித்த மாணவன் நீதிமன்றுக்கு பல்கலைக்கழக சமூகம் சார்ந்தோரினால் அழைத்து வரப்பட்டு, சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், கே.சயந்தன் ஆகியோர் ஊடக நீதிமன்றில் சரணடைந்தார். இதன்போது குறித்த மாணவனை பிணையில் விடுதலை செய்ய அனுமதிக்குமாறு மேற்படி சட்டத்தரணிகள் இருவரும் பிணை விண்ணப்பம் செய்தனர்.

இதில் குறித்த மாணவன் ஏன் மோதல் சம்பவத்திற்குள் நுழைய வேண்டி வந்து என்றும், மாணவன் சிங்கள மாணவர் மீது தாக்குதல் தொடுத்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை எனவும், மாறாக அடிவாங்கும் காணொளிகளே ஆதாரங்களாக உள்ளன எனவும், இவரை தனியொரு மாணவராக அணுகாமல், மாணவர் ஒன்றிய தலைவராகவே அணுக வேண்டும் எனவும்,

மாணவன் விளக்கமறியலில் வைக்கப்பட்டால் பல்கலைக்கழகத்தின் இயல்பு நிலைக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் சட்டத்தரணிகளால் வாதங்கள் முன்வைக்கப்பட்டது. எனினும் மாணவனை பிணையில் விடுவிப்பதற்கு பொலிஸ் தரப்பு கடும் எதிர்ப்பை தெரிவித்தது. எனினும் மாணவனை இரண்டு இலட்சம் ரூபாய் இரு ஆட்பிணையில் செல்வதற்கு யாழ்.நீதவான் எஸ்.சதீஸ்கரன் அனுமதியளித்துள்ளார்.

மேலும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றையும் வழங்குமாறும் குறித்த மாணவனுக்கு மன்றினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை கைது செய்யவுள்ளதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்திருந்த ஏனைய இரு மாணவர்கள் மீதான நடவடிக்கைகள் குறித்து பொலிஸ் தரப்பு எந்த தகவலையும் வெளியிடவில்லை. குறித்த வழக்கு அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (செ-4)

## போர்க்குற்றம்...

பதே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாடு.

அடுத்த வாரமளவில் அமைக்கப்படவுள்ள இந்த விசேட குழு பொறுப்புக்கூறும் பொறிமுறை தொடர்பிலான தனது பரிந்துரை களை சமர்ப்பிக்கும்.

இந்தப் பரிந்துரைகள் மனோரி முத்தெட்டுவேகம தலைமையிலான நல்லிணக்க பொறிமுறை செயலணியிடம் சமர்ப்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களை உள்ளடக்கிய பொறுப்புக் கூறும் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழு இலங்கை தொடர்பான தீர்மானத்தில் பரிந்துரைத்திருந்தது.

அத்துடன், பொறுப்புக்கூறும் பொறிமுறையில் சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம் என சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

அதேவேளை, பொறுப்புக்கூறும் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஒற்றையாட்சி...

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இவர்களுடைய ஏமாற்று நாடகங்களில் இருந்து தமிழ் மக்கள் விடுபடா விட்டல் இறுதியில் தமிழ் மக்களே ஏமாற்றத்திற்கு உள்ளாவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ள ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி எனும் தீர்வு திட்டம் இந்த வருடத்தின் புதிய கண்டுபிடிப்பு எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விமர்சித்துள்ளார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அண்மைக்காலமாக தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு திட்டம் தொடர்பில் கூறிவரும் கருத்துக்கள் குறித்து நேற்று புதன்கிழமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி எனும் புதிய சொற்பதத்தை கூறி வருகின்றமை குறித்து ஊடகவியலாளர்கள் கேட்ட போதே அவர் இவ்வாறு சாடினார். அவர் அங்கு மேலும் கூறுகையில், சம்பந்தனின் புதிய கண்டுபிடிப்பு ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்பது. இது புதிய கண்டுபிடிப்பா பழைய கண்டுபிடிப்பா என்ற விவாதத்திற்கு இடமில்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேர்தலின் போது ஒரு வாக்குறுதியை அளித்து போட்டியிட்டனர். ஏனைய கட்சிகள் பொய் வாக்குறுதி அளிக்கின்றார்கள் என சொன்னாலும் கூட, தமது மக்களுக்கு சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் சமஷ்டி தான் தீர்வு என்று ஆணித்தரமாக கூறி வாக்குகளைப் பெற்றார்கள். சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் சமஷ்டி தீர்வு என்றால், அதில் ஒரு தீர்வு மட்டுமே இருக்கின்றது.

இதற்கு பலவிதமான தீர்வுகளைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. சமஷ்டி பல முறைகள் இருக்கின்றன. அவற்றில் எந்த சமஷ்டி என்பது மிக முக்கியமானது. எவ்வளவோ அழிவுகளை சந்தித்த மக்கள், இவர்களது நடவடிக்கைகளால் மீண்டும் மீண்டும் அழிவுகளையும், ஏமாற்றங்களையும் சந்தித்துக்கொண்டிருக்க கூடாது. தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சில் சமஷ்டி, சுயநிர்ணய உரிமை என்று சொன்னாலும் கூட, வெறுமனவே கோசங்களாக மாத்திரமே அவை உள்ளன.

நடைமுறையில் ஒற்றையாட்சியை தான் இவர்கள் கேட்கப் போகின்றார்கள். கண் முன்னே ஏமாற்றப்பட போகின்றோம். தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கண்டுபிடித்த ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்பதனை ஏன் தேர்தல் காலத்தில் சொல்லவில்லை .

ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்ற விடயத்தினை 40 வருடங்களாக அரசியலில் இருக்கும் அரசியல்வாதிக்கு சரியாக வெளிப்படுத்த தெரியாதா, இது நேற்று அல்லது நேற்று முன்தினம் வந்த விடயம் அல்லவே, ஒஸ்ரியா நேற்று உருவாக்கப்பட்ட நாடா தேர்தல் காலத்தில் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை மற்றும் சமஷ்டி தீர்வு என ஒரே நேரத்தில் கூறினீர்கள். சுயநிர்ணய உரிமைக்குள் சமஷ்டி என்றால்,

ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி என்று கதைக்க முடியாது. எமது மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்குகின்ற நோக்குடனேயே இது பேசப்பட்டுள்ளது. மக்களிடம் முரண்பாடாகப் பேசிய படி அவர்களை ஏமாற்றிக் கொண்டு செல்ல முடியுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு துணிச்சல் வந்துள்ளது. எனவே தமிழ் மக்கள் தமக்கு நேர போகும் ஆபத்தை உணர்ந்து செயற்பட வேண்டும். இல்லையேல் எமது அறுபது வருட கால போராட்டம் வீணாகி போய் விடும் எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (செ-4)

## 60 கிலோ...

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் கடற்கரை பகுதியில் கைமாற்ற முற்பட்ட அறுபது கிலோக்கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதாக காங்கேசன்துறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜஃபர் தெரிவித்தார்.

நேற்றுபுதன்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் கஞ்சா கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மாதகல் கடற்கரையில் வஷேட பொலிஸ் அணிகள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பணிப்புரைக்கமைய பதுங்கி இருந்தன.

இந்நிலையில் கடல்மார்க்கமாக கடத்தி வரப்பட்ட கேரள கஞ்சாவினை கைமாற்ற முற்பட்ட நிலையில் கஞ்சாவினை கைப்பற்றிய பொலிஸார் சுப்பர்மடம் பருத்தித்துறைச் சேர்ந்த 39 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரையும் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் தொடர்ந்து தீவிர விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக பொலிஸார் மேலும தெரிவித்தனர். (செ-60)

## தமிழ் மாணவர்களே...

நல்லிணக்க செயற்பாடுகளுக்கு களங்கமும் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவம் சில கடும்போக்குவாதிகள் தமது கருத்துக்களை வலுவாக முன்வைப்பதற்கு வாய்ப்பொன்று கிடைத்துள்ளது. அவர்கள் வடக்கிலும், தெற்கிலும் இருக்கின்றார்கள் தமிழர்கள் சிங்களவர்கள் என இரு தரப்பிலும் கடும் போக்குவாதிகள் காணப்படுகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக பிரச்சினைகளுக்கு உண்மையில் தமிழ் மாணவர்களே முதலாவது காரணமாவர். விஞ்ஞானபீட புதுமுக மாணவர்களை வரவேற்கும் வைபவம் பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே நிகழ்வுகளுடன் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியிலும் தமது நிகழ்ச்சிகளை (மங்கள வாத்திய வரவேற்பு) நடத்தினார்கள்.

அதன் பின்னரே சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர்களைப் பின் தொடர்ந்து பல்கலைக்கழகத்திற்கு வெளியில் சென்று தமது நடனத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் இதற்கு தமிழ் மாணவர்கள் ஒத்துழைக்காமல் முதலில் பிரச்சினையை தோற்றுவித்தார்கள். இதுவே அங்கு நடந்த உண்மைச் சம்பவம்.

பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களுக்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க தமிழ் மாணவர்களே பிரச்சினையை உருவாக்கியுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு நான்தான் காரணம் என்று கூறியும் எனது புகைப்படத்துடன் செய்திகள் சமூக வளைத்தளத்தில் ஊடகங்களில் வெளிவருகின்றன.

இது முற்றிலும் பொய்யான ஒன்று. நான் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றேன், அங்கு அனைத்து மாணவர்களையும் கண்டு கலந்துரையாடினேன். மேலும் தாக்குதலுக்குள்ளான மாணவனை வைத்தியசாலையில் சென்று பார்த்தேன். இதுதான் நடந்தது.

தற்போது நாட்டில், நல்லாட்சி நடைபெறுகின்றது, தமிழ் மற்றும் சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழும் சூழல் காணப்படுகின்றது, தேசிய கீதம் தமிழிலும் பாடப்படுகின்றது. ஆனால் இந்த ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக்கில் பலர் முயற்சித்து வருகின்றனர்.

இராணுவத்தினர் சிங்கள மாணவர்கள் ஊடாக தமிழ் மாணவர்களை தாக்கியதாக வடக்கின் சில சமூக வலைத்தளங்கள் மற்றும் பத்திரிகைகளில் தற்போது செய்திகள் வெளியாகிவருகின்றன. தெற்கில் அதற்கு எதிரான செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும் இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண்பது தொடர்பில் எவரும் கதைப்பதில்லை. என்றாலும் இதனை எவ்வாறு பெரிதாக்கலாம் என்ற கோணத்தில் சிந்திக்கின்றனர். கடும்போக்குவாதிகள் இதனை தேசிய, சர்வதேச செய்தியாக மாற்றியமைக்கும் நோக்குடன் செயற்படுகின்றனர். இராணுவம் சிங்கள மாணவர்கள் ஊடாக தமிழ் மாணவர்களை தாக்கியதாக ஒரு கதையை உருவாக்க முயல்கின்றது.

மேலும் சிங்கள மாணவர்களின் கலாசாரத்தை பின்பற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டமை தவறு என்ற வகையிலும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன. எனினும் இந்த பிரச்சினைக்கு அடிப்படை காரணத்தை கண்டறிய வேண்டும்.

அனைத்து மக்களுக்கும் தத்தமது மதத்தை, கலாசாரத்தை பின்பற்றுவதற்கான உரிமை காணப்படுகின்றது. அதனை தடுப்பது யாராக இருந்தாலும் அது குற்றமே என வடமாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (செ-4)

## கோமகன் நேற்று...

செல்ல முற்பட்டபோது நேற்றைய தினம் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அவரிடம் ரி.ஐ.டி பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணை மேற்கொண்டனர்.

ஏற்கெனவே இவருக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத்தடை நீக்கப்படாத காரணத்தாலேயே இந்த கைது இடம்பெற்றிருக்கிறது. விசாரணைகளின் பின்னர் இவர் நேற்றைய தினம் விடுவிக்கப்பட்ட போதிலும் இந்தியா செல்ல அனுமதிக்கப்படாமல் திருப்பியனுப்பப்பட்டார். (செ-9)

## இரு சடலங்கள்...


யில் வசிப்பவருமான சதாசிவம் சிவகுமா (வயது 45) என்ற ஆணின் சடலம் நண்பகல் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் இருந்து முதியவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சிறிநகர் பூந்தோட்டத்தைச் சேர்ந்த அந்தோனி மயில்வாகனம் (வயது 65) என்பவராவார்.

முதியவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-60)

# #அழுத்தம் #திணிப்பு #மோதல்...





பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் மற்றும் வடமாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் இணைந்து ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கிடையில் அண்மையில் ஏற்பட்ட கைகலப்பு ஓர் துரதிர்ஷ்டவசமான சம்பவமாகும். இது தொடர்பாக விசாரிப்பதற்காக பல்கலைக்கழகத்தினால் ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதனை வரவேற்கின்றோம்.

இச்சம்பவத்தை ஓர் சாதாரண குற்றவியல சம்பவமாகக் கருதாமல் மாணவர்கள் இவ்வாறு நடந்து கொண்டமைக்கான அடிப்படைக் காரணிகளை அறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து செயற்படுத்துவதன் மூலம்தான் இவ்வாறான நிகழ்வுகளை மீண்டும் நிகழாமல் இருப்பதனை உறுதி செய்ய முடியும்.

இவ்வாறான சம்பவங்களை வெறுமனே கண்டிப்பதாலோ, சம்பந்தப்பட்ட மாணவர்களை விசாரித்துத் தண்டிப்பதன் மூலமாகவோ நாம் உண்மையான புரிந்துணர்வையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்த முடியாது.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அவர்கள் தமக்கு நியாயங்களைக் கோரி சாத்வீக ரீதியில் மேற்கொண்ட நடவடிக்கைகளை அலட்சியம் செய்து அவற்றினை ஓர் குற்றவியல் செயற்பாடாக கருதியதன் விளைவாகவே இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நேர்ந்தது.

ஆதலினால், பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறான நிலைமைக்குச் செல்வதற்கு அடிப்படையாக இருந்த காரணிகளை முற்றாக அறிவதற்கு ஓர் ஆக்கபூர்வமான விசாரணைக்குழு அமைத்து ஒரு பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோருகின்றோம்.

இவ்வாறு செயற்படுவதன் மூலமே மாணவர்களின் உண்மையான ஆதங்கங்களை அறிந்து அதனைத் தணிப்பதற்கான வழிமுறைகளை ஆராய முடியும். மேலெழுந்த வாரியான செயற்பாடுகள் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யுமேயொழிய உண்மையான புரிந்துணர்தலை ஏற்படுத்த வழிகோலாது.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் வடக்குக் கிழக்கின் குடிப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், சுயாதீனமான போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் இழுத்தடிப்பு நிலை காணப்படும் சூழலில், பெருவாரியான பிற மாகாண மாணவ, மாணவியரை வட மாகாண பல்கலைக்கழகத்தில் சேர்த்து வருகின்றமையும், அவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் தங்கள் கலை, கலாசாரங்களை யாழ். மண்ணில் திணிக்க முனைவதும், தமிழர்களின் பாரம்பரிய வதிவிடங்களில் தமது அரசியல் விவகாரங்களைத் தாமே கையாளக் கூடிய வகையிலான அரசியல் தீர்வொன்றினை வழங்குவதில் தெளிவற்ற போக்கு இருப்பதும், வடக்குக் கிழக்கில் தேவைக்கு அதிகமான இராணுவத்தினர் தொடர்ந்து இருந்து வருவதும் இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் தீனி போட்டு வந்திருந்தனவா? போன்ற விடயங்களும் இந்த விசாரணைக் குழுவினால் ஆராயப்பட வேண்டியிருக்கும்.

இவ்வாறான சம்பவங்களை தெற்கிலுள்ள இனவாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் இலாபம் பெறுவதனைத் தடுப்பதற்கும் இவ்வாறான ஏற்பாடுகள் வழிகோலும். வடமாகாண சபை அரசியல் வேறுபாடுகள் இல்லாது இவ்விடயத்தில் கரிசனை கொண்டிருக்கின்றது என்பதை வலியுறுத்தவே இந்த அறிக்கையை நாங்கள் ஒருமித்து வெளியிடுகின்றோம் என இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# 4 மாணவர்கள்...

த்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த மோதலில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவன் ஒருவரால தன்னை தாக்கியதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது . இதன் காரணமாக நேற்றைய தினம் குறித்த மாணவர் ஒன்றிய தலைவர் யாழ நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் ஆஜராகி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த மோதலின் போது தம்மை தாக்கியதாக பெரும்பான்மையின மாணவர்கள்4 பேர் மீது நேற்றைய தினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சிசிதரனால முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.(செ-9)

# யாழ்.பல்கலை...

கண்டறிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நவசமசமாஜக் கட்சி கோரியுள்ளது.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று புதன்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் இந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையில் நாட்டில் அடிக்கடி ஏதாவது சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக சாலாவை படைமுகாமில் இடம்பெற்ற ஆயுதக் களஞ்சிய வெடிப்பு மற்றும் பொது பல சேனாவின் இனவிரோத செயற்பாடுகள் மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்தில் தற்போது இடம்பெற்றுள்ள மாணவர்களுக்கு இடையிலான மோதல்களை குறிப்பிடலாம். இந்த சம்பவங்களை அவதானிக்கும் போது இதற்கு பின்னால் சதித்திட்டங்கள் இருப்பதாகவே தோன்றுகின்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை பெரிதுபடுத்தி, சிங்கள மக்களை தூண்டிவிடும் வகையில் கூட்டு எதிரணியினர் செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. ஆனால் தெற்கில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருந்தால் சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பார்கள் என விமல் வீரவன்ஸ தெரிவித்து வருகின்றார்.

எனவே யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவர்களுக்கு இடையிலான மோதலின் பின்னணியில் சதி நடவடிக்கைகள் இருக்கலாம். இது தொடர்பான உண்மைகளை கண்டறிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-11)

புகழின்
தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான
மாபெரும் வழிகாட்டற் கருத்தரங்கு

வளவாளர்கள் :
திரு.லோ.விஜேந்திரன் (புகழ் வெளியீட்டு ஆசிரியர்)
திரு.பூ.குகதாசன் (ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி, யாழ் வலயம்)
திரு.ஜெ.ஜெயகணேஸ் (ஆசிரியர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி)
இடம் : College of Physics, பழம் றோட் சந்தி. (கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில்)
காலம் : 24/07/2016 (ஞாயிற்றுக்கிழமை) (9.00a.m - 1.30 p.m)

நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள்
1) அன்னை புத்தகசாலை - யாழ்நகர்
2) Sarankan Trade Center - யாழ் இந்துக்கல்லூரி முன்பாக
3) மகுடம் புத்தகசாலை - இணுவில்.
கருத்தரங்கு மண்டப நுழைவுக் கட்டணம் - 250/-
மேலதிக விபரங்களுக்கு :-
T.P : 077 411 8950, 077 494 0814
புகழ்
(5289)

நுழைவுச் சீட்டுக்களை கருத்தரங்கு நடைபெறும் தினத்தன்று மண்டபத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

திருச்சிற்றம்பலம்

அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்
இணுவில் தெற்கு, யாழ்ப்பாணம்.

1008 சங்குத் திருமஞ்சனம்

இலங்கையிலே முதன்முதலாக கருவறையில் செந்தமிழ் ஓதும் திருக்கோவிலான அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் ஆனது கடந்த 10.07.2016 அன்று திருக்குடமுழுக்கு கண்டு ஐந்து தள இராசகோபுரத்துடன் இணுவையம்பதியில் அழகுடன் மிளிர்கின்றது.

திருக்குடமுழுக்கின் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் திருநாட்தொகு முழுக்கின் (மண்டலாபிடேகம்) நிறைவு நாளான இன்று மாலை 3.30 மணிக்கு 1008 சங்குத் திருமஞ்சனமும் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்று இரவு 7.30 மணியளவில் சுவாமிகளின் திருவீதியுலாவும் நடைபெறும். தொடர்ந்து சிவனடியார்களுக்கு இராப்போசனம் வழங்கப்படும்.

குறிப்பு: தமது கரங்களால் 1008 சங்குத் திருமஞ்சன நிகழ்வில் பங்குபெறும் அடியார்கள் ஆலய நிர்வாகத்தினரைத் தொடர்பு கொள்ளவும்.

நன்றி
சைவநெறிக்கூடம்
அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்.
இணுவில் தெற்கு,
இணுவில்.
(5297)

Architectural CAD Center
Prsonal and Group Classes
Jaffna - Vavuniya - Colombo
Auto CAD
2D-drawing & 3D Modeling
Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD [Software (2D &3D)]
University of Peratheniya
Cert. in Auto CAD [Advance 3D - Modeling]
University of Moratuwa
Cert. in Auto CAD [2D-Drawing & 3D-Modeling]
Open University of Sri Lanka
Cert. in Auto CAD(1st Class)[2D&3D]
University of Colombo
(C-5251)
Link:0775116320-0718617972

வாடகைக்கு
01.பெரிய வீடு
02. பெரிய கடை
கிளிநொச்சி யாழ்.பல்கலைக் கழகச் சந்தி, A9 வீதி, திருமுருகண்டியில் அமைந்துள்ளது
T.P :
077 026 5657
(சி-5250)

காணி விற்பனைக்கு
சுன்னாகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் காங்கேசன்துறை பிரதான வீதியில் கடைத்தொகுதியுடன் கூடிய 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0769690597 (5272)

பல்கலைக்கழகம் செல்ல முன்னரே வேலைவாய்ப்பு
(வேலை செய்து கொண்டே பட்டக்கல்வியினை பூர்த்தி செய்யலாம்)
பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களுக்கு
வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வி
O/L உடன் Business & Hotel Management
UK Certified
CERTIFICATE ➡ DIPLOMA ➡ DEGREE
With FREE English Course
2016 A/L மாணவர்கள் JULY 30 ற்குள் பதிவினை மேற்கொண்டு 50% கட்டணக் கழிவினை வெல்லுங்கள்!
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
(C-5252)
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி கல்விப்பிரிவு

# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-21

பகுதி-II

## தமிழ்க் கல்விக் கழகம்

நேரம்:-ஒரு மணித்தியாலம் 45 நிமிடங்கள்

01) கீழே தரப்பட்ட பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

சூரிய குடும்பத்தின் பெரிய கிரரமாக வியாழக்கிரகம் உள்ளது. விண்வெளியில் இப்படி தனி ஆதிக்கம் செலுத்துவதன் காரணமாக இக் கிரகத்திற்கு ரோமானிய ஆட்சிக் கடவுளான ஜுபிடரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. சூரியனில் இருந்து ஐந்தாவதாக உள்ள இக்கிரகம் விண்வெளியில் சூரியன், நிலா, வெள்ளி கிரகங்களுக்கு பிறகு பிரகாசமாக தெரியக் கூடியதாகும். நீங்கள் ஒரு விண்கலத்தில் போய் வியாழன் கிரகத்தில் இறங்கினால் அமிழ்ந்து போவீர்கள். காரணம் இக் கிரகம் திடப்பொருட்களால் ஆனதல்ல முழுக்க முழுக்க வாயுக்கள் தான். இவை இக் கிரகத்துக்கு ஓர் அழகான வண்ணக் கலவைத் தோற்றத்தைத் தருகின்றன.

1. சூரிய குடும்பத்தில் மிகப் பெரிய கிரகம் எது?

.......................................................................................................

2. பந்தியில் குறிப்பிட்டுள்ள கிரகம் எது?

.......................................................................................................

3. பந்தியில் உள்ள இடப்பெயர் ஒன்றினை எழுதுக?

.......................................................................................................

4. கோள் என்பதனைக் குறிக்கும் ஒத்த சொல்லை தெரிந்து எழுதுக.

.......................................................................................................

5. ரோமானிய ஆட்சிக்கடவுளின் பெயர் யாது?

.......................................................................................................

6. சூரியனில் இருந்து வியாழன் எத்தனையாவது கிரகமாக அமைந்துள்ளது?

.......................................................................................................

7. வியாழன் என்ற கிரகம் எதனால் ஆக்கப்பட்டதாக கூறப்படுகின்றது?

.......................................................................................................

02) பின்வரும் சுருக்கக் குறியீடுகளுக்குரிய விரிவாக்கத்தினை எழுதுக.

1. வெ.நோ.பி.......................................................................................

2. தே.க.நி.........................................................................................

3. இ.கா.கூ.........................................................................................

4. க.பொ.த.........................................................................................

03) பின்வரும் தொடர் மொழிக்குரிய தனிச் சொல்லை எழுதுக?

1. கூடிய வெப்ப காலத்தில் நீரைப்போல தோன்றும் போலித் தோற்றம்

.......................................................................................................

2. காடும் காடு சார்ந்த இடமும்

.......................................................................................................

3. நாற்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா

.......................................................................................................

4.நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்பவற்றை குறிப்பது

.......................................................................................................

04) சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.

1. கல்வி/விளங்கினார்/பாஸ்டர்/கேள்விகளில்/சிறந்தது

........................................................................................................................................

2. சந்தைக்/சுத்தமாக/அதன்/கட்டங்களையும் சுற்றாடலையும்/ வைத்திருக்க வேண்டும்

........................................................................................................................................

05) பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக

1. ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்குமா

........................................................................................................................................

2.அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்

........................................................................................................................................

3.ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது

........................................................................................................................................

06) பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தினை எழுதுக.

1.முகத்தில் கரி பூசுதல்..........................................................................................................

2.முகங்கொடுத்தல்.................................................................................................................

3.தலை காட்டுதல்...................................................................................................................

07) சரியான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தை நிரப்புக

1.எனது வெள்ளைச் சட்டைக்கு ........................................................(நீளம், நீலம்) போட்டேன்

2.(குறி, கரி) ........................................................................ காட்டில் வாழும் மிருகமாகும்

08) வேறுபட்ட சொல்லின் கீழ் கோடிடுக

1.முனிவு, அடக்கம், சினம், கோபம்

2.வாய்மை, சத்தியம், பொய்மை, மெய்மை

3.அடவி, கானகம், காடு, கானம்

09) பின்வரும் பாடலில் விடுபட்ட பகுதிகளை பூரணப்படுத்துக

மா அரைத்துச் ................................மனம் நிறைந்த செல்வன்

மறந்தும் ஒரு ........................... மற்றவர்க்குச் .......................

கண்ணை.................................................................................

.........................................................................தொட்டாரார்

தொட்டாரைச் .......................................................... தோள்

............................................................... போட்டு வைப்போம்

10) பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

1.சருங்கல.............................................................................................................................

2.ரூபவாஹினிய ......................................................................................................................

11) பின்வரும் சிங்கள வசனத்தின் தமிழ் கருத்தை எழுதுக.

மம கீல என்னங்

........................................................................................................................................

12) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.

1.Window: ..........................................................................................................

2.Lips: ................................................................................................................

13) பின்வரும் வாக்கியத்தினை ஆங்கிலத்தில் எழுதுக

1.நான் நாளை வருவேன்

..............................................................................................................................

14) தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் சாதனங்களில் வானொலியும் முக்கிய இடம் பெறுகின்றது. ஏழைகளின் நண்பன் எனப்படும் வானொலியின் பயன்கள் என்னும் தலைப்பில் சரியான எழுவாய் பயனிலைகளுடன் கூடிய மூன்று வாக்கியங்களை எழுதுக?

15) பின்வரும் கணிதப் பிரசின்னங்களைத் தீர்க்குக.

1.பின்வரும் எண்குறியின் எண் பெயரினை எழுதுக

42506..............................................................................................................


2.முன் பின் உரோமன் எண்களை எழுதுக

.......................XIV............................

3. 12087 என்பதை இடப் பெறுமானத்திற்கேற்ப விபரித்து எழுதுக.

..............................................................................................................................

4.



1.உருவின் ஓரங்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

2. மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?

..............................................................


5. $1l$ பாலின் விலை ரூபா 48.00 எனின் $750ml$ பாலின் விலை யாது?

..............................................................................................................................

6. 22:30h என்பதை சாதாரண நேரத்தில் எழுதுக?

..............................................................................................................................

7.




சுற்றளவு யாது?

8.தை மாதத்தில் உள்ள புதன்கிழமைகளின் திகதிகளின் கூடிய பட்சப் பெறுமானம் யாது?


..............................................................................................................................


9. $4l$ $500ml$ நீரினை $750ml$ கொள்ளவுடைய எத்தனை போத்தல்களில் ஊற்ற முடியும்.

10. 10m நீளமான றிபனை 10 பேருக்கு சம அளவாகக் கொடுக்க வேண்டுமாயின் எத்தனை தடவைகள் வெட்ட வேண்டும்......................................................................................................

16) பின்வரும் வரலாற்றுப் புகழ் மிக்கவையின் பெயரினை எழுதுக?









.............................. .............................. .............................. ..............................

17) மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து கோடிடுக.

1.நீர் வெறுப்பு நோயை பரப்பாத பிராணியாக கருதப்படுவது
1. நாய் 2. நரி 3. பசு 4. பூனை

2.தாவர வேரில் இருந்து புதிய தாவரத்தை தோற்றுவிப்பது
1. பாலை 2. மா 3. பலா 4. அரசு

3. தேசிய இலட்சினை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
1) 1948 2) 1972 3) 1980 4) 1945


4. ருவன் வெலிசாய அமைந்துள்ள மாவட்டம்
1.கண்டி 2. வவுனியா 3. பொலநறுவை 4. அநுராதபுரம்

5. போதை பொருள் பாவனை தொடர்பாக அறிவிக்க வேண்டிய தொலைபேசி எண்
1) 1948 2) 1987 3) 1955 4) 1929

6. கஞ்சக்கருவி வகையில் அடங்குவது
1. பறை 2. தம்புரா 3. சேமக்கலம் 4. கொம்பு

7. நத்தையின் முட்டையின் நிறம்
1. மஞ்சள் 2. வெள்ளை 3.கபிலம் 4. சிவப்பு

8.விற்றமின் B குறைபாட்டினால் ஏற்படக்கூடிய நோய்
1. மாலைக்கண் 2. ஸ்கேவி 3. பெரிபெரி 4. மரஸ்மஸ்

9.  உருவில் உள்ள இலைக்குரிய தாவரம்
1. வல்லாரை 2. தாமரை 3. கொவ்வை 4. பூசணி

10.இலங்கைக்கு கிழக்கே உள்ள நாடுகளில் ஒன்றாக அமைவது
1. ஆபிரிக்கநாடு 2. இந்தியா 3. தாய்லாந்து 4. அவுஸ்திரேலியா

11.இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
1. தலவாக்கலை 2. அகலவத்தை 3. லுணுவில 4. மகாஇலுப்பம

12. பின்வரும் வித்துக்களில் உணவாக பயன்படுத்த முடியாத வித்து
1. பயறு 2. வேம்பு 3. பலா 4. உழுந்து

13.  உருவில் உள்ள பெரியவர்
1.சேர்.பொன்.இராமநாதன் 2. வண எஸ். மகிந்த
3. ஆனந்த குமாரசுவாமி 4. சித்திலெப்பை

14. ஊவா மாகாணத்தில் கடலுடன் கலக்கும் ஆறு
1. தெதுறுஓயா 2. கல்ஓயா 3. மாணிக்க கங்கை 4. வளவகங்கை

15. கடிகாரப் பறவைகள் எனப்படுபவை
1. கிளி, மைனா 2. சேவல், காகம் 3. புறா, மைனா 4. சேவல், மரங்கொத்தி

16.சப்ரகமுவ மாகாணத்தில் அடங்கும் மாவட்டம்
1.கேகாலை 2. குருநகல் 3. பதுளை 4. நுவரெலியா

17. உலகிலுள்ள மொத்த நீர்ப்பரப்பில் நன்னீரின் அளவு
1. 100% 2. 5% 3. 1% 4. 90%

18. மஞ்சட்காமாலை நோயினால் பாதிக்கப்படும் உடலின் பகுதி
1.நுரையீரல் 2. ஈரல் 3. இதயம் 4. மூளை

19. மின்னேரியா குளத்தை கட்டிய மன்னன்
1.தாதுசேனன் 2. வசபன் 3. பண்டுகாபயன் 4. மகாசேனன்

20.பின்வரும் நோய்களில் தொற்றாத நோயாக அமைவது
1. நீரிழிவு 2. காய்ச்சல் 3. அம்மைநோய் 4. தடிமன்

◆◆◆

இவ் வினாக்களுக்குரிய விடைகள்
நாளை வெள்ளிக்கிழமை
(22.07.2016)
வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

**தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்**

★யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)
★அ.நிமலகாந்தன் (யா/இனுவில் மத்திய கல்லூரி)
★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)
★G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)
★K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)
★M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)